

# தமிழரசு

16-11-1988 ரூ. 1


ஆசிய ஜோதி
நேரு பெருமகனார்
நூற்றாண்டு விழா







NATIONAL REDEDICATION DAY
MADRAS







"அவர் பளிங்குபோல் பரிசுத்தமானவர்; ஐயப்பாட்டிற்கு எள்ளளவும் இடமில்லாத சத்தியவான்; வீரர்களுக்கு இலக்கணமானவர். அவருடைய பொறுப்பில் இந்த தேசம் பத்திரமாய் இருக்கும்".

—மகாத்மா காந்தி

பண்டித நேரு
நூற்றாண்டு விழாச்
சிறப்பிதழ்.


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019

விபவ - கார்த்திகை 1

**மலர் : 19** **இதழ் : 10**

**16-11-1988**



# சமத்துவத்தின் திருநாமம்



சௌந்தரா கைலாசம்

சட்டத்தைப் பேயாக்கி சதிராட விட்டிங்கே
கொட்டம் அடித்த கொடுங்கோலன் வெள்ளையனை
ஓட விரட்டிமிக உன்னதங்கள் கொண்டுதந்த
ஈடறியா மாமனிதர் ஏற்றமிகு காந்திமகான்
அறவிளக்கைக் கையேந்தி அஹிம்சைத் தனிவழியில்
உறுதியுடன் முன்னேறி உயர்வுகளைத் தேடியவர்!
அனைவர்க்கும் பிறப்புரிமை ஆகுமொரு சுதந்திரத்தை
முனைப்போடு பெற்றளித்த மூலவரே மகாத்மா!

பெற்ற சுதந்திரத்தைப் பேணிநிதம் காப்பாற்றி
வெற்றிபல குவித்த வீரமகன் நம்நேரு!
உற்சவரைப் போலே ஓடிப் பணியாற்றி
உச்சிக்கு நம்நாட்டை உயர்த்தியவர் நம்நேரு!
மண்ணிற் பழமைக்கு மகாத்மா முடிவாவார்!
எண்ணில் புதுமைகளுக்(கு) எம்நேரு முதலாவார்!
பண்புயரும் காந்தியண்ணல் பழமையிலே ஒருபுதுமை!
நண்ணியுள புதுமைகளில் நம்நேரு ஓர்புரட்சி!

நன்மை ஒளிக்கதிர்கள் நாளும் விரித்திருக்கும்
சன்மார்க்க வான்வெளியில் தண்ணிலவு காந்திமகான்!
அமைதிமலர்த் தாரகைகள் அனுதினமும் பூத்துவரும்
சமதர்ம வான்பொழிலில் ஜவஹர்லால் விடிவெள்ளி!
இத்தரையில் வாழ்ந்திருந்த எல்லார்க்கும் அன்புசெய்த
புத்தர் பெருமானின் புதுவடிவம் காந்திமகான்!
மேதினியில் பொதுஉடைமை மிளிரவைத்த நல்மார்க்சின்
கோதறியா மறுவடிவம் கொள்கையொளிர் நேருபிரான்!

சமயம்தான் காந்திக்குச் சமதர்மக் கோட்பாடு!
சமதர்மம் ஒன்றேதான் சமயம்நம் நேருவிற்கு!

கனலான போருக்கு காந்தி முறிவாவார்!
இனிதான வாழ்வுக்கு எழில்நேரு மருந்தாவார்!
உள்ளமைதி பூத்துவிட்டால் உலகமைதி வளருமென
வெள்ளைமனக் காந்தி விரிவாய் எடுத்துரைத்தார்!
உலகமைதி தோன்றிவிட்டால் உள்ளமைதி நிலவுமென
நலமுடைய நேருபல நாட்டினர்க்கும் சொல்லலுற்றார்!

நாளெல்லாம் காந்திமகான் நடந்தே அறம்வளர்த்தார்!
நீளப் பறந்தபடி நேருவளம் குவித்தார்!
கள்ளமிலாக் காந்திமகான் கருணைப் பெருவானம்!
வெள்ளைப் புறாநேரு வீரக் கருவூலம்!
விடுதலையைத் தேடியவர் வியனார்ந்த காந்திமகான்!
விடுதலையைப் பேணியவர் வெற்றிமகன் நேருபிரான்!
பிள்ளை மனம்தாங்கிப் பிறங்கியவர் காந்திமகான்!
பிள்ளைக் கனியமுதைப் பேணியவர் நேருபிரான்!

காந்திக்குச் சீடரவர்! காசினிக்குத் தலைவரவர்!
காந்திக்குத் தீபமவர்! சமத்துவத்தின் நாமமவர்!
ஆன்மிகநற் பயிர்வளர்த்த ஐயன்ராம கிருஷ்ணருக்கு
வான்புகழும் விவேகா நந்தர்வந்து வாய்த்ததுபோல்
வெள்ளைஉடை காந்திக்கு விளங்கியவர் நம்நேரு!
கொள்ளையெழில் ரோஜாவாய்க் குலவியவர் நம்நேரு!
நேருபுவி ஆளுகையில் நிகழ்ந்தவற்றை நினைந்திடுவோம்!
நேருவிற்குப் பின்னாலே நேர்வனவை நோக்கிடுவோம்!

விடுதலையின் பயன்மீண்டும் விளைந்துவரும் நாள்மட்டும்
கடிதாய் உழைத்திடுவோம்! கடவுள் அருள்புரிவார்!





# தீர்க்கதரிசி நேரு

ஜி. கருப்பையா மூப்பனார், எம்.பி.,

சுதந்திர இந்தியாவை 17 ஆண்டுகள் வழி நடத்திச் சென்றவர் பண்டித ஜவஹர்லால் நேரு. இந்தியாவின் மாபெரும் மக்கள் தலைவராய்த் திகழ்ந்தவர். இந்திய ஜனநாயகத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் பாடுபட்ட உறுதிமிக்க முற்போக்காளர். நம் தேச விடுதலை இயக்கத்தின் தீரமிக்க போர்வீரர். சுதந்திர பாரதத்தின் மாண்புகளை உலகறியச் செய்த உத்தமர்.

இந்தியாவின் விடுதலை, அதனுடைய வளர்ச்சி, ஆசியாக் கண்டத்தில் ஒரு சுதந்திரமான இந்திய அரசை நிறுவுதல் ஆகியவற்றுக்கான போராட்ட வரலாற்றில் அவரது பெயர் பிரிக்க முடியாத அளவுக்குப் பிணைக்கப்பட்டுள்ளது.

நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ள, எதிர்காலத்தை முன்நோக்க, நேரு கடந்த காலத்தை ஆராய்ந்தவர். இந்த அடிப்படையில்தான் அவர் எழுதிய 'இந்திய தரிசனம்' (Discovery of India), 'சுயசரிதம்' (Auto Biography), மற்றும் உலக வரலாற்றைப் பற்றிய கண்ணோட்டம் (The Glimpses of World History) ஆகிய நூல்கள் அமைந்திருக்கின்றன. இந்த நூல்கள் வரலாறாக மட்டுமல்ல; இலக்கியங்களாகவும் திகழ்கின்றன.

நேரு அவர்களைப் பொறுத்தவரை வரலாறு என்பது வாழ்க்கை, அனுபவம், போராட்டம் ஆகியவற்றின் கல்விக்கூடமாகவும், உலகக் கண்ணோட்டத்தின் மூலாதாரமாகவும் இருந்திருக்கிறது.

நவ இந்தியாவின் சிற்பி நேரு அவர்களே. இந்திய ஜனநாயகத்திற்கு அடித்தளமிட்டவர் மட்டுமல்ல, அதனைக் காத்து நின்றவரும் அவரே.

இந்திய மக்களின் சமூகப் பொருளாதார மாற்றங்களுக்காக அவர் எடுத்த நடவடிக்கைகள் நீண்ட தொலைநோக்கோடு மேற்கொள்ளப்பட்டவை.

''விவசாயிகளைப் புரிந்து கொண்டால் இந்தியாவைப் புரிந்து கொள்ள முடியும்'' என்பது முதுமொழி. ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு விவசாயியின் ஆன்மாவின் மூலம் இந்த தேசத்தைப் புரிந்து கொள்ள விரும்பினார்.

விடுதலை பெற்ற இந்தியா முன்னேற வேண்டுமாயின் திட்டமிட்ட பொருளாதாரத்தின் மூலமே முடியும் என்பதை நன்கு உணர்ந்தே ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கினார். அவைகளே இந்திய நாட்டின் பொருளாதார விடுதலைக்கான வாயில்களாக அமைந்தன. ஐந்தாண்டுத் திட்டங்களில் விவசாயத்திற்கு முன்னுரிமை தரப்பட்டது. ஜமன்தாரிமுறை ஒழிப்பு, இந்திய விவசாயிகளுக்கு ஒரு விடுதலை உணர்வைத் தந்தது. விவசாயத் துறையில் நேரு அவர்கள் காட்டிய கவனத்தின் விளைவுதான், இந்தியா இன்றைய தினம் உணவு உற்பத்தியில் தன்னிறைவை எட்டியிருக்கிற நல்ல செய்தியாகும்.

தேசியப் பொருளாதாரத்தை, இந்தியாவைத் தொழில் மயமாக்கும் கொள்கையின் அடிப்படையில் உருவாக்க அடித்தளமிட்டவரும் நேரு அவர்கள்தான்!

நேருவைப் பொறுத்தவரை அவர்காலத்தில் தொடங்கப்பெற்ற பிரம்மாண்டமான அணைக்கட்டுகள், தொழிற்சாலைகள், மின்நிலையங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள் ஆகியவைகளே 'இந்தியாவின் கோயில்களாகும்'. அவரது தொழில் மயமாக்கல் கொள்கையின், பொதுத்துறை வளர்ச்சிக்குக் கால்கோள் இட்டதன் விளைவால் இன்றைய தினம் உலக அரங்கில் - தொழில் துறையில் - முன்னேறிய நாடுகளின் வரிசையில், இந்தியா 10-வது இடத்தை வகிக்கிறது. இது நேருவின் திட்டமிடல் கொள்கைக்கு, அவரது தொலைநோக்குக்கு, கிடைத்த வெற்றியாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களின், மலைவாழ்மக்களின் மற்றும் இந்திய சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினரின் சமூக நீதிக்காக உறுதியுடன் போராடியவர் நேரு அவர்கள்தான். அவர்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களை உருவாக்கியவர்; நேரு அவர்கள் எனறைக்குமே வறுமைக்குக் கவர்ச்சியூட்டியவர் இல்லை. வறுமை ஒழிக்கப்பட வேண்டியதற்கான திட்டங்களை உருவாக்கியவர். அதை ஒரு தேசிய பிரச்சனையாகக் கருதி அதை அகற்ற திட்டங்கள் பல தீட்டிய சமூகச் சிந்தனையாளர்.

இந்தியாவில் வாழ்கின்ற சிறுபான்மையோரின் நலன்களில், அவர்களின் உரிமையைப் பாதுகாப்பதில் இந்திய உணர்வோடு அவர்களை இணைத்ததில் நேரு அவர்களுக்குப்

பெரும் பங்குண்டு. மதச் சார்பற்ற தன்மையைக் கட்டிக்காத்த பெருமகன் அவர்.

இந்தி பேசாத மக்களின் அச்சத்தைப் போக்குகின்ற வகையில், அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ''1965-ஆம் ஆண்டுக்குப் பிறகும் இந்தியோடு ஆங்கிலமும் இணைப்பு மொழியாக இருக்கும். இந்நிலை இந்தி பேசாத மக்கள் விரும்புகின்றவரை நீடிக்கும்'' என்று அவர் தந்த வாக்குறுதி மக்களின் உணர்வுகளை மதிக்கக்கூடிய மிகச் சிறந்த பண்பாளர் நேரு என்பதைக் காட்டுகிறது.

வரலாற்றுச் சிறப்புமிகு அவரது ஆவடி மாநாட்டின் தலைமை உரையை நினைத்துப்பார்க்கிறேன். ''இந்தியாவில் ஒரு பொதுநல அரசை அமைப்பதும், சோஷலிச பொருளாதாரத்தைக் கட்டுவதுமே நமது தேசிய நோக்கமாகும்'' (our national aim is a Welfare State and a Socialist economy) என்று குறிப்பிட்டார். அந்த நோக்கம் நிறைவேற்றத்தான் அவரது வழியில் அன்னை இந்திராகாந்தி அரும்பணியாற்றினார். அவர்கள் இருவரும் காட்டிய வழியில் பிரதமர் ராஜீவ் காந்தி முனைப்போடு செயல்படுகிறார்.

நேருவின் கொள்கைகளில், திட்டங்களில், பலவற்றை நிறைவேற்றி வெற்றிகண்ட மாநிலம் தமிழ் மாநிலமாகும். அவர் காலத்தில் இந்தியாவிற்கு வழிகாட்டிய மாநிலமாக விளங்கியது. அதற்குக் காரணம் உத்தமத் தலைவர் காமராசர்தான். தமிழ்நாடு முன்னோடியாக விளங்கியதற்கும், அதன் காரணகர்த்தா முதல்வர் காமராசரின் தன்னலமற்ற சேவைக்கும், அங்கீகாரம் அளிக்கின்ற வகையில்தான் 1961ஆம் ஆண்டு அக்டோபர் 9ஆம் நாள் தமிழகத்தின் தலைநகரில் பெருந்தலைவர் காமராசரின் சிலையை நேரு அவர்கள் திறந்துவைத்த நிகழ்ச்சியாகும். அந்நிகழ்ச்சி என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

முன்னோடியாக விளங்கிய மாநிலம், மீண்டும் முன்னோடியாக விளங்க வேண்டாமா?

தமிழ் மக்கள் சிந்திக்கவேண்டும் என்று அன்போடும் உரிமையோடும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நேரு அவர்களின் சர்வதேசக் கண்ணோட்டம் இந்திய தேசியத்தின் அடிப்படையில் எழுந்ததுதான்.

உலக சமாதானத்திற்கும், சர்வதேசப் பாதுகாப்பிற்கும் நேரு ஆற்றிய பணியால் இந்தியா உலக அரங்கில் உயர்ந்து நிற்கிறது. 'பஞ்சசீலம்' என்ற சமாதான சகவாழ்வுக் கொள்கையை உருவாக்கிடக் காரணமாக இருந்தவர். ஆசிய நாடுகளின் ஒற்றுமைக்காக நேரு அவர்களின் முழு முயற்சியால் 1947இல் டெல்லியில் முதல் ஆசிய உறவுகளின் மாநாடு (The First Asian Relations Conference) நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநாட்டின் 40வது ஆண்டு விழாவை ஆசிய நாடுகள் கொண்டாடிய கால கட்டத்தில்தான் இந்திய-இலங்கை உடன்படிக்கை உருவாயிற்று. ஐக்கிய நாடுகள் அவையும், அணிசேரா இயக்கமும், சோஷலிச நாடுகளும் இவ்வுடன்படிக்கையை வரவேற்றன. அண்டைய நாடுகளுடன் நல்லுறவு கொள்ளவேண்டும் என்கிற நேருவின் கொள்கைக்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல அமைந்தது இவ்வுடன்படிக்கையாகும்.

இந்தியாவின் அயல்துறைக் கொள்கையான அணிசேராக் கொள்கையை மிக நீண்ட தொலைநோக்கோடு உருவாக்கியவர் நேரு அவர்களே! கொள்கையாக அறிவிக்கப்பட்ட 'அணிசேராமை' இன்று இயக்கமாக, 101 நாடுகளை இணைத்த பேரியக்கமாக உலக அரங்கில் மிகப்பெரிய சக்தியாக உருவெடுத்திருப்பது நேருவின் தொலைநோக்கு எவ்வளவு சரியானது என்பதைக் காட்டுகிறது.



சென்னையில் நேரு திறந்துவைத்த பெருந் தலைவர் காமராசர் சிலை

அன்னை இந்திராகாந்தி அவர்கள் அணிசேரா இயக்கத்தை 'மிகப் பெரிய சமாதான இயக்கம்' என்று குறிப்பிட்டார்கள். 'சுதந்திரமும் சமாதானமும் பிரிக்க முடியாதது' (Freedom and peace are Indivisible) என்று நேரு குறிப்பிட்டார். பொதுவான படைபலக் குறைப்பின் அவசியத்தை வலியுறுத்தியது மட்டுமல்ல, அதற்காகப் பாடுபட்டவர் நேரு. நேரு காட்டிய ஒளியில்தான் படைபலக் குறைப்புக்கான சர்வதேச மாநாட்டைக் கூட்டிட அன்னை இந்திராகாந்தி முயற்சி எடுத்தார்கள். தலைவர் ராஜீவ் காந்தியின் காலத்தில் அது நடைபெற்றது.

நேரு அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிகு பணி, உலக அரங்கிலுள்ள எல்லா முற்போக்குச் சக்திகளையும் இணைத்து, உலக முற்போக்கு அணியை உருவாக்கவேண்டும் என்பதுதான். இந்தச் சிந்தனையோடுதான் காங்கிரஸ் பேரியக்கத்தின் பிரதிநிதியாக 1927இல் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற 'ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் தேசிய விடுதலைக்கான மாநாட்டில் (League against imperialism and for National Independence) கலந்து கொண்டு முனைப்போடு செயல்பட்டார் நேரு.

''இந்தியா, பாசிசத்தையும், ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கும் உலக முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து போராடுகிறது'' என்று தனது வாழ்க்கைச் சரிதத்தில் எழுதினார்.

இந்தச் சிந்தனைகளின் விளைவுதான் இந்திய-சோவியத் நட்புறவு. இதற்கு வித்திட்டவரும் நேருவே.

அணு ஆயுதங்கள் அற்ற, வன்முறையற்ற ஒரு உலகை உருவாக்குவதற்கான 'டில்லி பிரகடனம்' 1986-நவம்பர் 27-ஆம் நாள் உருவாயிற்று. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு கோர்பசேவ் அவர்களும், பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களும் கையொப்பமிட்ட அப்பிரகடனம் அண்ணல் காந்தியின், பண்டித நேருவின், மாமேதை லெனினின் சிந்தனைகள் இணைந்தன என்பதற்குச் சரியான எடுத்துக் காட்டாகும்.

இந்திய மக்களின்பால், இந்திய நாட்டின்பால் நேருவுக்கு இருந்த ஈடுபாட்டை 'தனது மறைவுக்குப்பின் தனது உடலின் சாம்பலை, இந்திய மண்ணோடு கரைத்துவிடவேண்டும்' என்ற அவரது உயில், காட்டுகிறது. அவரின் தேசபக்தி நமக்கு வழிகாட்டுதலாகும்.


# நேருவின் சகாப்தம்



**டி. எஸ். அவினாசிலிங்கம்**

**தலைவர், இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயம்.**

**நா**ன் 1934ஆம் ஆண்டு மத்திய சட்டமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1946ஆம் ஆண்டு வரை அதன் உறுப்பினராகப் பணியாற்றி வந்தேன். 1946ஆம் ஆண்டில் நான் சென்னை மாநில சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கல்வி அமைச்சராகவும் பணியாற்றினேன். 1951ஆம் ஆண்டில் நான் புதுடெல்லியில் நாடாளுமன்ற உறுப்பினரானேன். பின்னர் 1964-ஆம் ஆண்டு வரை மாநிலங்களவை உறுப்பினராக இருந்தேன். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் பாரத நாட்டின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேருவைப்பற்றித் தெரிந்து கொள்ளவும், அவருடன் பழகவும் வாய்ப்பைப் பெற்றேன்.



பண்டித நேருவுடன் வல்லபாய் பட்டேல்

நேருவும், சர்தார் வல்லபாய் பட்டேலும் சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் ஆற்றல் மிக்க இரு மனிதர்கள் ஆவர். சர்தார் உயிருடன் இருக்கும்வரை, நேரு அவருடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டியதாயிற்று. இருவரும் நிறைந்த மன உறுதியையும், பெருக்கத்தையும் பெற்றிருந்தனர்.

அதே நேரத்தில், எதிர்கால நிலவரத்தைக் கணிப்பதிலும், மனப்பாங்கிலும் வேறுபட்டிருந்தனர். நேருவின் நிபந்தனையற்ற மதச்சார்பின்மையைக் கண்டு மகிழ்ச்சி அடையவோ, சமூகச் சீர்திருத்தங்களுக்காக அவர் கைக்கொண்ட தீவிரப் போக்கை ஆதரிக்கவோ சர்தாரால் இயலவில்லை. சர்தார் இரும்பு மனிதர்; விரைந்து செயலாற்றுபவர்; நேருவோ மென்மையானவர்; விட்டுக்கொடுக்கும் தன்மை உடையவர்.

இந்தியாவை ஒருங்கிணைக்க சர்தார் இறுதி நடவடிக்கை எடுத்தபோது—அதாவது ஹைதராபாத்துக்கு எதிராக போலீஸ் நடவடிக்கை மேற்கொண்டபோது, அமைச்சரவையிலிருந்த பலருக்கு நடவடிக்கை முடியும்வரை அது பற்றித் தெரியாது. நடவடிக்கை தொடங்கிய பிறகுதான், நேருவுக்கே தெரிவிக்கப்பட்டது. பல விஷயங்களில் நேருவுக்கும் சர்தாருக்கும் ஒருமித்த கருத்து நிலவவில்லை. அரசு நிர்வாகம் சுமுகமாக நடைபெறப் பலமுறை மகாத்மா காந்தியின் உதவியை நாடவேண்டியதாயிற்று. ஆனால், மவுண்ட்பேட்டன் பிரபு கூறியதுபோல், இந்திய சுதந்திரத்தின் பலன்களை ஒன்று சேர்க்க இருவருமே தேவைப்பட்டனர் என்றே குறிப்பிடலாம்.

1950ஆம் ஆண்டில் சர்தார் மறைந்த பிறகு, காங்கிரஸ் இயக்கத்திலும் சரி, நாடாளுமன்றத்திலும் சரி, அவருக்கு நிகரான பெருமையும், வல்லமையும் பெற்றவர்களோ, வழிநடப்பவர்களைக் கொண்டவர்களோ இல்லை. அதனால் நேரு ஒப்பற்ற தலைமை நிலையை எய்தினார். நேருவிற்கு மற்றொரு அனுகூலமும் இருந்தது. அதாவது, அப்போது, மாநிலங்களை ஆண்டுவந்த அனைத்து அரசுகளும் காங்கிரஸ் அரசுகளாக இருந்தன. ஆகவே, அவர் மத்திய அரசை நிர்வகித்ததோடல்லாமல், அனைத்து மாநிலங்களிலும் அவரது வாக்கு, சட்டமாக இருந்தது. ஆனால், அவர் மிகுந்த அதிகாரத்தைப் பெற்றிருந்தபோதிலும், அவர் சமநிலையுடனும், மக்கள் போற்றும் வகையில் அடக்கத்துடனும் செயல்பட்டதால்தான் மங்காப் புகழைப் பெற்றார் என்றே சொல்ல வேண்டும்.

## திட்டக் குழுவை அமைத்தல்

ஜவஹர்லால் நேரு திட்டமிட்ட வளர்ச்சியில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். அதற்கான தூண்டுதலை அவர் ரஷ்யாவிடமிருந்து பெற்றார். எனவே, முதல் பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் முதல் நடவடிக்கை இந்தியாவிற்குத் தேசியத் திட்டக்குழு அமைத்ததே ஆகும்.

அத்திட்டக் குழுவிற்குப் பிரதமர் தலைவர் ஆனார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அரசுக்கொள்கையின் நெறிக் கோட்பாடுகளின் அடிப்படை நோக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ''மாநில அரசு, நீதி, சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவை அடங்கிய சமூக ஒழுங்கைப் பயனுள்ள வகையில் பாதுகாப்பதன் மூலம், மக்கள் நலனை மேம்படுத்த முயலுவதுடன், மக்களுக்கு அறிவுறுத்தவும் வேண்டும்'' என்பது அடங்கும். மேலும் அரசு குறிப்பாக,

அ) நாட்டு மக்களுக்கு-ஆடவர், பெண்டிர் அனைவருக்கும் சமநிலையில் வாழ்க்கை வசதிகளைப் பெறும் உரிமை கிடைக்கவும்,

ஆ) சமுதாயத்தின் வளவாயில்களின் உரிமையும், பொறுப்பும், பொதுமக்களின் நலனுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் பகிர்ந்தளிக்கப்படவும்,

இ) செயலிலுள்ள பொருளாதார முறை சொத்து ஓரிடத்திலேயே குவிந்து கிடக்கக் காரணமாகாத வகையிலும், உற்பத்தி வழிகள் பொதுமக்களைப் பாதிக்காத வகையிலும் இருக்கவும்,

நெறிமுறைக் கோட்பாடுகளை விதிக்கலாம்.

'திட்டமிடல்' என்பதில் மேம்பட்ட வேளாண்மை, புதிய தொழில்கள் தொடங்குதல், கல்வி வசதிகள் விரிவாக்கம், வளர்ச்சிக்குத் தேவைப்படும் பொறுப்புகளை ஏற்று நடத்தத் தகுதி வாய்ந்த நிருவாக அமைப்பை மேம்படுத்தல், சமூக நீதியை உறுதிப்படுத்தும் வரிவிதிப்பு அமைப்பை வகுத்தல், நிலச் சீர்திருத்தம், சமூக ஏறறத் தாழ்வுகளை அகற்றுதல், மகளிர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பழங்குடிகள் ஆகியோரின் முன்னேற்றத்திற்கான தனி நடவடிக்கைகள், நாடெங்கிலும் கிராமங்களில் பெருமளவில் காணப்படும் வறுமையை ஒழித்தல் போன்ற பொருளாதார அம்சங்கள், தேசிய வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி அடங்குகிறது.

**சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்**

எனவே, திட்டமிட்ட வளர்ச்சியின் தொடர் பயனாக, கிராம மக்களின் பொருளாதார, சமூக, கல்வி நிலையை உயர்த்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட சமுதாய வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட வேண்டிய அவசியத் தேவை ஏற்பட்டது. ஆகவே, பெரிய அளவிலான ஊரக வளர்ச்சித் திட்டத்தை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. சுமார் ஏழு இலட்சத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் முப்பது கோடிக்கும் மேலான மக்களை முன்னேற்றுவதற்கான வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவது என்பது, அரிய பெரும்பணியாக இருந்தது. பெருமளவில் பணமும், உழைப்பும் தேவைப்பட்டன. அதிர்ஷ்டவசமாக டாக்டர் டக்ளஸ் என்ஸ்மிங்கர் தலைமையிலான போர்டு பவுண்டேஷன் பெரிய அளவில் உதவ முன்வந்ததன் விளைவாக, சமுதாய வளர்ச்சித் திட்டம் . உருவாக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது.

திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு. வி.டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களும், சமுதாய வளர்ச்சி இணை அமைச்சர் திரு. எஸ்.கே. டே அவர்களும் புதிதாகத் துவக்கப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் உயிர்நாடிகளாக விளங்கினர். திட்டத்தை நிறைவேற்றுவதில் பெரும்பங்கு வகித்தனர். முதலாமவர், பரோடாவில் ஊரக வளர்ச்சிக்காகப் போற்றத்தக்க பணியாற்றியவர்; 1952ஆம் ஆண்டில் உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் குழுத் தலைவராக இருந்தபோது, ஊரக வளர்ச்சிக்கான பயனுள்ள கருத்துரைகளை வழங்கியவர்;

ஊரக வாழ்க்கையின் எல்லா அம்சங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதை உணவுப் பொருள் உற்பத்திப் பெருக்க விசாரணைக் குழு அறிந்து கொண்டதோடு, குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்து தனிக் கவனம் செலுத்தும்படி கோரப்பட்டபோது, 'அவற்றிற்கான திட்டங்கள் பெரிய அளவிலான நோக்கங்களை எய்துவதன் ஒரு பகுதியாகவும், அவற்றை ஒருங்கிணைக்கக்கூடியவையாகவும் இருக்கவேண்டும் என்றும் தெரிவித்தது.

இக்குழுவின் பரிந்துரைகள் இந்தியாவில், ஊரக வளர்ச்சிக்கான ஊரக விரிவாக்க அணுகுமுறையை உருவாக்குவதில் பெரிதும் உதவின. இந்தியாவில் சமுதாய முன்னேற்றத் திட்டத்திற்கு முக்கிய அம்சமாக விளங்குவது ஊரக ஒருங்கிணைப்பு விரிவாக்கப்பணியே என்பதும், விரிவாக்கக் கல்வி அமைப்புகள் மூலம் விஞ்ஞான அறிவும், தொழில் நுணுக்க முறைகளும் மக்களைச் சென்றடையவேண்டும் என்பதும் உணரப்பட்டன.

இப்புதிய அணுகுமுறையை முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் ஏற்றுக்கொண்டது. கிராமமக்களின் சமூக, பொருளாதார வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவதையே முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோளாகக்கருதப்பட்டது. சமுதாய வளர்ச்சி மூலமும், ஊரக விரிவாக்கக்கல்வி அமைப்புகள் மூலமும் அத்தகு நிலை அடையப்படவேண்டும் என்பதே முதலாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் அணுகுமுறையாகும்

**அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி**


நேருவின் காலத்தில் இந்தியாவில் அறிவியல், தொழில்நுட்ப நிறுவனங்கள் பெருமளவில் வளர்ச்சி பெற்றன. நாடு முன்னேற, வேளாண்மை உற்பத்தியும், தொழில் உற்பத்தியும் பெருகிட, தகவல் தொடர்பு, போக்குவரத்து வசதிகள் மேம்பட, மக்களுக்குப் பெருமளவில் வேலை வாய்ப்பு வசதிகளை அளிக்க, நோய்த் தடுப்பு, நோய்ச் சிகிச்சை ஆகிய இருவகையிலும் மக்கள் நலம் காக்க, தொழில்நுட்ப ரீதியிலான புரட்சி தேவை என்பதைப் பண்டித நேரு உணர்ந்தார். ஆராய்ச்சியின் பயனாக விஞ்ஞான அறிவு பெருகுகிறது. அதன் விளைவாக வயல்களிலும், தொழிற்கூடங்களிலும் உற்பத்தி பெருகப் புதிய தொழில்நுட்ப உத்திகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. வேறு வேறு துறைகளில் பெரும் அளவில் ஆய்வுக் கூடங்களையும், நிறுவனங்களையும் அரசு நிறுவுகிறது.


இத்தகைய நோக்கங்களை நிறைவேற்ற, விஞ்ஞானிகளுக்குச் சிறந்த பணி நிலைமைகளை அளிக்கவும், கொள்கைகளை வகுப்பதில் அவர்களுடன் ஒத்துழைக்கவும், தேசிய வாழ்க்கையில் அவர்களுக்கு மதிப்பு மிக்க இடத்தை அளிக்கவும், அரசு முடிவு செய்தது.

**விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்தது மட்டுமின்றி, இயற்கையின் மீதும் அவன் செலுத்தக்கூடிய ஆதிக்கத்தையும் அதிகரித்தது.**

ஃ ஃ ஃ

**ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வையும் நாகரிகத்தையும் உள்ளவாறு பிரதிபலிக்கும் கண்ணாடி கலையாகும். இந்திய நாகரிகம் உயிராற்றல் பொங்கித் ததும்பிய காலத்தில் அது அழகுப்பொருள்களைப் படைத்தது. கலைகள் சிறந்தோங்கின. அவற்றின் எதிரொலி தொலை நாடுகளிலும் கேட்கப்பட்டது.**






**மதுரை மாவட்டம் போடியில், ரூ. 1.5 கோடி மதிப்பீட்டில், குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் அடிக்கல் நாட்டினார் (26-10-88). மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. தேவராஜ், இ.ஆ.ப., உடன் உள்ளார்.**

முதலாவது, ஐந்தாண்டுத் திட்டத்தில், தேசிய ஆய்வுக் கூடங்களையும், ஆராய்ச்சி நிலையங்களையும் ஏற்படுத்த முதற் கவனம் செலுத்தப்பட்டது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், இருக்கின்ற வசதிகள் மேம்படுத்தப்பட்டன. விரிவான அடிப்படையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக் கழகங்களிலும், ஏனைய ஆராய்ச்சி மையங்களிலும், ஆராய்ச்சி வசதிகள் விரிவுபடுத்தப்பட்டன.

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆய்வுப்பணி பின்வருவன தொடர்பாக மேற்கொள்ளப் பட்டது :

1) தற்போதுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களை வலுப்படுத்துவது; ஆராய்ச்சி வசதிகளைப் பரந்த அளவில் விரிவுபடுத்துவது;

2) பல்கலைக் கழகங்களில் அடிப்படை ஆராய்ச்சியை ஊக்குவிப்பது;

3) பொறியியல், தொழில்நுட்ப இயல் துறைகளில் ஆராய்ச்சியை ஊக்குவிப்பது;

4) ஆராய்ச்சிப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது; ஆராய்ச்சிக் கல்வி ஏற்பாடு, ஆராய்ச்சிப் படிப்பு உதவித் தொகைத் திட்டத்தை விரிவுபடுத்துவது;

5) அறிவியல், தொழில் சாதனங்களை உருவாக்குவது, மேம்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொள்வது;

6) தேசிய ஆய்வுக்கூடங்கள், பல்கலைக் கழகங்கள், தொழில் நுட்ப இயல் நிறுவனங்கள், ஆராய்ச்சிச் சங்கங்களின் ஆய்வுக் கூடங்கள், அரசுத்துறைகளின் ஆராய்ச்சிப் பிரிவுகள் ஆகியவை மேற்கொள்ளும் ஆராய்ச்சிப் பணிகளை ஒருங்கிணைப்பது;

7) ஆராய்ச்சியின் முடிவுகளை முன்னோடிப் பயிர்ப்பாதுகாப்புத் திட்டம், முழு அளவிலான களப் பரிசோதனைகள் முதலானவை மூலம் மெய்ப்பித்து, அவற்றைப் பயன்படுத்துவது.

முதலிரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் மேற்கொண்ட முயற்சியின் பயனாக அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட விரிவான தொடர்பமைப்பு ஏற்பாடு உருப்பெற்று, பல்வேறு மையங்களில் தனி ஆராய்ச்சி, செயல்முறை ஆராய்ச்சி, குறிப்பிட்ட துறைகளில் ஆராய்ச்சி ஆகிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.


**அட்டையில்......**

**சென்னை விஜயத்தின்போது தொழிற்சாலை ஒன்றின் ஆய்வு மையத்திற்கு அடிக்கல் நாட்டியது-ஆளுநர் மாளிகையில் மரக்கன்று நட்டது-சிறுமியர் கூட்டத்தில் மகிழ்வுடன் பங்கேற்றது போன்ற நிகழ்ச்சிகளில் பண்டித நேரு கலந்து கொண்ட படங்கள் முன்-பின் அட்டையில் இடம் பெற்றுள்ளன. இப்படங்களில் பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம், அந்நாள் தமிழகத் தொழில் அமைச்சர் திரு ஆர். வி. ஆகியோரைக் காணலாம்.**

★ நாம் சுதந்திரம் பெற்றதோடு ஒரு யாத்திரை முடிந்துவிட்டது. ஆனால் இன்னொரு யாத்திரை தொடங்கிவிட்டது. வறுமையை ஒழிப்பதற்காகவும், நல்வாழ்வுக்குகந்த சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்காகவும் துவங்கியுள்ள யாத்திரை இது.

★ வரலாறு என்பது ஒரு நாட்டின் சரித்திரமல்ல. மக்கள் சமுதாயம் முழுமைக்குமான பொது நிகழ்ச்சியாக இன்றைய வரலாறு மாறியிருக்கிறது. ஏன் எனில் இன்றைய உலகம் ஒரு பொது நியதிக்கு உட்பட்டே இயங்குகிறது.

**—ஜவஹர்லால் நேரு**





# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி
உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான
சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை
வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*



# நேருவின் வாழ்க்கைக் குறிப்புகள்

**1889 :** நவம்பர்த் திங்கள், 14ஆம் நாள், மோதிலால் நேருவுக்கும் சொரூப ராணிக்கும் அலகாபாத்தில் பிறந்தார்.

**1905 :** மே திங்களில் இங்கிலாந்தில் ஹாரோ பள்ளியில் சேர்ந்தார்.

**1910 :** பட்டப் படிப்பை முடித்து, சட்டப் படிப்பைத் தொடர்ந்தார்.

**1912 :** வழக்கறிஞராக இந்தியா திரும்பினார். பங்கிபூர் காங்கிரசில் பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

**1915 :** காங்கிரசின் சார்பில் முதல் முறையாக மேடை ஏறிப் பேசினார்.

**1916 :** பிப்ரவரி 8-ல் கமலாவை மணந்தார். டிசம்பரில் காந்தியடிகளுடன் முதல் சந்திப்பு.

**1919 :** மோதிலாலுடன் சேர்ந்து 'இண்டிபெண்டன்ட்' என்ற செய்தி இதழைத் தொடங்கினார்.

**1921 :** கிசான் கிளர்ச்சியில் ஈடுபட்டார். வேல்ஸ் இளவரசர் வருகையின்போது கடையடைப்பு நடத்தத் திட்டமிட்டதற்காக, டிசம்பர் 6-ல் கைது செய்யப்பெற்று, ஆறு மாதச் சிறைத்தண்டனை அடைந்தார்.

**1925 :** அலகாபாத் நகராட்சித் தலைவரானார். பின்னர் அப்பதவியைத் துறந்தார்.

**1927 :** நவம்பரில், மாஸ்கோவில் நடைபெற்ற ருசியப் புரட்சியின் 10-ஆம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டார். 'சோவியத் ருஷ்யா' என்ற நூலை எழுதினார். டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற 42-வது காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

**1930 :** ஏப்ரல் 14-ல் உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதனால், ஆறு மாதச் சிறைத் தண்டனை பெற்றார்.

**1931 :** பிப்ரவரி 6-ல் மோதிலால் நேரு மறைவு.

**1934 :** ஜனவரி 1-ல் 'உலக வரலாறு' என்னும் நூலை எழுதி முடித்தார்.

**1935 :** பிப்ரவரி 14-ல் தன் வரலாற்றை எழுதினார். செப்டம்பர் 4-ல் மனைவி மிகவும் உடல் நலம் குன்றியதால் அவரைப் பார்ப்பதற்காக விடுதலை பெற்று ஐரோப்பா சென்றார். வெளிநாட்டிலிருக்கும் போதே காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

**1936 :** பிப்ரவரி 28-ல் கமலா சுவிட்சர்லாந்தில் காலமானார். ஜூன் 2-ல் இந்திய அரசியல் சட்டத்தின் மாதிரிப் படியை உருவாக்கினார்.

1938 : நேருவின் தாயார் சொரூபராணி மறைவு.

1939 : சுபாஷ் சந்திர போஸுக்கும் காந்தியடிகளுக்கும் இடையில் எழுந்த வேறுபாட்டைப் போக்க முயன்றார்.

1940 : 'இந்தியரைக் கேட்காமலே உலகப் போரில் இந்தியா கலந்து கொள்ளும்' என்று ஆங்கில அரசு அறிவித்ததனால் எழுந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டமைக்காக அக்டோபர் 31-ல் கைது செய்யப்பெற்று, இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பெற்றார்.

1941 : டிசம்பரில், விடுதலை பெற்றார்.

1942 : ஜனவரி 1-ல் 'நேருவே என் வாரிசு' என்று காந்தியடிகளால் புகழ் மாலை சூட்டப்பெற்றார்.

ஆகஸ்ட் 7-ல் பம்பாய் காங்கிரஸில் 'வெள்ளையனே வெளியேறு' என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியதனால், ஆகஸ்ட் 8-ல் கைதானார். நீண்ட காலம் சிறைவாசம் பெற்றார்.

1944 : ஏப்ரல் 13-ல் 'இந்தியாவின் கணடு பிடிப்பு' என்ற நூலை, சிறையிலே எழுதத் தொடங்கி, செப்டம்பரில் முடித்தார்.

1945 : ஜூலை 17-ல் முஸ்லீம் லீக் கேட்ட பாகிஸ்தான் பிரிவினையை வன்மையாகக் கண்டித்தார். பொதுத் தேர்தலில் ஈடுபட்ட காங்கிரசுக்கு முழு மூச்சுடன் தொண்டு செய்தார்.

1946 : மார்ச் திங்களில், 'இந்தியாவின் கண்டு பிடிப்பு' நூலை வெளியிட்டார். ஆகஸ்ட் 12-ல் இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு, வைஸ்ராய் நேருவிடம் கேட்க, அவர் ஒப்புக் கொண்டார்.

1947 : ஆகஸ்ட் 15-ல் இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரானார்.

1948 : ஜனவரி 30-ல் காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்.: நேரு கண்கலங்கினார். வானொலியில் உருக்கமாக உரையாற்றினார்.

ஆகஸ்ட் 20-ல் அணுசக்திக் குழுவின் முதற் கூட்டத்தைத் துவக்கினார்.

1950 : ஜனவரி 26-ல் இந்தியா குடியரசு நாடு ஆகியது. மார்ச் திங்களில், இந்தியத் திட்டக் குழுவைத் தொடங்கினார். ஜூலை 14-ல் கொரியாப் போரை நிறுத்தச் சொல்லி மூன்று வல்லரசுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

1954 : ஜூன் 25-ல் சீனப் பிரதமர் சூ-என்-லாயை வரவேற்றார். பஞ்சசீலம் என்னும் ஐந்து கொள்கைகளை விளக்கினார்.

1955 : ஜூலை 15-ல் 'பாரத ரத்னா' விருது பெற்றார்.

1957 : ஜனவரி 12-ல் நாளந்தாவில் புத்தரின் 2,500 வது ஆண்டு விழாவில் பங்கேற்றார்.

1962 : டிசம்பர் திங்களில், கோவா மக்களை, போர்ச்சுக்கீசியரின் பிடியிலிருந்து விடுதலை பெறச் செய்தார்.

1964 : ஜனவரியில், புவனேஸ்வரத்தில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபொழுது நோய்வாய்ப்பட்டார். சிகிச்சைக்குப் பின் நலம் பெற்றார்.

மே 27 புதன் கிழமை காலை 6.20 மணிக்கு மீண்டும் நோய்வாய்ப்பட்டார். குருதிக் குழலில் கோளாறு ஏற்பட்டதனால், பகல் 2.00 மணிக்கு உயிர் துறந்தார்.

உலகப் பெருந்தலைவர்கள் வரிசையில் சிறப்புமிக்க இடம் பெற்று, இந்தியத் துணைக்கண்டத்திற்குத் தனிப் புகழிடம் தேடிக் கொடுத்து, பூசல்கள் பிளவுகளால் நாடு கேடடையாமல் பாதுகாத்து, பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படாமல் தடுத்து வந்த மாபெரும் காவலர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்.

நேரு பெருமகனாருக்கு நாம் காட்ட வேண்டிய மரியாதை உணர்வைச் சொல்லாலும், செயலாலும், நேர்மையாலும், நன்னெறியாலும் அனைவரும் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

**(சென்னை மத்திய சிறையிலிருந்து அண்ணா விடுத்த இரங்கற் செய்தி)**



# தந்தையும் மகளும்



ஓரே வரியில் இந்திராகாந்தியைப் பற்றிச் சொல்லுவதென்றால், இப்படிச் சொல்லிவிடலாம்.

''புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?''

நேருவுக்குப் பிறந்தார்; அதனால் நிகரற்றுத் திகழ்ந்தார் என்று வெளிப்படையாகச் சொன்னாலும் பிழையாகி விடாது

'உங்களுடைய உயர்வுக்கு எதெல்லாம் காரணம்?' என்ற கேள்வி எழுந்தபோதெல்லாம், இந்திரா சொன்னதும் இதைத்தான்.

'என்னுடைய தந்தையார், எனக்குச் சிறந்த நண்பரைப் போல இருந்து, வழிகாட்டினார்; ஆசானைப் போலிருந்து அரசியல் பாடம் புகட்டினார்' என்பதைப் போலத்தான் அவருடைய பதில்களெல்லாம் அமைந்தன:

ஆம்; மாதர்குல மாணிக்கமாக இந்திரா ஜொலித்ததன் முக்கியக் காரணமே, வாழையடி வாழையாக அவர் வளர்ந்த விதம்தான்.

நாம் பல மேதைகளை வரலாற்றில் கண்டிருக்கிறோம். ஆனால், அவர்களுக்குப் பிறந்தவர்கள் எல்லோருமே அகிலப் புகழ் பெற்றதுண்டா என்றால், அதுதான் இல்லை. இந்த வகையிலே தனித்துத் தலை நிமிர்த்தி நின்றவர் இந்திரா காந்தி.

நேரு உருவமென்றால், அந்த உருவத்தின் நிழல் இந்திரா. அப்படியிருந்த காரணத்தால்தான் இந்திய சரித்திரத்தில் அவரைப் போலவே இவரும் இணையற்ற இடம் பெற்றார்.

சூரியன் வழங்கிய ஒளியால் சந்திரனும் பிரகாசிக்கிறதே, அதைப் போல!

ஆனால், நேரு தனக்குப் பின் தனது மகளே இந்தியாவின் பிரதமராக வேண்டும் என்ற உள்ளார்ந்த நோக்கத்தோடுதான் மகளுக்குப் பயிற்சியளித்தாரா என்றால், அதுதான் இல்லை. இதை நேருவே பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார்.

இந்திராவின் எதிர்காலம் பற்றியல்ல; இந்தியாவின் எதிர்காலம் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த மாமனிதர் அவர்.

தன்னுடைய புதல்வியைப் பற்றி, அவருடைய எதிர்காலத்தைப் பற்றி ஜவஹர் எப்படிக் கணித்திருந்தார் என்பதற்குப் பல மேற்கோள்களைக் காட்ட முடியும்;'ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம்' என்பதுபோல், அவற்றுள் ஒன்றை இங்கே பார்க்கலாம்.

ஜவஹர், தமது கடைசிக் காலத்தில், 'பிளிட்ஸ்' ஏட்டின் ஆசிரியரான ஆர.கே.கரஞ்சியாவுக்கு ஒரு பேட்டியளித்தார். இந்தியாவின் வருங்காலம், நேருவுக்குப் பிறகு யார் என்பது பற்றியெல்லாம் போய்க் கொண்டிருந்தது அவர்களுடைய பேச்சுவார்த்தை.

அந்த இரண்டாவது விஷயத்தைப் பற்றி மிக நிதானமாகப் பேசினார் நேரு. நம்முடைய காமராசர், லால்பகதூர் சாஸ்திரி, குல்சாரிலால்

---

சிறைவாழ்க்கை மரவாழ்க்கை: மரம் ஒரே இடத்தில் வேரூன்றி விடுகிறது. அது இடம் விட்டு இடம் பெயர்வதில்லை: பேசுவதுமில்லை. அதைப்பற்றி நினைப்பாருமில்லை. பேசுவாருமில்லை. அதைப் போலத்தான் சிறையிலிருப்பவனும்! சிறையிலிருப்பவர்களுக்கு வெளியுலக நிகழ்ச்சிகள் வேடிக்கையாகவும் சிறிது திகைப்பை உண்டுபண்ணுவனவாகவும் இருக்கின்றன. அவை தூரத்தே நிகழும் வெறும் மாயத் தோற்றமாக அவர்களின் கண்களுக்குத் தென்படுகின்றன. ஆகவே, ராபர்ட் லூயி ஸ்டிவென்சன் எழுதியுள்ள கதையில் வரும் டாக்டர் ஜெகில், மிஸ்டர் ஹைட் என்னும் பாத்திரங்களைப்போல் நாங்களும் ஒன்று அசைவும், ஒன்று அமைதியுமாகவுள்ள, இரு இயற்கைத் தத்துவங்களாகவும், இரு வாழ்க்கை முறைகளாகவும், இருதோற்ற இயல்களாகவும், மலர்ச்சி அடைகிறோம்.

—பண்டித ஜவஹர்லால் நேரு



"என்னுடைய பசுவை இன்ஷுர் செய்ய நான் மிகச்சிறிய தொகை செலுத்தினேன்."

"அது இறந்துபோன போது, வேறொன்றை வாங்க யுனைடெட் இந்தியா உதவியது—விரைவாக !"

HTA 7025

உங்கள் பகுதியில் உள்ள யுனைடெட் இந்தியா அலுவலகத்தையோ அல்லது ஏஜன்டையோ அணுகுங்கள். ஒரு கால்நடை இன்ஷுரன்ஸ் பாலிஸி எடுப்பது எவ்வளவு சுலபம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். மேலும், அது எவ்வளவு செலவு குறைவு என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.
நோயினாலோ விபத்தினாலோ உங்கள் கால்நடை இறந்து போனால் உங்கள் இழப்பிற்கு யுனைடெட் இந்தியா ஈடு செய்யும் — விரைவாக.
உங்கள் குடும்பத்தின் நல்வாழ்வையோ அல்லது உங்களது நல்வாழ்வையோ விதியிடம் விட்டு விடாதீர்கள். உடனே யுனைடெட் இந்தியா இன்ஷுரன்ஸ் பாலிசி எடுத்துக் கொள்ளுங்கள். முழு பாதுகாப்பு பெறுங்கள்.

UNITED INDIA

யுனைடெட் இந்தியா கால்நடை இன்ஷுரன்ஸ் பாலிசி

**யுனைடெட் இந்தியா இன்ஷ்ரன்ஸ் கம்பெனி லிமிடெட்.**

(ஜெனரல் இன்ஷுரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**தலைமை அலுவலகம்: 24 ஒயிட்ஸ் ரோடு, சென்னை 600 006.**

இன்றே எங்களது 1000 க்கும் மேற்பட்ட அலுவலங்களில் ஏதாவது ஒன்றுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

FORTY YEARS OF FREEDOM

நந்தா, ஆகியோரின் அருமை பெருமைகளைப்பற்றி யெல்லாம் மனப்பூர்வமாகப் பேசினார் அவர்.

இந்திராவின் அரசியல் அறிவையும், பிரச்சினைகளை அவர் அணுகும் முறையையும் தன் தந்தைக்கே சில சமயங்களில் ஆலோசனை கூறுமளவுக்கு அவர் பெற்றிருந்த தெளிவையும் பல சந்தர்ப்பங்களில் கண்டறிந்தவர் ஆர்.கே.கரஞ்சியா.

ஆகையால், 'தங்களுக்குப் பின் தங்கள் மகள் இந்திரா பிரதமர் பதவிக்கு வரத் தகுதியற்றவரா?' என்பதை இலைமறை காயாக நேருவிடம் கேட்டே விட்டார் அவர்.

எல்லாக் கேள்விகளுக்கும் படபடவென்று பதில் சொல்லிக் கொண்டே வந்த ஜவஹர், இந்தக் கேள்வியைச் சற்றும் எதிர்பார்க்காதவர் போல அவர் முகத்தைக் கூர்ந்து பார்த்தார். ஒரு பெருமூச்சுக்குப் பிறகு ஆழ்ந்த அமைதிக்குப் பின்னால் பதிலை மிகமிக நிதானமாக உச்சரித்தார்.

''எதைப்பற்றியும் சுதந்திரமாகச் சிந்தித்துச் செயலாற்றும் திறன் இந்திராவுக்கு இருக்கிறது. அப்படித்தான் அவள் இருக்க வேண்டும்''.

ஜவஹர்லால் நேருவின் இந்தப் பதில், சுற்றிவளைப்பதாகவே பட்டது ஆர். கே. கரஞ்சியாவுக்கு. எனவே, அவர் நேரடியாகவே கேட்டார்.

''ஆக... தங்கள் மகள் எந்தப் பெரும் பதவி வகிப்பதையும் தாங்கள் மறுக்கவில்லை?''

''நிச்சயமாக மறுக்கவில்லை; அதை நான் எப்படி மறுக்க முடியும்? என்ற கேள்வியோடு உடனே தொடங்கியது நேருவின் பதில்;

''...எந்த வகையிலும் இந்திராவை நான் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. ஏனென்றால், எந்தப் பதவியும் பரம்பரை பரம்பரையாக வருவதை நான் அனுமதிப்பதாக யாரும் நினைத்துவிடக்கூடாது. ஏனென்றால், அது ஜனநாயகத்திற்கு எதிரானது. ஆனால் ஒன்று; என்னைப் பொறுத்தவரை மக்கள் அவளைத் தேர்ந்தெடுத்தாலோ, அல்லது காங்கிரஸ் கட்சியின் விருப்பப்படியோ பொறுப்பான எந்தப் பதவியை அவள் ஏற்றாலும் அதை நான் மனப்பூர்வமாக வரவேற்பேன். ஒரு குறிப்பிட்ட பதவி அவளுக்குக் கிடைப்பதற்காக நான் முயலவில்லை; அதே நேரத்தில், நானோ மக்களோ விரும்பி இந்திராவுக்கு ஒரு பதவியளிக்க முன்வந்தால், நான் சொல்லப்போவதும் இல்லை''.

இதுதான் ஜவஹரின் ஆணித்தரமான பதில்.

இவ்வளவுக்குப் பிறகு, இந்திரா என்ற அந்த சொக்கத்தங்கம் இந்திய சரித்திரத்தில் சுடர்விட்டு ஜொலித்தது என்றால்-அதற்குக் காரணம் அவரது அறிவு, ஆற்றல், கனிவு, துணிவு, கடமையுணர்வு ஆகியவைதான்!

''இந்திராவை என்னுடைய அரசியல் வாரிசாக நான் உருவாக்கி வருகிறேனோ என்று சில நேரங்களில் இதேபோல் என்னிடம் கேட்கப்படுகிறது; உள்ளர்த்தத்தோடும் அப்படிச் சிலர் கேட்கிறார்கள். எந்த ஒரு பதவியில் அமர்த்தும் நோக்கத்தோடும் அவருக்கு நான் பயிற்சி தரவில்லை என்றே நான் அதற்கெல்லாம் பதில் அளித்திருக்கிறேன். நான் இதுபோலச் சொல்லுவதால், எனக்குப் பிறகு அவளுக்கு எந்தப் பொறுப்பும் தரப்படக் கூடாது என்று பொருள் கொண்டு விடக்கூடாது.

''அவள் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராவதற்காக நான் ஒரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். அவ்வாறு இருந்தும்கூட இந்திராவே தேர்ந்தெடுக்கப்பட்டாள். என்னையோ, எனது கொள்கைகளையோ வெறுக்கிறவர்களும்கூட சில சமயம் அவளது திறமைகளைப் பற்றி என்னிடமே பாராட்டிச்சொல்லியிருக்கிறார்கள். சிலநேரம் எனக்குப் பிடிக்காத விதமாக அவள் நடந்து கொண்டதும் உண்டு. ஆனால், அதுதான் சரி.

''நாட்டிலேயே உயர்ந்ததான அந்தத் தலைவர் பதவிக்கு அவளைத் தேர்ந்தெடுத்தது நானல்ல! மக்கள்! இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸ்கட்சி. நான் இந்த விஷயத்தில் நடுநிலை வகித்தேன். உள்ளபடியே, அவளை அதற்குத் தேர்ந்தெடுத்தது எனக்குப் பிடிக்கவில்லை. இருப்பினும், அதன்பிறகு நானும் இந்திராவும் மிகச் சாதாரணமாக, அரசியல் நண்பர்களைப் போலவே செயலாற்றினோம்; தகப்பன்-மகள் என்ற உறவு முறையோடு செயல்படவில்லை.

வா. சோமாஸ்கந்தன்

# வறுமை ஒழிந்திட வளமை நிறைந்திட...

நடப்பு ஆண்டில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் திறம்பட, துரிதமாகச் செயல்படுத்தப்படுகின்றன. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீடுகள் கட்டுதல், பள்ளிக்கூடங்கள் கட்டுதல், சமூகக் காடுகள் வளர்த்தல், குடிநீர் வசதி செய்தல், சாலைகள் அமைத்தல் ஆகிய வேலைகள் செய்யப்படுகின்றன. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலம் 1988ஆம் ஆண்டு ரூ. 2527 இலட்சம் செலவில் 146 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1987-ஆம் ஆண்டு ரூ. 1954 இலட்சம் செலவில் 108 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1987-ஆம் ஆண்டு செலவினத்தை விட 1988ஆம் ஆண்டு 8 சதவிகிதம் கூடுதலாகச் செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் செப்டம்பர் மாதம் வரை ரூ. 4595 இலட்சம் செலவில் 242 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. செலவு அடிப்படையில் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு 20 சதவிகிதம் கூடுதலாகச் செலவிடப்பட்டுள்ளது. 1987-ஐ விட 36 சதவிகிதம் கூடுதலாக மனித உழைப்பு நாட்கள் உருவாக்பட்டுள்ளன.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரகநிலமற்றோர்-வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களின் மூலம் நடப்பு ஆண்டில் செப்டம்பர் மூடிய 49036 வீடுகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு 2371 வீடுகளே இதே கால அளவில் கட்டப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 1,38,194 குடும்பத்தினருக்கு ரூ. 2568 இலட்சம் மானியம் அளித்து உதவி செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு 1,00,266 குடும்பங்களுக்கு ரூ.1521 இலட்சம் மானியம் அளித்து உதவி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் இதுவரை 10,445 நபர்களுக்கு இளைஞருக்கான சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு பயிற்சி பெற்றவர்கள் 6237 நபர்கள்.

நடப்பு ஆண்டில் 'ஜீவன்தாரா, என்ற புதிய திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது இத்திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள நிலமுடைய விவசாயிகளுக்கு இலவசமாகப் பாசனக் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

நடப்பு ஆண்டில் 5,000 கிணறுகள் அமைத்துக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வேலைகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

## “நாக்குப் பூச்சிகளை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசீயிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பன்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!”

கறவைப் பிராணி உலகுக்கு நல்ல சேதி!



தன்னிகரற்ற

# பன்மின்த்*

(மொரண்ட்டெல் டார்ட்ரேட்)

## நாக்குப் பூச்சிகளை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

‘‘பாழும் நாக்குப் பூச்சிகளால்—அம்மம்ம, நான் பட்டபாடு: பலவீனம் பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பன்மின்த் தான் பலிச்சுது—அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!’’

**பால் இழப்பே இல்லை.**

‘‘அருமையான சேதி—எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும், சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பன்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பன்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால், மனிதருக்குக் கெடுதலே இல்லை—நூற்றுக்கு 100 பத்திரமானது.’’

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

‘‘என் தங்கச்சி—பிள்ளைத் தாய்ச்சி—அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பன்மின்த் சினைக் காலம் முழுக்க எந்தக் கெடுதலும் செய்யலை, ஏன், பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆறுதலான சுகம்!’’

**வசதி மிக்கதும் கூட.**

‘‘சாப்பிட வெகு இலகு பன்மின்த். கண்டிவிடுங்க ஒரு குளிகை (எங்க மாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு), உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!’’

பால் இழப்பே இராது
பன்மின்த்*
விலையை ஈடு செய்வது

கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் சிறந்த மருந்து.

**பன்மின்த்***


புழுக்களைக் கொல்லும்! ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 2221 7 TM

*பூ.எக்ஸ். ஃபைசர் இன்க்.நிறுவன டிரேடு மார்க்.

pfizer

மேலும் விவரமறிய, எழுதுவீர் இம் முகவரிக்கு:
ஃபைசர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400021.



# மாபெரும் இலட்சியம்

இந்தியாவில் சமுதாய அபிவிருத்தி இயக்கம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததென்று நான் நம்புகிறேன். அதை நான் அடிக்கடி சொல்லியும் இருக்கிறேன். அதை ஒவ்வொரு அம்சத்திலும் புரட்சிகரமானது என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதிலுள்ள எத்தனையோ குறைபாடுகளை உணர்ந்திருந்தும், பல்வேறு வழிகளில் அது வெற்றியுறாமல் இருந்திருந்தும், நான் அவ்வாறு குறிப்பிட்டேன். இருந்த போதிலும், நிலைமைகளைக் கவனித்தால், அது அளவிலும், ஆழத்திலும் புரட்சிக்கு ஒப்பான ஒருபெரும் பணியைச் செய்து வருகிறது; ஏனென்றால், கிராமாந்திரங்களிலுள்ள 30 கோடி ஜனங்களின் சமூக அமைப்பை அமைதியாகவும், படிப்படியாகவும், மாற்றுவதற்கு அது முயற்சிக்கிறது. இந்த இயக்கத்தை நடத்தும் பொறுப்பு வகிக்கிறவர்களுக்கு, மிகப்பெரும் கடமைப் பொறுப்பு இருக்கிறது. அவர்களில் ஒவ்வொருவரும் யந்திரத்தின் ஒரு சிறு சக்கரப்பல் போன்றவர்கள் மாத்திரமல்ல, கிராமாந்திர இந்தியாவில் நம் கிராமங்களை மாறுதலைடையச் செய்து வருகிற ஜீவாதாரமான, உத்வேக நடைமுறையில் அவர்கள் ஜீவத் துடிப்புள்ள அங்கங்களாகவும் விளங்குகிறார்கள்.

ஆனால், உண்மையான மாறுதல் கிராமத்தின் உள்ளாக இருந்தே ஏற்படவேண்டும். அதாவது கிராமங்களில் வாழ்கிற அந்த மக்களிடமிருந்தே ஏற்பட வேண்டும். வெளியிடத்திலிருந்து சுமத்தப்படுவதாக இருக்கக்கூடாது. அது சுய அபிவிருத்தி, சுய நம்பிக்கை, பரிணமிக்கிற ஒரு நடைமுறையாகும். வெளியார் ஓரளவுக்கு மாத்திரமே உதவி செய்யலாம். ஆலோசனை உதவியளிக்கவோ அல்லது இங்குமங்கும் சற்று ஊக்கம் அளிக்கவோ செய்யலாம். அந்தச் சிறிய உதவி உண்மையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவும் செய்யலாம்; மிகவும் விஸ்தாரமான பிரதேசத்துக்கு ஒளி ஊட்டுகிற சிறிய தீபத்தை ஏற்றும் உதவி போல் அமையலாம்.


வெளியூரிலிருந்து வந்து உதவி செய்கிறவரின் திறம்பட்ட சேவையின் பெரும் முக்கியத்துவத்தை நான் உணர்ந்த போதிலும், சுய உதவி, சுயநம்பிக்கை ஆகியவைகளில் தான் எனக்கு மேலும், மேலும் அதிக நம்பிக்கை ஏற்பட்டு வருகிறது. வெளியிலிருந்து வந்து உதவி செய்கிறவர்களில் உண்மையாக வெற்றியுடன் சேவைசெய்பவர் யார் என்றால், தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ளும்படித் தூண்டுகிறவர் யாரோ அவர்தான். எனவே, வெற்றி கிடைக்கிறதா இல்லையா என்பதைப் பரிசோதிப்பதற்கு வழி, ஒரு கிராமத்து மக்கள் தங்கள் சொந்தப் பொறுப்புக்களையும் பாரங்களையும் தாங்களாக எவ்வளவு தூரம் தாங்கிக் கொள்ள முன் வருகிறார்கள், சுய நம்பிக்கை உணர்ச்சி, பரஸ்பர ஒத்துழைப்பு உணர்ச்சி ஆகியவைகளை எவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்திருக்கிறார்கள் என்று நிர்ணயிப்பதுதான்.

வரவரப் பெருமளவுக்கு அதிகாரப் பரவல் முறையும், அதிகார வினியோகமும் இருக்க வேண்டுமென்பதை நான் நன்றாக உணருகிறேன். இதில் ஓர் அபாயம் ஏற்படலாம்; அனுபவம் அல்லது பயிற்சி இல்லாமையால காரியங்கள் சிதைவுறக் கூடிய ஆபத்து இருக்கிறது. ஆனால் அந்த ஆபத்தை மகிழ்ச்சியோடு சமாளிக்க வேண்டியதுதான். நீண்டகாலப் போக்கில் பார்த்தால, அதிகாரத்தைப் பரவலாக்குவதன் மூலமேதான் நாம் நம் மக்களைப் பயில்விக்க முடியும்.

இத்தகைய ஒரு நிலவரத்தில், அதாவது சமுதாய அபிவிருத்தி இயக்கத்தில் மிகமுக்கியமான தனிப்பட்ட நபர், வட்டார அபிவிருத்தி அதிகாரிதான். அபிவிருத்திக் கமிஷனர் மற்றவர்கள் ஆகியோரும் முக்கியமானவர்கள்தான். அதுபோலவேதான் களத்தில் வேலை செய்கிற கிராம சேவக்குகளும்; ஆனால், இந்த மாபெரும் இயக்கத்தில் மிக முக்கியமான ஸ்தானத்தை வகிப்பவர் வட்டார அபிவிருத்தி அதிகாரிதான். எனவே, சமுதாய அபிவிருத்தி இயக்கம் வெற்றி பெறுவது வட்டார அபிவிருத்தி அதிகாரிகளின் தரத்தைப் பொறுத்த விஷயமாகும். அவர்கள் 'உணவில் உப்பைப் போல்' முக்கியத்துவம் வாய்ந்தவர்கள், அல்லது அவ்வளவு முக்கியத்துவம் உள்ளவர்களாக அமையவேண்டும். நாடெங்கும் உயர்ந்த, தரமான, தகுதியுள்ள, உற்சாக மிக்க, வட்டார அபிவ்ருத்தி அதிகாரிகள் திறள் ஒன்றை ஏற்படுத்தி விட்டோமானால், துரித முன்னேற்றத்துக்கு நாம் வழி செய்தவர்களாவோம். வட்டார அபிவிருத்தி அதிகாரி திறமையும், உற்சாகமும், உள்ளவராக இருக்க வேண்டும். மேலும், அவர் உள்ள எழுச்சி பெற்றவராகவும் இருக்க வேண்டும். இறுதியாகப் பார்த்தால் தனிப்பட்ட ஒருவருக்கு ஒரு தனிப் பண்பை ஏற்படுத்தி, மற்றவர்களுக்கு அது பாயும்படி செய்கிற குணம் அது.

ஏழு வருஷங்களுக்கு முன் சமுதாய அபிவிருத்தி இயக்கம் ஆரம்பித்தது முதலே எனக்கும் அதில் நம்பிக்கை உண்டு. இன்றும் இப்படியே என் நமபிக்கையை அது பெற்றிருக்கிறது. அதன் மூலம் நம் நாட்டுக்கு மாபெரும் பலன்கள் ஏற்படுமெனறு நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன்; முக்கியமாக, நம் கிராமங்களில் வாழ்கிற மக்களுக்கு விசேஷ பலன்கள் உண்டாகுமென்று நம்புகிறேன். இந்த மாபெரும் இயக்கத்துக்காகவும், இந்த மாபெரும் லட்சியங்களுக்காகவும் பாடுபடுகிற எல்லோருக்கும் நான் என் பாராட்டுகளையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் பெருமளவு வெற்றியைப் பெறுவார்களாக.

**[1959-ஆம் வருடம் ஜூலை மாத இறுதியில் மைசூரிலே நடைபெற்ற சமுதாய அபிவிருத்திக் கருத்தரங்குக்கு பிரதமர் நேரு அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலிருந்து தொகுக்கப்பட்டது].**



# எஞ்சியிருக்கும் எனது காலத்தில்

இந்த தேசத்தின் மக்கள் என்னை நேசிக்கிறார்கள். நடைமுறை இலக்கணங்களைத் தாண்டிய பேரன்புக் கொடையை அவர்களிடமிருந்து பன்முறை நான் பெற்றிருக்கிறேன். முற்றாகவோ அல்லது சிதலமாகவோ நான் திருப்பித் தர முடியாத நன்கொடை அந்த அன்பு.

இந்த உலகத்தின் நேசர்களுக்கு மத்தியில் அதைத் திருப்பித் தந்தவர்கள் யார்? அது 'தரமுடிகிற'' ஒன்றே தவிர ''திருப்பித் தரமுடிகிற'' ஒன்றல்ல. என்னுடைய போக்குகளோடு பலர் உடன்பாடு கொண்டிருக்கிறார்கள்; சிலர் மாறுபட்டு விமர்சித்திருக்கிறார்கள். என்றாலும்கூட, எல்லா இந்தியர்களும் என்னையே நான் இழக்கின்ற அளவிற்கு அவர்களுடைய அன்பை எனக்குத் தந்திருக்கிறார்கள்.

ஒன்றைமட்டும் நான் கூறமுடியும் எஞ்சியிருக்கும் எனது வாழ்நாட் காலத்தில் இந்த மக்களுக்கு, இவர்களுடைய அன்புக்குத் தகுதியற்றவனாக நான் நடந்து கொள்ள மாட்டேன்.

எனது பல்வேறு நண்பர்கட்கும், தோழர்கட்கும் ஆழமான அன்பைத் தர நான் கடமைப்பட்டவன். நாங்கள் அனைவரும் எல்லா நிலைகளிலும் தோழர்களைப் போலவே சுகதுக்கங்களைப் பகிர்ந்துகொண்டவர்கள்.

எனது மரணத்திற்குப் பிறகு மதச் சடங்குகள் தேவையில்லை.

அத்தகைய நம்பிக்கைகள் எனக்கில்லை. அவை நமக்கும் பிறருக்குமிடையே வேறுபாட்டையும், நம்மில் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் தன்மையினையும் உருவாக்கிவிடும் என நான் கருதுகிறேன்.

நான் இறக்கும்பொழுது எனது உடல் எரிக்கப்படவேண்டும். நான் ஒருவேளை ஏதாவதொரு அயல் நாட்டில் இறந்துவிட்டால் என் உடல் அங்கேயே எரிக்கப்பட்டு, எனது 'அஸ்தி' (சாம்பல்) அலகாபாத்திற்கு அனுப்பப்பட வேண்டும். அதில் ஒரு சில பகுதியைக்கூடப் புனிதமாகக் கருதிப் பாதுகாக்கக் கூடாது. எனது அஸ்தியின் ஒரு பகுதி கங்கையில் கரைக்கப்பட வேண்டும். அதன் பெரும் பகுதி இந்திய பூமியின் விளை நிலங்களில் உரமாகப் பயன்படவேண்டும்.

நான் எனது பால்ய காலத்திலேயே அலகாபாத்தில் சிந்திசைக்கும் கங்கை, யமுனை நதிகளோடு உறவு கொண்டேன். நான் வளர வளர அந்த உறவும் மலர்ந்தது. எனது அஸ்தியைக் கங்கையில் கரைக்கச் சொல்வது இந்த உணர்வுகளின் பின் புலத்தில்தான். இதில் மதத்தின் உணர்வுகள் சிறிதும் ல்லை.

அந்த ஜீவநதிகளின் நுரையுமிழும் நீர்ப்பெருக்கில் ஒரு பகுதியாக மாறிவிட்ட இந்த தேசத்தின் சரித்திரம், இதிகாசங்கள், நமது பரம்பரைகள், நாடோடிப் பாடல்கள், கிராமியக் கதைகள் இவைகளைப் பற்றியெல்லாம் நான் அடிக்கடி சிந்திக்கிறேன். இந்த மகத்தான செல்வங்களை,அந்நதிகளோடு நிரந்தரமாக இணைந்து விட்ட கால வழிக்கனவுகளை நான் தரிசிக்கிறேன்.

அந்த ஜீவநதிகளின் பல்வேறு நிலைகளையும், பருவ கால மாற்றங்கள் அங்கே பிரதிபலிப்பதையும் கூட நான் கவனத்தோடு ரசித்திருக்கிறேன்; குறிப்பாக கங்கை நதி இந்தியாவின் நதி— இந்த மக்களின் 'செல்லப்பிள்ளை'. பலஇனங்களைப் பற்றிய ஞாபகக் குறிப்புகளும், இந்தியத் தாயின் நம்பிக்கைகளும், சஞ்சலங்களும், அவளுடைய இனிய பாடல்களும், வெற்றி தோல்விகளும் கங்கையோடுதான் பிறந்தன. அவளுடைய மடியில்தான் அவை வளர்ச்சி பெற்றன.

எப்போதும் ஓடிக் கொண்டிருக்கிற-எப்போதும் மாறுபடாத, அந்தப் புனித கங்கைதான் இந்தியாவின் கால முதிர்ச்சி பெற்ற பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் 'குறியீடாக' விளங்குகிறாள். நான் நேசித்த இமாலயத்தின் பனி போர்த்த சிகரங்களையும் ஆழமான பள்ளத்தாக்குகளையும் அவள் எனக்கு நினைவுபடுத்துகிறாள்.

காலைச் சூரிய வெளிச்சத்தில் இதழ் மலர்ந்து நடனமாடி, மாலை நிழலடியில் இருள், சோகம் இவற்றின் ரகசியமாகி, மனழக் காலத்தில் சின்னஞ்சிறிய அமைதியோட்டம் மிகுந்த ஓடையாகி, பருவக் காற்றின் விசிறலில் கடலை நிகர்த்து, அதன் அறிவாற்றலையும் பெற்று விளங்கும் 'அவள்' நிகழ் காலக் கடலை நோக்கிச் 'சங்கம யாத்திரை' செய்பவளாக எனக்குத் தோற்றுகிறாள்.

எனது விருப்பங்களுக்குச் சாட்சியமாகவும், இந்தியாவின் பரம்பரைப் புகழ் மிக்க பண்பாட்டிற்கு நான் செலுத்தும் வீர வணக்கமாகவும் எனது 'அஸ்தி, அலகாபாத்தில் கங்கையில் வீசியெறியப்பட வேண்டும்.

எனது அஸ்தியில் பெரும் பகுதி விமானத்தின் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, ஆகாயத்திலிருந்து உழவர்கள் பாடுபடும் வயல்வெளிகளில் வீசப்பட வேண்டும். எனது அஸ்தி அங்கே இந்த தேசத்தில் மண்ணோடும், புழுதியோடும். கலந்து என்றும் இந்தியாவைப் பிரியாதிருக்க வேண்டும்.

# மறையா ஒலி

## கவியரசு கண்ணதாசன்



என்னத்தே எரியும் தீபம்
இறப்பிலாத் தருமம் என்னும்
இன்னத்தே வைத்த செந்தேன்
கீழ்வட மேற்கு தெற்கு
மண்ணெலாம் வணங்கும் தெய்வம்
மனிதருள் கதிரோன்! எங்கள்
கண்ணிலே நிறைந்து நின்று
காற்றிலே கலந்த நேரு!

நினைஅவன் பிறப்பை நெஞ்சே
நினைஅவன் வளர்ப்பை நெஞ்சே
நினைஅவன் சிறப்பை நெஞ்சே
நினைஅவன் இறப்பை நெஞ்சே
தனைஅவன் கருதி னானா?
தாயகம் கருதி னானா?
தனைஅவன் கருதா தாலே
தாய்அவன் வடிவ மானாள்!

தாழ்ந்தவர் உயர்ந்தோ ரென்னும்
தரமிலா வாழ்வைச் சாய்த்து
வாழ்பவர் இனத்தைக் காண
வாழ்ந்தவன் மறைந்தான்! ஆனால்
ஆழ்ந்ததோர் கருத்தைச் சொன்ன
அவன்குரல் ஒலியி னாலே
வீழ்ந்தவர் எழுந்து நின்றார்
வேந்தனை வாழ்த்து கின்றார்!

# ஜவஹர் நினைவு

## நாமக்கல் கவிஞர்

## வெ. இராமலிங்கம் பிள்ளை



நேருவை நினைத்தவுடன்
நேர்மைக்குணம் என்னும்
மேருவை நிகர்த்தஒளி
மின்னிவரும் முன்னால்
பாரிலுள்ள யாவரும்நம்
பந்துஜன மென்றே
கோரும்ஒரு மெய்யுணர்வின்
கொள்கைவரும் அன்றோ?

ஜவஹரை நினைத்தவுடன்
ஜாதிநிற பேதம்
அவனியில் அழிந்தொழிய
ஆர்வம்நம தாகும்
நவநவ உணர்ச்சிகளின்
நன்னெறியை ஊட்டும்
நல்லதுணை வல்லனென
நம்மறிவு காட்டும்.

தீமையை எதிர்க்கும்ஒரு
தீரனுளன் என்றும்
வாய்மையை வளர்க்குமொரு
வள்ளலிவன் என்றும்
தூய்மைதவ றாதமுறை
சொல்வளவன் என்றும்
சீமைதொறும் வாழ்த்துஜவ
ஹர்அரிய சீலன்.

சொந்தமுள தன்னுடைய
சொத்துசுக மெல்லாம்
வந்தநில மக்கள்சுக
வாழ்வுபெற வென்றே
தந்தைதர மைந்தனிவன்
தானமெனத் தந்தான்
எந்தமொழி எந்தக்கதை
ஈடுசொல உண்டு?

தன்னல மறுப்பினுயிர்
தன்மை யிதுவென
இன்னல்களை இன்பமென
ஏற்கஒளி மின்னும்
பொன்னில்மணி வைக்கஉயிர்
பெற்றசிலை போலும்
என்னசொலிப் போற்றிடுவோம்
எம்ஜவஹர் லாலை!

ஏழையின் மனக்குறைகள்
இன்னவெனக் காட்டிக்
கோழைகளைக் கண்டுகொதி
கொண்டதுயர் கூட்டி
ஊழ்வினையை வெல்லுமொரு
ஓவியமும் ஆகும்
வாழிஜவ ஹர்மகிபன்
வாழிநெடுங் காலம்!

# யானை அனுப்பிய நேரு



—குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

அன்று நேரு பெயருக்கே
அஞ்சல் ஒன்று வந்தது.
'என்ன கடிதம் இது?' என
எடுத்துப் பார்த்தார் அவருமே.

கடிதம் சிறிது; அடியிலே
கையெ ழுத்தோ ஆயிரம்!
உடனே நேரு ஆவலாய்
உள்ளம் குளிரப் பார்த்தனர்.

ஜவஹர் படித்தார் கடிதத்தை
ஜப்பான் நாட்டுக் குழந்தைகள்
அவரி டத்தில் ஆசையாய்
யானை ஒன்று கேட்டனர்.

"முன்பு யானை டோக்கியோ
மிருகக் காட்சிச் சாலையில்
சின்னஞ் சிறுவர் யாவரும்
சென்று காண இருந்தது."

"இன்றோ அதுவும் இல்லையே!
இரண்டாம் உலகப் போரிலே
கொன்று விட்டார் யானையை,
குண்டு போட்டே எதிரிகள்."

"ஆசை கொண்டோம் நாங்களும்
யானை பார்க்க வேண்டியே
பாசம் மிக்க உங்களைப்
பலரும் சேர்ந்து கேட்கிறோம்."

கடிதம் இதனைப் படித்ததும்
கருணை உள்ளங் கொண்டவர்
உடனே யானைக் குட்டியில்
ஒன்றை அனுப்பி வைத்தனர்.

மைசூர்க் காட்டில் வாழ்ந்தது;
வானில் பறந்து சென்றது.
கைகள் தட்டிக் குதித்தனர்;
கண்ட வுடனே சிறுவர்கள்!


தும்பிக் கையை யானையும்
தூக்கி சலாம் போடவே,
மெய் மறந்து குழந்தைகள்
மேலும் மகிழ்ச்சி கொண்டனர்.

ஆனைக் குட்டிப் படத்தினை
அச்ச டித்தே, அதனது
தீனி, வயது, எடையெல்லாம்
தெளிவாய் அதிலே தந்தனர்.

இந்தச் செய்தி கேட்டதும்,
"எங்க ளுக்கும் யானைகள்
தந்து மகிழச் செய்யுங்கள்
தங்க மாமா நேருவே!"

என்று கடிதம் எழுதினர்,
ஏழு தேசக் குழந்தைகள்
அன்பு மிக்க நேருவும்
அனுப்பி வைத்தார் யானைகள்!







# நேருவின் பெருமை

கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்

மலைகளில் உயர்ந்ததே இமய மலை;
வழிகளில் சிறந்தது காந்தி வழி
தலைவரில் உயர்ந்தவர் நேருவெனத்
தாரணி போற்றும் ஜவகர்லால்!

பட்டம் பெற்றார்; சட்டம் - கற்றார்;
பாரிஸ் டர்எனும் சிறப்புற்றார்;
பட்டறி வெல்லாம் பரத - நாட்டின்
பாசக் கனலாய் எழுந்ததுவே!

சொத்தும் சுகமும் பெரிதல்ல!
சுதந்திரம் ஒன்றே உயிர்என்றே
உத்தமர் காந்தியின் சீடன்என
உரிமைப் போரில் குதித்துவிட்டார்!

அற்புத ஆனந்த பவனம் எனும்
அலக பாத்தின் அரண்மனையை
அர்ப்பணம் செய்தார் நாட்டினுக்கே
அரும்பெரும் தியாகி ஜவகர்லால்!

உலக வரலா றதுதீட்டி
உரிமை வேட்கையை நிலைநாட்டி
தலைவர் காந்தியின் வாரிசெனத்
தனிப்புகழ் கொண்டவர் ஜவகர்லால்!

உத்தமர் காந்தியின் அறநெறியில்
ஒப்பரும் கிளர்ச்சிகள் நடத்தியவர்;
ஒத்துழை யாமை இயக்கத்திலே
உறுதி கொண்டவர் ஜவகர்லால்!

ஒன்பது வருடம் சிறைக்கோட்டம்
உழன்ற மா வீரர் ஜவகர்லால்;
ஒன்பது முறையவர் சிறை சென்றார்;
உரிமை காத்திட முன்னின்றார்!

இந்தியா விடுதலை பெற்றதுமே
ஏற்றினார் முதல்கொடி, ஜவகருமே!

இத்தகு பெருமை எய்திடவே
எத்தனைத் தியாகம் அவர்செய்தார்!

மாபெரும் சுதந்திரக் கப்பலுக்கே
மாலுமி ஆனார் ஜவகர்லால்;
யாவரும் வியக்க, கலவரமாம்
யானையை அடக்கிய பாகன்அவர்

வல்லர செல்லாம் இணையும்விதம்
நல்லர சாட்சி செய்துவந்தார்;
தொல்லைகள் என்னும் இருளொழிக்கும்
சூரிய னாக ஒளிபடைத்தார்!

கூட்டுச் சேராக் கொள்கையினால்
குரோதம் யாவையும் களைந்து விட்டார்!
திட்டும்ஐந் தாண்டுத் திட்டங்களி னால்
சிறந்த வளர்ச்சிப் பணி புரிந்தார்!

சோவியத் நாட்டின் துணையுடனே
தொழில்வளம் பெருக வழிவகுத்தார்;
காவியம் போலே தன்வரலாற்றுக்
களஞ்சியம் படைத்தவர் ஜவகர்லால்!

பக்ரா நங்கல் போன்ற அணைகளே
பாரதக் கோயில்கள் எனப்புகழ்ந்தார்;
மக்கள் மத்தியில் மூடத்தனம்
மறைந்திடச் சிந்தனை முழக்கமிட்டார்!


பஞ்ச சீலக் கொள்கையினாலே
பகைவெறி நீங்கிட வகைகண்டார்;
அஞ்சா நெஞ்சுடன் சமஸ்தானங்கள்
அனைத்தையும் ஆட்சியில்
இணைத்துவிட்டார்!

பதினே ழாண்டு ஆட்சிசெய்த
பற்பல சாதனைப் பேரொளியாம்
கதிரவன் நேரு வரலாற்றுக்
காவியம் போற்றி வாழ்த்துவமே!



# நேரு வாழ்க!





—கவிஞர் ஜி. எஸ். இளங்கோ



அன்னை நம் பாரதத்தை அன்னியர் அடிமை ஆக்கி
அல்லலில் நம்மை வாட்டி அரசாண்ட நேரம் பார்த்து
தன்னையே தியாகம் செய்து தாயவள் விலங்கொடித்த
தலைவராம் அண்ணல் காந்தி தலைமையில் தனை இணைத்து
முன்னைய சுகங்கள் தம்மை முழுவதும் தத்தம் செய்து
முற்றுமாய் நாட்டிற் கென்று தன்னையே அர்ப்பணித்து
பின்னைய பலனை நாடு பெற்றிட—வழி வகுத்த
பண்டிட் ஜவஹர்லால் நேரு! வாழ்க! வாழ்க!!

பெருமைகள் செயலால் அன்றிப் பேச்சினால் அல்ல என்று
பாரெல்லாம் அமைதி வாழ பறந்திடும் புறாவை விட்டு
வறுமையை நாட்டில் போக்க ஐந்தாண்டுத் திட்டம் போட்டு
வாய் இல்லாப் பூச்சியான ஏழைகள் வாழ்த்தும் வண்ணம்
பொறுப்புடன் பாரதத்தைப் புதுத்தடம் போக வைத்து
புதியதோர் நாட்டைக் கண்ட பொலிவான தலைவர் நேரு!
திறமையாய் ஆண்ட போதும் நாட்டை—திறம்பட நாளை ஆள
தன்மகள் இந்திராவைத் தாய் நாட்டிற்கு ஈன்ற கோமான்!

நீதியின் மேன்மை இங்கு நிலைத்திட வேண்டு மானால்—
நெறிகெட மனத்தின் போக்கை மாறிடச் செய்யும்—இந்தச்
சாதியின் கொடுமை நாட்டில் சாய்த்திடல் வேண்டும் என்று
சளைக்காமல் முழங்கி வந்த சமதர்ம வாதி! நேரு...
வேதியல் துணையைக் கொண்டு விளைகின்ற மாற்றம் ஒன்றே
விஞ்ஞான யுகத்தில் நாட்டை முன்னேற்ற வைக்கும் என்றும்
மீதியை மறந்துவிட்டு மனிதரை மதித்தல் ஒன்றே
மனிதர்க்குத் தொண்டு என்ற மாமேதை நேரு! வாழ்க!

மண்ணிலே வளத்தைக் கண்டு மனிதர்கள் மேன்மை எய்த
மாபெரும் தொழிற்கூடங்கள்! மன்னவன் புகழைப் பாட
விண்ணிலே கோளை விட்டு வியத்திய நாடு எல்லாம்
வணங்கிட-எழுந்து நின்று வாழ்த்திய தலைவர் நேரு!

கண்மணி போல நாட்டைக் காத்திடல் வேண்டும் என்று
கல்லாமை நீக்கக் கல்விக் கோயிலைத்திறந்த தேவன்!
பெண்மணி வழியில் பிள்ளை! பெற்ற தாய் நாட்டைக்காக்க
பிரதமர் ராஜீவிற்கு வழிகாட்டி நேரு... வாழ்க! வாழ்க!

# ஆசிய ஜோதி நேரு

—கவிஞர் ஞா. மாணிக்கவாசகன்



ஆயிரம் ஆண்டுகட்கு மேல்இங்கே
அடிமைத் தளையில் முடங்கிக்கிடந்த
நாட்டுக்கு விடுதலை தேடித்தந்த
நாயகத் தலைவர் நேருபிரான்!

தாயக விடுதலைக்காய் சிறையினிலே
தவமிருந்த தலைவர் மக்கள் நல்
வாழ்வுக்காய் தன்னுடைய வாழ்வினையே
அர்ப்பணித்த ஆசிய ஜோதிநேரு!

நேரு—இது தனிமனிதர் பெயரல்ல
தத்துவத்தின் தலைவாசல், தலைமைப்பீடம்
போரற்ற புதுஉலகம் காணவந்த
புதுமனித சிந்தனையின் வரிவடிவம்!

பூபாளச் சங்கீதம், எழுச்சி ஊற்று!
பாரெல்லாம் பஞ்சசீலம் சிறக்கப்
பாடிப் பறந்த அமைதி வெண்புறா
பாரதநாட்டின் மானுடக் கனவு!

விண்ணிமயம் நேருமனம் விரிந்தகடல்
நாட்டிற்கு அவர்செய்த தியாகம்வீரம்!
பண்ணூறும் தமிழின்பம் அவரின்பேச்சு
பாரதத் தாய்செய்தவம் நேரு ஆகும்!

மானுடம் முழுமையும் மனதார
நேசித்த மகத்தான தலைவர்நேரு
வானுயர்ந்த வரலாறு புகழ்ப்பெருமை
வழிகாட்ட வளர்வோம் வாழ்வோம்!

# நேரு மாமா பிறந்த நாளில்...

பி. வி. கிரி



நேருமாமா பிறந்தநாளில்
நெஞ்சம் உயர்த்துவோம்
'யாரும்நம்மில் அடிமையில்லை'
என்று கூறுவோம்!


நாளைஉலகம் நமதுகையில்
நன்குபயிலுவோம்
வேளைவந்தால் நாட்டைக் காக்கும்
வீரம் கொள்ளுவோம்!
(நேரு மாமா)

நமதுநாடு நமதுமக்கள்
நாளும் போற்றுவோம்
சமத்துவமாய் வாழ்வோமென்று
சபதம் செய்குவோம்!
(நேரு மாமா)

ஊனமுற்ற யாவருக்கும்
உதவி செய்குவோம்
காணுகின்ற உயிர்களிடம்
கருணை காட்டுவோம்!
(நேரு மாமா)

'நல்லநூல்கள் நல்லநண்பர்'
என்று சொல்லுவோம்
வல்லவராய் விளங்கும்வண்ணம்
வாழ்க்கை அமைப்போம்!
(நேரு மாமா)

உலகம் போற்றும் காந்தித்தாத்தா
வழியில் செல்லுவோம்
திலகம்போல நாடுதிகழ
தினமும் உழைப்போம்!
(நேரு மாமா)



# நேருவின் நெறியிலே!

—கவிஞர் மன்னை ப. கீரன்

மனிதர்க்குள் மாணிக்கம், எல்லோரும் தொடர
மாசில்லா வழிவகுத்தோன், புத்துலகின் சிற்பி,
இனிநமது வழிகாட்டும் விண்மீன்தான். என்றே
இரவலனும் பேசுகிறான், இவையெல்லாம் உண்மை!

படியாதோர், நோயாளர், வறியோர்கள் துன்பம்
பார்த் திட்டால் கண்ணீர்தான் பொங்காதோ
நெடியபுகழ் நேருபிரான் சொற்போல நடந்து
நிலையான பொதுப்பணிக்கே பொருளெல்லாம் வைப்பீர்!

பொல்லாத இடர்களிலே சிக்கியநம் நாட்டின்
புகழ்மகளைப் போற்றுகின்ற எண்ணத்தைக் கொண்டால்
இல்லாதோர் இன்புறவே தொழிற்சாலை, பணியின்
இல்லங்கள் அமையுங்கள், தொண்டாற்றும் பெரியீர்!





# நேரு மாமா!

—கவிஞர் அ. சுப்பையன்

நேர்மையின் சின்னம் யாருங்க?
நேரு மாமா தானுங்க!
பாரே போற்றும் பண்பாளர்
'பாரத ரத்னா' நேருங்க!

பஞ்ச சீலக் கொள்கையினைப்
பாருக் களித்தவர் யாருங்க?
கொஞ்சிப் பேசும் குழந்தைமனம்
கொண்ட எங்கள் நேருங்க!

நாட்டின் ஒற்றுமை ஒன்றினையே
நாளும் மனதில் கொண்டவர்யார்?
வீட்டைக் கூட நாட்டிற்காய்
விரும்பி அளித்த வேந்தன்யார்?

மனித ருக்குள் மாணிக்கம்
மாமா எங்கள் நேருங்க!
நினைக்குந் தோறும் இனிக்கின்ற
நேரு எங்கள் மாமாங்க!



# மனித இனத்தின் மாபெரும் விடுதலை வீரர்

தத்துவமேதை
டாக்டர்
எஸ். ராதாகிருஷ்ணன்

நமது தலைமுறையின், மிகப் பெரிய தலைவர் ஜவகர்லால் நேரு தன்னிகரற்ற அரசியலறிஞராக விளங்கினார். மனித இனத்தின் சுதந்திரத்திற்காக அவர் செய்த சேவை மறக்க முடியாததாகும். சுதந்திரப்போராட்ட வீரராக அவர் ஈடு இணையற்று விளங்கினார். நவ இந்தியாவை உருவாக்குவதில் அவர் செய்த சேவை ஒப்பு உவமை அற்றதாகும். நமது மனப்பான்மை, சமூக அமைப்பு, அறிவு வளர்ச்சி ஆகியவைகளை நல்ல முறையில் உருவாக்குவதில் அவருடைய வாழ்வும் பணியும் சிறந்த பயனை அளித்துள்ளன.

இந்தியா சுதந்திரமடைந்ததிலிருந்து அவர் பிரதமராகப் பதவி வகித்தார். நம்முடைய நாட்டை முற்போக்கான, அறிவியல் வளர்ச்சி பெற்ற, சக்தி வாய்ந்த நாடாகவும், நமது சமுதாயத்தை வகுப்பு வேற்றுமையற்ற சமுதாயமாகவும் உருவாக்க முயன்று வந்தார். அடிப்படைச் சுதந்திரக்கொள்கைகளில் அவருக்கிருந்த நம்பிக்கை, நமது சிந்தனைக்கும் வாழ்வுக்கும் நல்ல வழிகாட்டியாகும். அவருடைய குணத்தின் வியக்கத்தக்க தன்மையும், செயலும் நாம் எளிதில் புரிந்துகொள்ளுமாறு அமைந்தவைகளாகும்.

அவர் மதித்து வந்த உயர்ந்த தத்துவங்களைச் சொற்பொழிவுகளின் மூலம் நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறினார். மனித வாழ்வின் உயர்நிலைக்காக அவர் போராடினார். சாதாரண மக்களும் அவருடைய லட்சியங்களைப் புரிந்துகொள்ளும்படி செய்தார். அவர், முக்கியக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்தியாவின் இந்தத் தலைமுறையை உண்டாக்கினார். கேட்டார்ப் பிணிக்கும் சக்தி வாய்ந்த இனிய குரலோசையின் மூலம் மக்களுக்கு விழிப்பூட்டினார்.

செல்வமும் சிறப்பும் மிக்க சூழ்நிலையில் தோன்றிய அவர், தேசிய விடுதலைப் போராட்டத்திற்குத் தன்னையே அர்ப்பணம் செய்தார். காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக, உன்னதத் தலைவராக விளங்கினார். தேசியப் போராட்டத்திலும் சுதந்திர உதயத்தின் போதும் அவர் புரிந்த சேவை இந்திய வரலாற்றின் முக்கியமான பகுதியாக விளங்குகின்றது

திட்டமில்லையென்றால் நமது பொருளாதார வளர்ச்சியும், முன்னேற்றமும் புதுவாழ்வும் நமக்குக் கிடைக்காது என்பதை நேரு சுதந்திரம் வருவதற்கு முன்பே உணர்ந்துவிட்டார். சுதந்திரம் அடைந்த பின்பு திட்டக் கமிஷனின் தலைவராக இருந்து, பல்வேறு திட்டங்களுக்குப் புது வலிமையும் புத்துணர்ச்சியும் ஊட்டினார்.

பிற நாடுகளிலிருந்து விலகி, இந்தியா மட்டும் தனித்து விளங்க முடியாது என்பது நேருவின் கொள்கையாகும். காலனி ஆதிக்கத்தை எதிர்த்து உலகெங்கும் நடக்கும் பெரிய இயக்கத்தின் ஒரு பகுதி இந்தியப் பிரச்சனையாகும் என்பதைச் சுதந்திரம் வருவதற்கு முன்னதாகவே உணர்ந்திருந்தார். சுதந்திரமே அவரது உயிர் மூச்சு. தன்னுடைய மக்கள் மட்டுமின்றி உலக மக்கள் அனைவரும் சுதந்திரமாக வாழ வேண்டுமென்று விரும்பியவர் அவர். ஆகவே, ஆப்பிரிக்கா, ஆசியா, தென் அமெரிக்கா முதலிய நாடுகளின் சுதந்திர இயக்கங்களுக்கெல்லாம் அன்பும் ஆதரவும் காட்டினார். வேற்றுமை இல்லாமல் அனைவரும் சுதந்திரமாக வாழும் வாழ்க்கையில் அவருக்கு மகத்தான நம்பிக்கை உண்டு.

உலக அமைதியிலும் ஒரே உலகச் சமுதாயம் காணும் கொள்கையிலும் நேரு அசையாத நம்பிக்கை கொண்டவர். உலக நாடுகளின் சாசனத்துக்கு நேருவைக் காட்டிலும் அதிக நம்பிக்கையும் மரியாதையும் காட்டிய தலைவர் யாரும் இருக்க முடியாது. இந்த அணுசக்தி யுகத்தில் போர் என்பது எல்லா நகரங்களின் அழிவையும் குறிக்கும் என்பதை உணர்ந்தவர் நேரு. ஆகவே, உண்மையில் அரசியல்வாதியின் வலிமையானது, பகைமையையும், போராட்டங்களையும் குறைத்து ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஒத்துழைக்கும் சூழ்நிலையை உருவாக்குவதாகும். இதைச் செயலில் காட்டியவர் நேரு.

அரசியல் அடிமைத்தனம், பொருளாதார வேற்றுமைகள், சமூகக் கொடுமைகள், கலாச்சாரத் தேக்கம் ஆகியவற்றிலிருந்து மக்களின் மனம் விடுபட வேண்டும் என்று அவர் விரும்பினார். அதற்காக, தன் வாழ்வு அனைத்தையும் அர்ப்பணித்துவிட்ட மனித இனத்தின் மாபெரும் விடுதலை வீரர் அவர்.



# நேருவின் வாழ்க்கை ஏட்டில்

## சில காட்சிகள்

அண்ணல் காந்தியடிகள், மௌலானா அபுல்கலாம் ஆசாத் ஆகியோருடன்



டாக்டர் இராஜேந்திரப் பிரசாத்துடன்

கென்னடியுடன்



கூட்டுச்சேராக் கொள்கை யுடைய ஐம்பெரும் நாடு களின் தலைவர்கள் நேரு, நுக்ருமா, நாசர் சுகர்னோ, டிட்டோ







இங்கிலாந்து பிரதமர் அட்லியுடன் (1947)

பெர்னாட்சாவுடன்






இராஜாஜியுடன்



'பாரதரத்னா' விருது பெறுகிறார் நேரு (1955)

கவியரசர் தாகூருடன்





# தமிழகத்தில் நேரு

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னால், அதாவது 1936ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிற்கு வருகை தந்தார் பண்டித ஜவஹர்லால் நேரு. அப்போது அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தார், அவர். அக்டோபர் 5ஆம் நாள் முதல் 20ஆம் நாள் வரை நடைபெற்ற அந்தப் பதினாறு நாட்கள் சுற்றுப்பயணத்தின்போது நிகழ்ந்த சுவையான சம்பவங்கள் பல; அவற்றுள் சில, இங்கே சுருக்கித் தரப்படுகின்றன;

தீரர் சத்தியமூர்த்தியின் அழைப்பின்பேரில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தார், நேரு. சென்னையில் தீரர் சத்தியமூர்த்தி வீட்டிலேயே தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், சில அரசியல் மாறுபாடுகளால் அவரைப் பிடிக்காத சிலர், அவர் வீட்டில் தங்கக்கூடாது என்று நேருவுக்குத் தந்தி கொடுத்தார்கள்; கடிதம் எழுதினார்கள். நேரு அதைப் பெரிதுபடுத்தவில்லை. தீரர் சத்தியமூர்த்தியின் விருந்தினராகவே தங்கினார்.

பொன்னேரி புகை வண்டிநிலைய வரவேற்பில் பத்தாயிரம் ரோஜாக்களால் தயாரிக்கப்பட்ட மிகப் பெரிய மாலையொன்று அவருக்கு அணிவிக்கப்பட்டது. 'இவ்வளவு பெரிய மாலையா? இதைப் போல இதற்குமுன் நான் எங்கும் பார்த்ததில்லை!'' என்று சொல்லிச் சொல்லி வியப்படைந்தார் நேரு.

மறுநாள் காலை நேரம். தீரர் சத்தியமூர்த்தியும், காமராசரும் சுற்றுப்பயணத்தில் நேருவுடன் புறப்படத் தயாராக இருந்தார்கள். வீட்டு வாசலில் நிறுத்தப்பட்டிருந்த காருக்கு வந்தார் நேரு, அப்போது, நேரு எழுதிய சுயசரிதை நூலுடன் வாசலில் நின்ற இளைஞர் ஒருவர், அதிலொரு கையெழுத்துப் போட்டுத் தருமாறு வேண்டினார்.

''மத்தியானம் வாருங்கள், போட்டுத் தருகிறேன்' என்றார் நேரு.

அந்த இளைஞர் விடுவதாயில்லை. 'கெஞ்சிக்கேட்டுக்கொள்கிறேன்; கையெழுத்திடுங்கள்' என்றார்.

'யாரானாலும் கெஞ்சுவது எனக்குப் பிடிக்காது' என்றார் நேரு.

'என்ன செய்வது, நம் நாடே பிச்சைக்கார நாடுதானே?' என்று அவர் பதிலுக்குச் சொன்னாரோ இல்லையோ, நேருவுக்குக் குபீரென்று கோபம் வந்துவிட்டது.

''இந்த நாடும் பிச்சைக்கார நாடல்ல, நானும் பிச்சைக்காரனல்ல; பிச்சை கேட்பவர்களையே நான் வெறுக்கிறேன். '' (Neither my country nor am I a beggar: I hate beggars) என்று உரத்த குரலில் சொல்லிவிட்டுக் காரில் ஏறினார் நேரு.

தீரர் சத்தியமூர்த்தி அந்த இளைஞரைக் கோபத்தோடு பார்த்தார். ஆனால் நேருவின் கோபமோ, அடுத்த நிமிஷமே ஆறிவிட்டது. அந்த இளைஞரின் கையிலிருந்த புத்தகத்தைத் தாமே வாங்கி அட்டையைப் புரட்டி, முதல் பக்கத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டு வேறுபக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

இதைக் கண்ட சத்தியமூர்த்தியும் காமராசரும் வியப்போடு ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்த இளைஞரோ 'பண்டித நேரு வாழ்க' என்று உற்சாகமாகக் குரல் எழுப்பினார்.

'நேருவுடன் பகல் உணவு சாப்பிட, ராஜாஜியையும் அழைத்திருந்தார் சத்திய மூர்த்தி. நேருவும் அவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அது, ராஜாஜி, அரசியலல வட்டு ஒதுங்கியிருந்த நேரம். பேச்சோடு பேச்சாக அதை ஒருவர் நினைவு படுத்தினார்.

உடனே நேரு, ''அதை நான் நம்பமாட்டேன்; சிறுத்தைப் புலி தன் வரிகளை எப்படி மாற்றிக் கொள்ள முடியும்?'' (How can a leopard change its spot?) என்று வேடிக்கையாகக் கேட்டார் நேரு. ராஜாஜி உட்பட அனைவருமே சிரித்து விட்டனர்.

குபீரென்று கோபப்படுவதும், அடுத்த வினாடியே அதை மறந்து விடுவதும்நேருவுக்கே உரிய தனித் தன்மை. சில நேரங்களில் அவர் குழந்தையைப் போல் மாறிவிடுவதும் உண்டு.

ஒரு நாள் ''சுற்றுப்பயணம் முடித்துவிட்டு வந்திருந்த நேரு, அன்றையப் பத்திரிகைகளில் தமது நிகழ்ச்சிகள் பற்றிய புகைப்படங்கள் வெளிவந்திருப்பதை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு பக்கத்தில் இருந்தவரிடம் ''ஒரு கத்தரிக்கோல் வேண்டுமே?'என்றார்.

''கத்தரிக்கோல் எதற்காக?'' என்று கேட்டார்கள்.

''பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருக்கிற என் மகள், இதையெல்லாம் பார்த்தால் தன் தந்தைக்குக் கிடைக்கும் வரவேற்பைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைவாள்; இந்தச் செய்தித் தாள்களில் உள்ள படங்களைக் கத்தரித்து அவளுக்கு அனுப்பப் போகிறேன்'' என்றார், நேரு.

''அப்படியானால் இந்தப் படங்கள் எதற்கு? அவர்களிடம் கேட்டு அந்தப் புகைப்படங்களையே வாங்கித் தருகிறோம்'' என்றார்கள் அங்கிருந்தவர்கள்.

''அப்படியானால் அந்தப் படங்களைக் கண்ணாடி போட்டே வைத்துக் கொள்ளுவாள் அவள்'' என்று பெருமகிழ்ச்சியோடு தெரிவித்தார் நேரு. அவருடைய இந்த மகிழ்ச்சி, அங்கிருந்த அனைவரையும் அதிசயிக்கச் செய்வதாக இருந்தது.

கோவை மாவட்டம் கோபியில் நேருவுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப் பட்டது. அங்கு பேசுவதாக முன்னேற்பாடு இல்லை. ஆனால், அங்கிருந்த அமைதியான மக்களைக் கண்ட நேரு சுமார் அரைமணி நேரம் உரையாற்றினார்.

''இது போன்ற அமைதியான மக்களிடையே பேசுவது எனக்கு ஆனந்தமாக இருக்கிறது'' என்றும் அவர் பெருமையோடு சொன்னார்.

பிறகு, ஈரோட்டில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேச ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அங்கே கூடியிருந்த மக்கள் செய்த ஆர்ப்பாட்டம் நேருவுக்குப் பிடிக்கவில்லை. 'அமைதியாக இருந்தாலன்றி நான் இங்கே பேசப் போவதில்லை' என்று பணிவாகவும் கடுமையாகவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். மக்கள் அமைதியடைவதாகஇல்லை. அவ்வளவுதான், 'இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டுப் போயே விட்டார் நேரு.

பொள்ளாச்சி பொதுக்கூட்டம் இரவு 10 மணிக்கு; பொள்ளாச்சிக்கு வரவே சுமார் பன்னிரெண்டு மணியாகிவிட்டது.

கூட்டம் முடிந்ததும் ''உடுமலைக்குப் போகலாம்' என்றார் நேரு.

''நீங்கள் சாப்பிட வருவீர்கள் என்று சேட்ஜி காத்திருப்பாரே'' என்றார், ஒருவர்.

''சேட்ஜியும் அவர் விருந்தும் காத்திருக்கலாம்; ஆனால் என்னுடைய மக்களை நான் காக்க வைக்க முடியாது'' என்று மிகுந்த கண்டிப்போடு சொல்லிவிட்டார்.

உடுமலைப்பேட்டை பொதுக் கூட்டத்தை முடித்துக் கொண்டு, தங்குமிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள் அனைவரும். பொள்ளாச்சியில் சாப்பாடு என்று சொல்லப் பட்டிருந்ததால், அங்கே உணவு தயாரித்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

''இப்படியா இருப்பீர்கள்?'' என்று அங்கிருந்தவர்களிடம் சப்தம் போடத் தொடங்கினார் தீரர் சத்தியமூர்த்தி. இதைக் கவனித்த நேரு- ''சத்தியமூர்த்தி, இரவில் சாப்பிடாமல் இருப்பது உடம்புக்கு மிகவும் நல்லது தெரியுமா? அதற்காக அவர்களிடம் கோபப்படாதேயும்'' என்று சிரித்தபடி சொல்லி அவரை அடக்கினார்.

நேருவைத் தொட்டுப் பார்க்கும் ஆவலில் கோவை மாவட்ட மக்கள் எடுத்துக் கொண்ட உரிமை, அவருடைய சிவந்த கரங்களில் நகக்கீறல்களாகக் கோடு கோடாகத் தெரிந்தது. இதைக் கவனித்த தி.சு. அவினாசிலிங்கம் ''எங்கள் மாவட்ட மக்கள் இப்படி அதிகப்படியாக நடந்து கொண்டதற்காக, தாங்கள் மன்னிக்க வேண்டும்'' என்றார் பணிவோடு.

''மக்களுக்கு என்னிடம் உள்ள அன்பின் அடையாளச் சின்னமல்லவா இது; இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது!'' என்றார் நேரு, சிரிப்போடு!.

—தொகுப்பு
பி.எல்.ஆர்.


## தமிழ் நாட்டிற்கு முதல் பரிசு

மத ஒற்றுமையை விளக்கும் வகையில் பூல் வாலோங்கி சாயர் என்று அழைக்கப்படும் பூக்காரர் பேரணி விழா ஒவ்வொரு ஆண்டும் புதுடெல்லியில் நடைபெறுகிறது. இவ்விழாவில் ஒவ்வொரு மாநிலமும் கலைக்குழு ஒன்றையும், வேலைப் பாடமைந்த பூக்குடைகளையும் அனுப்பி வைத்துப் பங்குகொள்கிறது. தமிழ்நாடு அரசும் இவ்விழாவில் ஒவ்வொரு ஆண்டும் கலை நிகழ்ச்சிக்குழு ஒன்றையும், வேலைப் பாடமைந்த பூக்குடைகளையும் அனுப்பி வைத்துப் பங்கு கொண்டு வருகிறது. இந்த ஆண்டு 9-10-88 அன்று இவ்விழா புது டெல்லியில் நடைபெற்றது. இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்கள் இந்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் அவர்கள் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டின் சார்பாக தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மாணவர்களின் கரகம், பொய்க்கால் குதிரை நடனநிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது. இரண்டு அழகிய பூக்குடைகளும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. தமிழகக் கலை நிகழ்ச்சியினை, குடியரசுத் தலைவர் அவர்களும் பிரதமர் அவர்களும் மற்றும் முக்கியப் பிரமுகர்களும் பெரிதும் ரசித்துப் பாராட்டினர். தமிழகக் கலைநிகழ்ச்சி மற்றும் வேலைப்பாடமைந்த பூக்குடைகள் சிறந்ததென விழாவில் அறிவிக்கப்பட்டது. இதற்கான பரிசு அடுத்த ஆண்டு நடைபெறும் விழாவில் வழங்கப்படும்.

தமிழ்நாடு கடந்த மூன்று ஆண்டுகளாகச் சிறந்த கலைநிகழ்ச்சிகள் மற்றும் வேலைப்பாடமைந்த குடைகளுக்கான பரிசினைப் பெற்று வருகிறது. நான்காவது முறையாக இந்த ஆண்டும் பரிசு பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டிற்கான கடந்த ஆண்டுப் பரிசுகளை, குடியரசுத் தலைவரிடமிருந்து டெல்லியிலுள்ள தமிழக அரசின் சிறப்பு ஆணையாளர் திரு. கே.எம். எல்.சாப்ரா பெற்றுக் கொண்டார்கள்.

# நேருவின் மணி மொழிகள்



வாழ்க்கையே ஒரு விசித்திரமான கதம்பம்தான். நாம் அதை உள்ளது உள்ளவாறே எடுத்துக்கொண்டு முதலில் அதை அறியவும், பின்னர் அதைச் சீர்திருத்தவும் முயல வேண்டும்.

ஃ ஃ ஃ

சாமானிய மக்களின் நலந்தான் நமக்கு மிகவும் முக்கியமானது. ஒரு சிலருக்காக நாம் மிகப்பலரைப் பலி கொடுக்க முடியாது.

ஃ ஃ ஃ

உலகம் இருந்த இடத்திலேயே இருப்பதில்லை. யாரோ சொன்னது போல் நம்மைச் சரித்திரத்தின் குப்பைத் தொட்டியில் தள்ளிவிட்டு, அது முன்னேறிக் கொண்டே இருக்கிறது.

ஃ ஃ ஃ

சமூகம் எப்பொழுதுமே பழமைப்பற்றுடையது. மாறுதல் என்றாலே அதற்குப் பிடிப்பதில்லை. அது தான்போகிற போக்கிலேயே போய்க் கொண்டிருக்க விரும்புகிறது. தான் போகிற போக்கு தான் சரியானபோக்கு என்றும் அது உறுதியாக நம்புகிறது. ஆகவே நிலைமையைச் சீர்திருத்த வேண்டும் என்னும் நோக்கத்துடன் சமூகம் தன் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறவர்களை அது தண்டிக்கிறது.

ஃ ஃ ஃ

சுதந்திரம் என்பது நழுவிவிடும் இயல்புடையது. கையில் இருப்பதுபோலத் தோன்றும். பின்னர் பார்த்தால் இராது. வெற்றி என்பது முழுத் தியாகமும் செய்த பின்னரே கிடைக்கக்கூடிய ஒன்று. அது நம்மை அடிக்கடி ஆசைகாட்டி மோசம் செய்யும். நம்மைக் கொடிய சோதனைகளுக்கு உள்ளாக்கிய பின்னரே அது நமக்குக் கிடைக்கும்.


ஃ ஃ

இன்று, உண்மையான விஞ்ஞானி என்று தன்னைக் கூறிக் கொள்ளும் ஒவ்வொருவனும், கல்விக் கடலானது எல்லையற்றுப் பரந்து கிடக்கிறது என்னும் உண்மையை உணர்ந்திருக்கிறான். ஆராய்ச்சிப் பாய் கட்டிய அறிவுத் தோணியில் அமர்ந்து, அவன் அதைக் கடக்க முயல்வது உண்மையேயாயினும், அவன் தன் முன்னோர்களைவிட அதிக அடக்கம் வாய்ந்தவனாகவும் தயக்கம் காட்டுபவனாகவும் இருக்கிறான்.

ஃ ஃ ஃ

யந்திரமும் யந்திரக் கைத்தொழிலும் வந்தபிறகு மதத்தின்பால் காட்டப்பட்டு வந்த அலட்சியம் இன்னும் அதிகரித்தது. குருட்டு நம்பிக்கையின் அடிப்படையை விஞ்ஞானம் தகர்த்தெறிந்துவிட்டது.

—தொகுப்பு —அ. மருது



# நேருவின் காந்த சக்தி

திருமதி சரோஜினி வரதப்பன்

பாரதத்தின் முடிசூடா மன்னர், சுதந்திர இந்தியாவின் சிற்பி, பாரதத்தின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழக அரசு ஒரு சிறப்பிதழ் வெளியிடுவதை நான் மனமார வரவேற்றுப்பாராட்டுகின்றேன். இந்த ஒரு புனிதமான பணியில் எனக்கும் ஒரு பங்குகொடுத்து என்நினைவுகளைத் தெரிவிக்க ஒரு வாய்ப்பு அளித்ததை நான் பெரும் பேறாகக் கருதி, தமிழக அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நேரு குடும்பத்தின் சிறப்பு யாவரும் அறிந்ததே. தலைமுறை, தலைமுறையாக, வாழையடிவாழை என, பண்டிதமோதிலாலிலிருந்துவரிசைக் கிரமமாக, சிறந்த தேச பக்தர்களாக—விடுதலைப்போராட்டத்தின் தலைசிறந்த வீரர்களாக-விளங்கிய குடும்பம் நேரு குடும்பம். நமது தேசப்பிதா மகாத்மா காந்திஜி அவர்கள் தனது வாரிசாக பண்டித ஜவஹர்லால் அவர்களை நமக்கு பிரகடனப்படுத்தியுள்ளார். அவரது தீர்ப்பு உண்மையானது, நியாயமானது என்று ஜவஹர்லால் தன் செயல் மூலம் ருசுப்படுத்தியுள்ளார்.

உயர்ந்த குடும்பத்தில் பிறந்து, சீரும், சிறப்புமாக வளர்ந்து, அயல் நாடு சென்று உயர்கல்வி பெற்று, காந்திஜியின் அறைகூவலுக்குக் கட்டுண்டு, காங்கிரஸ் மஹாசபையில் சேர்ந்து, சுயநலம், சுகவாழ்வு அவ்வளவையும் துறந்து நாட்டிற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். கடைசி மூச்சுவரை நாட்டு மக்களின் நலனில் இரவும் பகலும் கவனம் செலுத்தி ஒரு நாளைக்கு 20 மணி நேரம் உழைத்தார். எனவேதான் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக இருந்தபோது நாட்டின் பொருளாதார உயர்வு, கல்வி மேம்பாடு, உணவு உற்பத்தி, கைத்தொழில் அபிவிருத்தி, கிராம மேம்பாடு, பெண்கள்-குழந்தைகள் நலன் என்று பல்வேறு கோணங்களில் இந்தியா உலக நாடுகளுடன் சமஅந்தஸ்து பெற,பெரும்பாடுபட்டார்.

இந்தியா அயல்நாட்டுப் பொருள்களை நாடாது சுயதேவையைப் பூர்த்திசெய்ய வழிவகுத்தார். உலக நாடுகள் அனைத்துக்கும் சென்று நல்ல சுமுகமான உறவைத்தேடித் தந்தார். பெண்கள், குழந்தைகள் நலன் நாட்டிற்கு மிகவும் முக்கியம் என்பதைஉணர்த்தினார். 1953ஆம் ஆண்டு ஸ்ரீமதி துர்காபாய் தேஷ்முக்கின் வேண்டுகோளுக்கிணங்கி, மத்திய சமூகநல வாரியம் என்ற புதுமையான நிறுவனத்தை,பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்று, பெண்கள், குழந்தைகள் நலனிற்கென்றே உருவாக்கிய பெருமை பண்டித ஜவஹர்லால் அவர்களைச் சாரும்.

பெண்கள், குழந்தைகளின் நலம் பேணினால்தான் நாடு நலம் பெறும் என்ற நம்பிக்கை ஜவஹர்லாலிடம் பரிபூரணமாக இருந்தது. எனவேதான் பெண் சமூகத் தலைவிகளையே பெரும்பாலும் இந்த வாரியத்தின் பொறுப்பை ஏற்க வாய்ப்பு அளித்து அதற்கென முதல் ஐந்தாண்டுத்திட்டத்தில் ரூ4 கோடி பணத்தை ஒதுக்கினார். இன்று அந்த நிறுவனம் பலகோடி மான்யம் வழங்கி, ஆயிரக்கணக்கான சமூகநல ஸ்தாபனங்களின் மூலம் லட்சக்கணக்கான குழந்தைகள் பெண்கள் மேம்பாட்டில் தீவிரக் கவனம் செலுத்தி வருகின்றது. பண்டித்ஜியின் தலைமையின் கீழ் ஏராளமான பெண்கள் பாராளுமன்றத்திலும், சட்டசபைகளிலும் பங்கு பெற முடிந்தது. அத்துடன் தகுதி உள்ளவர்களை அமைச்சர்களாகவும், கவர்னர்களாகவும், தூதுவர்களாகவும் நியமித்து இந்தியப்பெண்களின் திறமையை வெளி உலகிற்குப் பிரகடனப்படுத்தினார். அதேசமயம் ஜவஹர்லால் எந்தக் காரியத்திலும் perfection விரும்பினார். முழுநோக்



விஞ்ஞானம் மனிதனுடைய தேக சிரமத்தைக் குறைத்தது. அதனால் லட்சக் கணக்கானவர்களுடைய வாழ்க்கையில் கஷ்டம் குறைந்தது. விஞ்ஞானத்தினால் உலகத்தின் ஜனத் தொகை - சிறப்பாகத் தொழிலபிவிருத்தி அடைந்த நாடுகளின் ஜனத் தொகை அதிகரித்தது. அதே சமயத்தில், சர்வத்தையும். நாசம் செய்யக்கூடிய அழிப்பு முறைகளையும் விஞ்ஞானம் தோற்றுவித்தது. ஆனால், அது விஞ்ஞானத்தின் குற்றமல்ல. விஞ்ஞானம் மனிதனுக்கு இயற்கையை அடக்கி ஆளக் கூடிய சக்தியை அளித்தது. அந்தச் சக்தியைப் பெற்ற மனிதன், தன்னைத்தான் அடக்கி ஆளும் வழியை அறியாமல், தவறான பாதையில் சென்று விஞ்ஞானத்தின் வரங்களையே சாபங்கள் ஆக்கிக் கொண்டான். ஆனால் விஞ்ஞானம் மட்டும் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டே இருந்தது. அதன் பயனாகப் பல்லாயிர வருடங்களில் அடையாத மாறுதலை நூற்றைம்பது வருடங்களில் இவ்வுலகம் அடைந்துவிட்டது. விஞ்ஞானம் வாழ்க்கையின் வழி, துறைகள் எல்லாவற்றையும் அடியோடு மாற்றிவிட்டது. அது உலகிலேயே ஒரு புரட்சியை உண்டுபண்ணி விட்டது.

கத்துடன் நாட்டின் நலனில் பணி புரிய வேண்டும் என்பது அவரது அசையாத நம்பிக்கை.

இன்று நமது பாரதப் பிரதமர் ராஜீவின் சூறாவளிச் சுற்றுப் பயணத்தைப் பார்க்கும்போது நமக்கு ஜவஹர்லாலின் நினைவுதான் வருகின்றது. இதேபோலத்தான் ஜவகர்லாலும், போலீஸ் பந்தோபஸ்தை எல்லாம் புறக்கணித்து, மக்கள் வெள்ளத்தைப் பார்த்துவிட்டால் மக்களோடு மக்களாக ஒன்று கலந்து பரவசமாகிவிடுவார். அதிலும் பெண்கள், குழந்தைகளைப் பார்த்துவிட்டால் மனம் நெகிழ்ந்து போவார். அந்த நேரு குடும்பத்திற்குத்தான் இம்மாதிரியான மக்களைக் கவர்ந்திடும் காந்தசக்தி இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இளம் வயதில் சிறைச்சாலை வாசம் பொதுப்பணிக்கே தன்னை அர்ப்பணித்து குடும்பம், சுயநலம், சுயதேவை என்பதையே மறந்து நாட்டின் உயர்வே தன் கடைசி மூச்சாக வாழ்ந்து காட்டியவர்.

இந்தியா சுதந்திரம் பெற்ற ஆகஸ்ட் திங்கள் 14ஆம் நாள் நள்ளிரவு ஜவஹர் ஆற்றிய பாராளுமன்ற உரை நம் காதுகளில் இன்னும் ஒலிக்கின்றது. தூங்குபவர்களைத் தட்டி எழுப்பிய வீராவேசமான சொற்கள், அதேபோல் ஒவ்வொரு குடியரசு தினத்திலும் செங்கோட்டையில் அவர் பேசிய சொற்கள், நம் மனதை உலுக்கிவிடும். அன்னிய ஆக்ரமிப்பு ஏற்பட்ட போதெல்லாம் கடுமையாக எதிர்த்து நாட்டின் பாதுகாப்பில் நம்மைப் பங்குகொள்ள வைத்த பெருமை அவரையே சாரும்.


முதன்முதல் நான் சிறுமியாக இருந்தகாலத்தில், ஜவஹர், குடும்பத்துடன் சென்னைக்கு வந்தபோது என் தகப்பனாருடன் அவரைச் சந்தித்தேன். அதன் பிறகு பலமுறை- எப்பொழுது அவர் சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் பேசினாலும் நான் கேட்கத் தவறுவது கிடையாது. பாரதப்பிரதமர் முதல்முறை சென்னைக்கு வந்தபோது பெண்கள் சார்பில் வரவேற்பு வாசித்தளிக்கும் பாக்கியம் எனக்குக்கிடைத்தது. அது என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி. அதன்பின் பலமுறை சமூக நலவாரியத்தின் கூட்டங்களுக்கு டெல்லி போகும்போதெல்லாம் பண்டித்ஜியை நெருங்கி, சந்தித்துப் பேசும் வாய்ப்பு ஏற்பட்டதுண்டு. அத்துடன் என் தகப்பனாருடன் அகில இந்திய காங்கிரஸ் மஹாசபைக் கூட்டங்களுக்கு நான் ஜவஹர்லால் அவர்களின் பேச்சைக் கேட்கவே போவது வழக்கம். ஆவடி காங்கிரசின்போது சேவாதளப் படைக்கு ஸ்ரீமதி மஞ்சுபாஷிணியுடன் பொறுப்பேற்ற காலத்தில், ஜவஹர்லால் அவர்களைத் தினந்தோறும் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது

கடைசியாக புவனேஸ்வர் காங்கிரஸ் மஹாசபையில் நேருவின் ஆழ்ந்த கருத்துக்களைக் கேட்டபோது அதுதான் அவருடைய கடைசி காங்கிரஸ் கூட்டம் என்று கனவில்கூடக் கருதவில்லை. அவர் மறைந்த செய்தி பேரிடியாக இருந்தது.

என்னுடைய தகப்பனாரிடத்தில் நேருவிற்குப் பெரிதும் மரியாதையும், மதிப்பும் உண்டு. தேசிய அபிவிருத்திக் கௌன்சில் கூட்டங்களில் பல்வேறு ராஜ்ய அமைச்சர்கள் பங்கெடுப்பார்கள். எந்த ஒரு முக்கியமான, சிக்கலான பிரச்சினையானாலும் நேருஜி அவர்கள் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக இருந்த என் தகப்பனாரிடம் யோசனை கேட்பாராம். தமிழ்நாட்டின் அரசியல் நிர்வாகம் மிக உயர்ந்த தரமுள்ளதாக இருந்தது அன்று. ஜவஹர்லால்ஜிக்கு எப்பொழுதுமே தமிழ்நாட்டிற்கு வருவதில் மிகுந்த ஆவல் உண்டு. காரணம், இங்கு தமிழ் மக்கள் கலை, கலாசாரம் மிகுந்தவர்கள், அமைதி காப்பவர்கள், கூட்டங்களில் discipline ஆக நடந்து கொள்வார்கள், கவனமாகச் சொற்பொழிவுகள் கேட்டு, திறமையாக அரசுப் பணிகளைச் செய்யக்கூடியவர்கள் என்பது அவருடைய முடிவு.

பண்டித்ஜி மறைந்தபோதும் அவருடைய அஸ்தியை என் தகப்பனார்தான் சென்னைக்குக் கொண்டு வந்தார்கள். ராஜாஜி மண்டபத்தில் மக்கள் வெள்ளம் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தியது மறக்கமுடியாத நிகழ்ச்சி. அதேபோல அவருடைய அஸ்தியை ரயிலில் எழும்பூரிலிருந்து நாகர்கோயில் வரை எடுத்துச் சென்றபோதும் நான் என் தகப்பனாருடன் சென்றேன். இரவு முழுவதும் நடுநிசியிலும், ஒவ்வொரு ஊரிலும், ஆண்கள், பெண்கள் கூட்டம் சமுத்திரமாகத் திரண்டு வந்து, ஏதோ அவர்கள் வீட்டில் துக்கம் நேர்ந்ததுபோலக் கதறி அழுத காட்சி இன்னும் என் கண் முன் நிற்கின்றது.

இவ்விதமாக மக்களின் நடுவே ஒரு தனி இடம் பெற்று, முடிசூடா மன்னனாக, பெண்களின் பெரும் ஆதரவாளராக, குழந்தைகளின் அன்புக்குரியவராக, ஏழை, எளிய மக்கள், மலைச்சாதியினர், தாழ்த்தப்பட்டவர்களின் காப்பாளனாக, இந்தியாவைப் புனர்நிர்மானம் செய்த சிற்பியாக, உலக மஹாமேதையாக அமைதி காக்கும் தலைவனாக, வாழ்ந்து மறைந்த தலைவரின் நூற்றாண்டு விழாவில், அமரர் ஜவஹர்லாலிற்கு நம் அஞ்சலியைச் செலுத்துவோமாக!



# மகாத்மாவின் மகத்தான சீடர்

**திருமதி டி.என். அனந்தநாயகி**

**நே**ரு இந்நாட்டு மேரு பர்வதம் போன்று பாதுகாப்பையும் பெருமையையும் சேர்த்துக் கொடுத்தார். அவர் உயிருடன் இருந்தவரை இந்நாட்டில் பாதுகாப்பு அரணாகவும் ஜனநாயகச் சிற்பியாகவும் வாழ்ந்தார்.

**வளமைக்கும் பாதை**

உரிமை பெற்ற நாடுகள் எல்லாம் மக்களாட்சியை நிலை நிறுத்தவில்லை. அதேபோல் உரிமை பெற்ற நாடுகள் எல்லாம் வளமைக்கும் பாதை அமைத்துக் கொள்ளவில்லை. நேரு என்ற தலைவன் இந்நாட்டில் ஜனநாயகத்தையும் மலர வைத்து, திட்டமிட்ட பொருளாதாரத்தின் வாயிலாக வளமைக்குப் பாதையையும் அமைத்துக் கொடுத்தார் என்ற உண்மையை யாரும் மறக்க இயலாது; மறுக்கவும் முடியாது.

**இந்தியா ஒரு பெரிய ஜனநாயக நாடு**

நம்மோடு சுதந்திரம் பெற்ற பர்மாவிலோ, பாகிஸ்தானத்திலோ மக்கள் ஆட்சி இல்லை. இராணுவ ஆட்சியில் மக்கள் உரிமைகள் இன்றி வாழ்கின்றனர். வன்முறைச் செயல்கள் தலைவிரித்தாடுகின்றன. தேர்தல் கோரி மக்கள் பேரணி நடத்துகின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் உயிரை விடுகின்றனர். ஆனால் இந்தியா மட்டும் இன்று உலகத்திலேயே ஒரு "பெரிய ஜனநாயக நாடு'' என்று அழைக்கப்படுகிறதென்றால், அதற்குக்காரணம் நேரு பெருமான்தான்.

இருபத்தொரு வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குறுதியளிக்கப்பட்டது. படித்தவர், படிக்காதவர், ஏழை, பணக்காரர், ஆண்-பெண் என்ற வேற்றுமையின்றி வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை என்றதும் உலகமே வியந்தது. பல வளர்ந்த நாடுகளில்கூட பெரும் போராட்டத்திற்குப் பின்தான் பெண்கள் ஓட்டுரிமை பெற்றனர். ஆனால் இந்தியாவில் வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை வழங்கப்பட்டது. பல பேர் இது அணுகுண்டுகளை விளையாடச் சிறுபிள்ளைகளிடம் கொடுப்பது போன்றது என்று அச்சுறுத்தினர். ஆனால் இவற்றையெல்லாம் கண்டு அஞ்சாது நேரு பெருமான் எல்லோருக்கும் வாக்குரிமையளித்தார். இல்லையெனில் ஏழை-எளிய மக்களுக்கு அரசியலில் பங்கே இருந்திருக்காது. எத்துணைப் புரட்சிகள் வெடித்திருக்குமோ! எண்ணிப் பார்க்க இயலாது. தேர்தலுக்குத் தேர்தலாவது ஏழை-எளிய மக்களை அரசியல்வாதிகள் கட்டாயம் அணுகியே தீரவேண்டும். அவர்கள் ஓட்டுரிமை பெற்றிருப்பதால் இந்நாட்டில் நன்மையிலும் தீமையிலும் தங்களுக்கும் பங்குண்டு என்று நினைக்கிறார்கள். இல்லையெனில் இந்நாட்டின் ஒற்றுமையும் உறுதிப்பாடும் என்றோ தவிடு பொடியாகியிருக்கும்.

**வெளிநாட்டுக் கொள்கை**

நம் போன்று அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட நாடுகளுக்கு அருமையான வெளிநாட்டுக் கொள்கையை வகுத்துக் கொடுத்தார். பஞ்ச சீலக்கொள்கையைப் பாருக்குப் பறைசாற்றினார். வல்லரசுகளுக்கு வால் பிடிக்கும் நாடுகளாக இல்லாமல் ''அணி சேரா நாடுகள்'' என்றஅற்புதமான கொள்கையினை வகுத்துக் கொடுத்தார். பிற அணி சேரா நாடுகளுக்குப் பாரதம் தலைமையேற்றது என்று உணரும்போது எவ்வளவு பெருமை கொள்கிறோம்.

**சமதர்மக் காவலர்**

சமதர்மம், சமவாய்ப்பு, சமத்துவம், சமயச்சார்பின்மை போன்ற அரும்பெரும் குணங்களின் மொத்த உருவம் ஆவார் அவர். இந்நாட்டு அணைக்கட்டுகளைக் கட்டி அவற்றை நவீன காலக் கோயில்கள் என்று குறிப்பிட்டார். உணவு உற்பத்தியைப் பெருக்கினார். அதே போன்று பெரும்பெரும் தொழில்களையும் ஆரம்பித்தார். எல்லா வல்லரசுகளுக்கும் நண்பராயிருந்தார். உலகத்தின் உதவியைப் பெற்று, தான் பிறந்த நாட்டை முன்னேற்றினார்.

அவர் தேசத்தை நேசித்த தலைவன். உண்மையின் பிறப்பிடம்; எளிமையின் இருப்பிடம்; சிறந்த ஜனநாயகவாதி; சீரிய சமதர்மவாதி; மகாத்மாவின் மகத்தான சீடராகிய அவர் இளைஞர்களுக்கு ஓர் ஒப்பற்ற வழிகாட்டி.



# தேசிய மறு சமர்ப்பண நாள்

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களை நினைவுகூரும் வகையில் 'தேசிய மறு சமர்ப்பண நாள்' நிகழ்ச்சி தமிழ்நாடு அரசு சார்பில் சென்னையில் 31.10.88 அன்று நடைபெற்றது.

அன்று காலை 10.30 மணியளவில், ராஜாஜி மண்டபத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருமதி இந்திராகாந்தியின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர், திருமதி. அக்கம்மா அலெக்சாண்டர், மாண்புமிகு தமிழ்வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம், ஆலோசகர் திரு. ஆ.பத்மநாபன், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். ராஜேந்திரன், செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு செ.ராம்தாஸ், மற்றும் பிரமுகர்கள் பலரும் திருமதி இந்திராகாந்தியின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

அந்நிகழ்ச்சியின்போது, மாணவ மாணவிகள் பக்திப்பாடல்கள் இசைத்தார்கள்.

பிற்பகல் மூன்று மணியளவில் மெரினாக் கடற்கரையில் உள்ள காந்தி சிலையிலிருந்து மாநிலக் கல்லூரி வரை மாணவ மாணவிகளின் அமைதி அணிவகுப்பு நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவிகள் கலந்துகொண்டார்கள்.

அதைத் தொடர்ந்து, மாலை நிகழ்ச்சிகள் நான்கு மணியளவில் ராஜாஜி மண்டபத்தில் தொடங்கின. தொடக்கத்தில், பள்ளி மற்றும் இசைக் கல்லூரி மாணவ மாணவியரின் இசைநிகழ்ச்சி நடைபெற்றது.

ஐந்து மணியளவில் திரு. பித்துக்குளி முருகதாஸ் தேசபக்தி மற்றும் பக்திப் பாடல்களைப் பாடினார்.

5.30 மணியளவில் நடத்தப்பட்ட தேசிய மறு சமர்ப்பணநாள் சிறப்புக் கூட்டத்திற்கு மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தலைமை தாங்கினார். இதில் ஆளுநரின் துணைவியார் திருமதி அக்கம்மா அவர்களும், பல்வேறு மதத்தைச் சேர்ந்த பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள்.

அரசு தலைமைச் செயலாளர் தம் வரவேற்புரையில் ''இந்திரா காந்தி அவர்களின் நல்ல எண்ணங்களைக் கடைப்பிடிக்க, நாமெல்லாம் உறுதி எடுத்துக் கொள்ளும் நாளாக இந்நாள் அமைந்திருக்கிறது. இந்தியாவில் வறுமை நீங்கவும், சமயச் சார்பற்ற மக்களாட்சி நிலைபெறவும், சாதிமத வகுப்பு மாய்மாலங்களை விரட்டியடிக்கவும் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு பாடுபட்டவர் திருமதி இந்திராகாந்தி. அவர்களோடிருந்து பணியாற்றிய பெருமையுடைய நம்முடைய ஆளுநர் அவர்களின் தலைமையில் தேசிய மறுசமர்ப்பணநாள் நிகழ்ச்சி நடப்பது மிகவும் பொருத்தமானதாகும்'' என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் தலைவி திருமதி ஆண்டாள் தாமோதரன், பேராசிரியர் டாக்டர் சகன்லால் சாஸ்திரி, தென்னிந்திய திருச்சபையின் துணைப்பேராயர் அருள்திரு எச்.எஸ். தனராஜ், பேராசிரியர் முப்தி சலாவுதீன் முகமது அயூப், மயிலை குருஜி சுந்தரராம சுவாமிகள் ஆகியோரும் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அவர்களின் அருமை பெருமைகளைப் பற்றி உரையாற்றினார்கள்.

தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் உரையாற்றும்போது, ''நாட்டைச் சூழ்ந்துள்ள வன்முறையே இந்திரா மறைவுக்குக் காரணமாகியது. அத்தகைய வன்முறையை, கொலை வெறியை ஒழிக்க நம்மை நாமே அர்ப்பணிக்க இந்த நாளில் நாம் உறுதி பூணவேண்டும்.'' என்றார்.

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ.பத்மநாபன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது: ''இந்த நாளிலே நாமெல்லாம் ஒரு பெண்மணிபற்றி, வீராங்கனை பற்றி நினைப்பது உலகச் சரித்திரத்தின் சிறப்பான நிகழ்ச்சியாகும். இந்தியாவை முன்னேற்றப் பாதையில் செலுத்த இந்திராகாந்தியவர்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஒருவர் நாட்டுக்காகச் சொத்தை இழக்கலாம். சுகத்தை இழக்கலாம். ஆனால் இந்திரா காந்தியோ தம் உயிரையும் இழந்து பெருமை கொண்டவர். அவர் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.''


—தேசிய மறுசமர்ப்பண நாளையொட்டி பல்வேறு கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் நடத்தப்பட்ட பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு ஆளுநரின் துணைவியார் பரிசு வழங்கினார். மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமையுரையின்போது தெரிவித்ததாவது:

''ஏழாண்டுக் காலம் திருமதி இந்திரா காந்தியிடம் பணியாற்றியவன் நான் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். அவர் எப்போதுமே ஒருமைப்பாட்டுக்காகவும், ஒற்றுமையைக் காக்கவும், மதச்சார்பின்மையை நிலைநாட்டவும் அயராமல் பாடுபட்டுவந்தார். மத வேறுபாடு இல்லாமல் மொழி வேறுபாடு கருதாமல் எல்லாத் தரப்பு மக்களிடமும் நேச மனப்பான்மையோடு பழகிவந்தார்.

''மகாத்மா காந்தியும், இந்திரா காந்தியும் இந்த மண்ணில் இரத்தம் சிந்தியிருக்கிறார்கள். அந்தப் படுகொலைகளுக்குக் கொலையாளிகள் மட்டும் காரணமல்ல; அந்த அளவிற்கு மதவெறியை இந்த நாட்டில் உருவாக்கிய நமது சமுதாயமே காரணம். இதை நாமெல்லாம் நினைவில் வைத்து, அந்த நிலை நீங்கப்பாடுபட வேண்டும்''.

விழாமுடிவில், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. நா.கிருஷ்ணபாரதி நன்றி கூறினார்.

## இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:



# பல் மருத்துவ இயலில் அறிவியலின் பங்கு

அறிவியல் வளர்ச்சியால் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வாழ்க்கை முன்னேற்றம், சுக வாழ்வு, ஆயுள்கூடல், ஆக்கத் துறையில் உயர்வு போலப் பல தரப்பட்ட நன்மைகளை அறிவியலினால் பெற்றுள்ளோம்.

இந்த அறிவியல் வளர்ச்சி பல் நோய் மருத்துவத் துறையிலும், பெரும் அளவிற்கு நன்மை பயந்துள்ளது. மாறாக, பல் நோய் உண்டாக, இன்றைய வாழ்க்கை முறை ஒரு வங்கயான காரணமாக உள்ளது. எனினும் சிகிச்சை முறையினால் பற்கள் நலம் காண்கிறோம்.

பண்டைக் காலத்திலும், தற்போதும், ஒரு சிலர் அறிவியல் வளர்ச்சியின்றி வாழ்வதால், நார்ப் பிடிப்புள்ள, பச்சைக் காய்கறிகள், பழங்கள், கிழங்குகளை நன்றாக மென்று தின்கிறார்கள். அதனால் பல் நோய்கள் உண்டாவதில்லை. இன்றோ அறிவியல் வளர்ச்சியினால் உணவு ஏறக்குறைய மிருதுவானதாகவும், நன்றாக வேக வைத்ததாகவும், உணவுப் பொருள்கள் மிக நுண்ணிய பிரிவுகளாகவும், எளிதில் சீரணிக்கக் கூடியவையாகவும் மாற்றப்பட்டுள்ளன. அதனால் நம் பற்களுக்கு மெல்லுவதால் ஏற்படும் பயிற்சியின்மையாலும், மிகவும் தூய்மையாக்கப்பட்ட மென் சர்க்கரையை நாம் சாப்பிடுவதாலும், பற்கள் பெரும் அளவில் வெகு வேகமாகச் சொத்தை அடைந்து பழுதடைகின்றன. இன்றைக்கு முன்னேற்றம் அடைந்த நாடுகளில் நவீன வாழ்க்கை ஏற்படுத்தும் ஒரு வேண்டாத விளைவாகப் பற்சொத்தை நோய் அதிகமாகப் பரவியுள்ளது. நமது நாட்டில் நகர்ப்புற இளைஞர், குழந்தைகளிடம் இந்தப் பற்சொத்தை மிகப் பரவலாகக் காணப்படுகிறது.



**டாக்டர் ஜே. ஜீ. கண்ணப்பன்**
*பல் மருத்துவப் பேராசிரியர்,*

இதனால்தானோ என்னவோ, நோய் நீக்கும் சாதனைகள் வெகு வேகமாக வளர்ந்துள்ளன. இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையில் கிடைக்கப் பெறாத நன்மைகளை, அறிவியல் முறையில் பெற்றுக் கொண்ட மனிதன், பற்களின் நோயினையும் நீக்கிக் குணப்படுத்த முயன்றான். அவனது கவனம், பற்களில் நோய் வராமல் தடுக்கவும், முடிந்தால் நோய் வந்த பின் அதனை வளராமல் தடுக்கவும் ஏற்பட்ட விளைவால் நாம் பெற விரும்பிய முயற்சியில் அறிவியலை உபயோகப்படுத்தினான்.

ஆராய்ச்சியினால் அறிந்த உண்மைகளில் பல்நோயைத் தடுக்க ஃபுளோரைடு உப்பு பலவகையில் தேவைப்படுகிறது. கர்ப்பமுற்ற தாய் இந்த உப்பினை அருந்துவதால் வயிற்றில் உண்டாகும் குழந்தையின் பற்கள் திறம்பட வளர்கின்றன. பிறந்தபின் சொத்தை இப்பற்களையும் நிரந்தரப் பற்களையும் தாக்குவதில்லை.

குழந்தை பிறந்தபின் சுமார் 8 வயது வரை இந்த ஃபுளோரைடு உப்பு கலந்த உணவைச் சாப்பிடுவார்களேயானால் பற்சொத்தை நோயினை முழுவதுமாகத் தடுக்க முடியும். நவீன ஃபுளோரைடு கலந்த பற்பசையை உபயோகித்தால், முளைத்த பற்களுக்குப் பற்சொத்தை வியாதியினின்று பாதுகாப்பு உண்டு. இன்றைய நாளில், ஃபுளோரைடு உப்பு கொண்ட பற்பசை தயாரிக்கப்படுகிறது.

தாய்மை பெற்றவர்களுக்கு நோய்த்தடுப்பு மருத்துவம் செய்வதன் பேரில், குழந்தை நோய் நொடியின்றி நலமுடன் வளர்கிறது. தாயின் வயிற்றில் வளரும் குழந்தையின் வாயில் உண்டாகும் பற்கள் குறையின்றி நல்ல முறையில் உண்டாகின்றன. மேலும், நலமுடன் உண்டான பற்கள், பிறந்த பின், முளைத்த பற்களைத் தாக்கும் வியாதிகளிலிருந்து காப்பாற்ற உள் வேகம் பெற முடிகிறது. அதனால் பற்களுக்கு நோய் ஏற்படுவதில்லை.

மேலும், சொத்தையான பற்களை நலப்படுத்தும் வகையாக, ஒன்றிய குணத்தில் இயங்கும் மாற்றுப் பொருள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பழைமைக் காலத்தில் தங்கமும், வெள்ளியும் கொண்டு பற்களை அடைத்து வந்தார்கள். அதனுடைய வலுவிற்கு ஒப்பாக இன்று பிளாஸ்டிக் பொருளில் கிடைக்கும் பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அரைக்கும் பகுதியில் உள்ள பற்களின் வண்ணத்திற்கு ஒப்பான பொருள்கள் இன்று தயாரிக்கப்பட்டுள்ளன என்றால், அறிவியல் வளர்ச்சியினால் தான்.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' இது பழமொழி. ஆனால் இன்றோ, முகத்தின் அழகு சீரான பற்களின் அமைப்பில் உள்ளது என்பதை அறிவியலினால் அறிகிறோம்.

சீரற்ற, துருத்திய, கட்டுமான பற்களைச் சீராக்கி, உள்ளடக்கி, முகத்தின் அழகைப் பெருக்க முடியும் தற்போது, பற் சீரமைப்பு மருத்துவம் மூலம் பலனடைந்தோர் பலராவர். இவ்விதமாகச் செயல்படும் மருத்துவ முறையினால், உடலுக்கும், உள்ளத்திற்கும், உருவத்திற்கும் நல்ல பலனைத் தரும்.

**மேலும் ஒருவனுக்கு வேண்டிய, உடல் வளர்ச்சி, படிப்பில் நல்ல நாட்டம், உழைக்க உறுதி, நல்ல மனப்பாங்கு ஆகியவற்றுக்குச் சீரான பற்கள் ஓர் அத்தியாவசிய மான காரணமாகும்.**

பற்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்ச்சி, இன்றைய மக்களுக்கு மிக அதிகமாக உள்ளது. பண்டைய காலத்தில், விஞ்ஞானம் பரவாத காலத்தில், அறிந்த உண்மைகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ள முடியவில்லை. இன்றைய நாளில் செய்திகளைக் கண நேரத்தில் பரப்ப, பல நூதனச் சாதனங்கள் துணை புரிகின்றன. செய்தித் தாள்களும், தொலை பேசிகளும், வானொலி, தொலைக் காட்சிபோன்றவைகளும், பற்களின் நலம், நலம் நாடும் வகை, கடைப் பிடிக்கும் முறைகளைத் துரிதமாகப் பரப்புவதால், மக்கள் கண்டு, கேட்டு அறிந்து நல்ல விதிமுறைகளைத் தினசரி அனுசரிக்கிறார்கள். இதனால் அறியாமையால் நடக்கும் தீய விளைவுகளைக் களைந்து விட்டு, நல்ல விதிகளை அனுசரிக்க முடிகிறது. இதனால் உடல் நலம் காணுவதுபோல், பற்களின் நலம் பாதுகாக்கப்படுகிறது.

பற்களுக்கு ஏற்படும் நோய்களை எப்படிக் கணிக்கிறார்கள் என்று அறிவோம். நமது ஊனக் கண்ணினால் மட்டும் தெரிந்ததை நம்பினால், சில சமயங்களில் சரிவர நோயினைக் கணிக்க முடியாது. பற்களின் பின்புறமும், இரண்டு பற்களுக்கு இடைவெளியிலும் ஏற்படும் நோயினை அறிய ஊடுகதிர்ப் படங்கள் அத்தியாவசியமாகின்றன. திரு. ராண்ட்ஸ்ஸன் கண்டுபிடித்த எக்ஸ்-ரே எனும் ஊடுகதிர் இன்று வரை உள்ளுறுப்பு, எலும்பு, பற்களில் ஏற்படும் வியாதியினையும், வளர்ச்சிக் குறையினையும் கண்டு பிடிக்க ஒரு வரப்பிரசாதச் சாதனமாகும்.

மேலும், ஊடுகதிர்களால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளை அகற்றும் முறையாகக் குறைந்த அளவில் ஊடுகதிர் செலுத்தி, அதனை வெகுவாகப் பெற்றுக் கொள்ளும் படங்கள் எடுக்கப் படுவதால், இன்றைய நாளில் மனிதனுக்கு ஊடுகதிர்த் தொல்லை ஒன்றுமே இல்லை. அறிவியல் ஆராய்ச்சியின் பயனாக விளைந்த நன்மை இது.

திட்டவட்டமாக உடலுறுப்புகளில் எந்த இடத்தில் நோயின் தன்மை உள்ளது என்று அறியக் கணக்கிடும் பொறி ( Computerised Axial Tomography ) மற்றும் தெள்ளத் தெளிவாக அறிய எக்ஸ்-ரே தட்டுப்படங்கள் (Orthophantomography) எடுக்கும் பொறி இன்றைய காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், நல்ல முறையில் நோயின் இருப்பிடம் கண்டுபிடிக்கப்பட்டுச் சிகிச்சை முறைகளைச் செயலாக்க முடிகிறது. மற்றும், இன்றைய நாளில் நிரந்தர ஊடுகதிர்ப் படங்கள் மட்டுமல்லாமல், தாடை வாய் இயங்கும் நிலையில் ஊடு கதிர்ப் படங்கள் ( serial functional Roentgrography, xero radiography) செயல்படுகின்றன.

அறிவியல் வளர்ச்சியால் ஏற்பட்ட பலதரப்பட்ட ஊடுகதிர்களை நோய்க் குணம் காண இன்றைக்கு உபயோகிக்கிறோம். ( Ultraviolet rays, Shortwave, Therapy, infra red rays ) போன்ற மின்சார மாற்றுக் கதிர்கள் பல்நோய் அழற்சியினைக் குணப்படுத்த உதவுகின்றன. தசைமூட்டுப் பிடிப்பினைத் தளர்த்தவும் உதவுகிறது. (Deep x-ray, Cobalt radiation, Radium needles) போன்ற மிக உக்கிரமான மின் கதிர்கள் வாய் பல் இடத்தில் ஏற்படும் கண் மற்றும் கடிப் புற்று வியாதிகளைக் குணப்படுத்த உதவுகிறது.

எனினும், ஒளிக் கதிர் பல வகையில் அறிவியலில் பலனளிக்கிறது. பல் மருத்துவத்திலும் அதன் பலன் பலப்பட உள்ளது. பல் சொத்தை அடைக்கும் பொருள்களில், லேசர் ஒளி கொண்டதாக உள்ளதால், மேற்கொண்டு ஏற்படும் சொத்தையின் காரணமான கிருமி

# குழந்தைகளைச் செம்மையாக வளர்க்க வேண்டும்!

"இந்த நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும், நல்ல முறையில் வளர்த்து வரப்படுகிறார்களா என்று கவனித்துக் கொள்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு என்று நான் கருதுகிறேன். ஏனெனில் குழந்தைகளே இந்த நாட்டின் செல்வம். இந்தச் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுகிறோம் என்பதைப் பொறுத்துத் தான், இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கிறது.

''உலக முழுவதிலும் உள்ள குழந்தைகளின் நினைவு எனக்கு வருகிறது. அவர்களிடம் பலவிதங்களில் வெளிப்படையான மாறுதலைக் கண்டேன். பேசும்மொழிகள் எத்தனை! உடுத்தியிருந்த உடைகள் தான் எத்தனை விதம்! ஆனால் அவர்கள் அழகு முகங்களிலே காணப்பட்ட உணர்ச்சி, அதனால் தோன்றும் கவர்ச்சி, உலக முழுவதிலும் ஒன்றாகவே இருப்பதைக் கண்டேன்.

'குழந்தைகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு அறிவு போதித்து அறிவாளிகளாக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். என்னைக் கேட்டால் அவர்கள் குழந்தைகளை அதனதன் போக்கில் வளரவிட்டால், குழந்தைகள் தாங்களாகவே புத்திசாலிகளாக - அறிவாளிகளாக - விளங்குவார்கள்.

'உலகத்தின் பல விஷயங்களைக் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் அவர்கள் தாங்களாகவே அவற்றைப் புரிந்து கொள்ள நாம் வசதி வாய்ப்புகள் செய்து தரவேண்டும். நாமாக நமது மனப்போக்கின்படி உலக விஷயங்கள் பற்றிய ஞானத்தை அவர்கள் மூளையிலே திணிக்க முயற்சியெடுக்கக்கூடாது.

'குழந்தைகள் செம்மையாக வளருவதற்கு வகை செய்வதுதான் நமது நாட்டின் ஒவ்வொரு அரசியல் கட்சியின் இலட்சியமாகத் திகழவேண்டும். சொல்லப்போனால் இதுதான் முழு முதற் கொள்கையாக இருக்க வேண்டும்.''



– பண்டித ஜவஹர்லால் நேரு

களைத் தாக்குவதால், சொத்தை ஏற்படா வண்ணம் பற்கள் காப்பாற்றப்படுகின்றன. வாயின் மிருது திசுக்களில் அறுவை மருத்துவத்தில் திசுக்களை அறுக்கவோ அல்லது தீய்க்கவோ லேசர் ஒளிக்கதிர்கள் உபயோகமாக உள்ளன.

பொறியியல் துறையின் அனுகூலத்தைப் பல் மருத்துவத்தில் மிகவும் உபயோகிக்கிறோம். 18-ஆம் நூற்றாண்டில் பல் சொத்தையை நீக்குவதற்காகச் சுழலும் கருவியைக் காலால் உதைத்து இயக்கினோம். பொறியியல் நிபுணன் இந்தக் கருவிக்கு மின்சாரத்தில் இயங்கும் இயந்திரம் பொருத்திச் சுழலும் வேகத்தினைப் பெருக்கினான். காலால் உதைத்து இயக்கியபோது ஒரு நிமிடத்திற்கு 400 சுழல்கள், மின்சார உதவியால் 3,000 சுழலாக மாறி, இன்று 20,000 சுழல்களாக உள்ளன. இதனால் பல் மருத்துவனுக்கு அசதியும் ஓய்வும் ஏற்படுவதில்லை. வேலைத் திறனும் அதிகமாயிற்று. கடந்த பத்து ஆண்டுகளில், இந்த வேகம் மிகவும் அதிகரிக்கப்பட்டு ஒரு நிமிடத்திற்கு 6,00,000 சுழல் கொண்டு இயங்கும் ஜெட் எனும் கொள்கைச் சாதனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இன்றைய பல் மருத்துவத்தில், இவ்வளவு அதிக வேகமாகச் சுழலும் கருவிகளை இயக்குகிறோம். வெட்டும் கருவிகள் வைரத்திலும், டங்ஸ்டன் கார்பைடு எனும் சிறந்த உலோகப் பிணைப்புடன் கொண்டிருப்பதால், வெட்டும் தன்மை சுலபமாக்கப்பட்டது. இந்த வேகமும், வெட்டுக் கருவிகளும் உபயோகித்தால் கடினமான இரும்பையோ, கல்லையோ, வெண்ணெயை வெட்டுவது போன்று எளிதில் வெட்டிவிடலாம்.

**பற்களின் மேல் படிந்துள்ள காறைகளை அகற்ற இதுநாள் வரையிலும் கையினால் உபயோகிக்கும் காறை நீக்கும் கருவி உபயோகிக்கப் பட்டது. இன்றைய நாளில் கண்ணுக்குப் புலப்படாத கதழ் ஒலியலை அதிர்வு மூலம் பற்காறை அகற்றப்படுகிறது. இதனால் நோயாளிகளுக்கு ஒருவிதத் துன்பமோ, இன்னல்களோ இல்லை. இத்தகைய கதழ் ஒலியலை அதிர்வுச் செயல் மூலம் பற்களைத் தாங்கி இருக்கும் புறத்திசுக்களுக்கோ, ஈறுகளுக்கோ எவ்வகையிலும் தீங்கு இழைக்கப்படுவதில்லை.**


பல் மருத்துவத்தில், உட்காரும் சாதனம், தானே உயர, பின் செல்லத் தாழ முடியும். இதனைப் பட்டன்கள் கொண்டு இயக்கலாம். இதனால் பல் மருத்துவருக்கு அசதி ஏற்படுவதில்லை. நோயாளி மயக்கமுறும்போது, அந்த உட்காரும் சாதனத்தைச் சிகிச்சைப் படுக்கை மாதிரிகூட மாற்ற முடியும். இவ்விதமாகப் பலதரப்பட்ட மாற்றங்களைக் கொண்ட பட்டன்கள் மூலம், தானே இயக்கப்படும் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


இவ்விதமான சாதனங்களால் சாதாரண மக்கள் மட்டும் பயனடைவதில்லை. உலகில் சுமார் 25 சதவீதம் மக்கள் குறைபாடுடன் வாழ்கிறார்கள். ஊனம், உடல் வளைவுகள் கொண்டவர்கள் சாதாரண வாழ்க்கை வாழ முடியாது. அவர்களுக்கு மருத்துவம் செய்யும் வழிமுறைகளிலும் மாற்றம் வேண்டும். இன்று முன்னேற்றம் அடைந்திருப்பதால், அவர்கள் இறந்துவிடாமல் உலகிற்கும், அவர்களுக்கும் பலனாக மறுவாழ்வு பெறுகிறார்கள் என்றால், அறிவியல் வளர்ச்சியால்தான்.

சேவைக்காகப் பாடுபடும் பல் மருத்துவர் தாம் தொழில் காரணமாகச் சில நோய்களுக்கு உட்படுகிறார். உதாரணமாக, நின்று வேலை செய்வதால் காலில் இரத்தக் கட்டு ஏற்படும். நரம்புத் தளர்ச்சியால் இடுப்புவலியேற்படும். நுணுக்கமான கவனிப்பால் கண்கள் பழுதடையும். இவ்விதமாக இளமையிலே முதுமையடைந்து விடுகிறார். இவருக்கு இந்த அறிவியல் வளர்ச்சியால் முன் கூறிய துன்பங்கள் இளவயதிலேயே வராமல் தடுக்கப்பட்டு, நீண்ட நாட்கள் நலமுடன் பணிபுரிய ஏதுவாகிறது.

ஆராய்ச்சியில் பல் மருத்துவம் மிகமிக முன்னேற்றம் அடைந்து வருகிறது. மருத்துவர்கள் பல நுண்ணிய நூதனச் சாதனங்களைத் தம் அறையில் உபயோகிக்கிறார்கள். உலோகங்கள், பிளாஸ்டிக்குகள் போன்ற பொருள்களையும், கருவிகளில் மின்னணு, நுண்பெருக்காடி போன்ற மின்னணுக்கதிர்ச் சாதனங்களையும் ஆராய்ச்சியில் உபயோகிக்கிறார்கள். பல உண்மைகளைக் கண்டுபிடித்துப் பரந்த மனம் கொண்டு ஆட்படுத்துவதால் அறிவியல் வளர்ச்சியால் பல்நோய்ச் சிகிச்சை முன்னேற்றம் அடைந்துள்ளது.

எண்ணற்ற அறிவியல் விதிகள் தோன்றினும், அடிப்படைச் சுகாதார விதியாக 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' எனக்கூறி, உடல் அவயவங்களில் பற்களைப பற்றி வெகுவாகத் தமிழில் கூறி வந்தார்கள். அந்த மொழியின் தத்துவம் இன்னும் சீரோங்கியுள்ளது எனக் கூறுவோமேயானால், அது மிகையாகாது. இன்னும் பற்களின் நலம் பேணப்பட வேண்டுமேயானால், பற்களைத் துப்புரவாகத் தூய்மையாக வைத்துக் கொள்ளுவதன் மூலம், முழுமையான கவனம் செலுத்துதல் வேண்டும்.





## பல்லைக் குறித்துப் பல செய்திகள்

* **பல் நலனுக்கு உகந்த ஆப்பிளுக்குப் பதிலாகப் பேரிக்காய் சாப்பிடலாம்.**
* **குறிப்பிட்ட அளவில் ஃப்ளோரைடு உள்ள இளநீர் அருந்தினால் பல்லுக்கு நல்லது.**
* **வேப்பங்குச்சி, மாவிலை போன்றவற்றில் பச்சையம் (குளோரபின்) உள்ளது. பச்சையத்தைப் பதினைந்து நாட்களுக்கு மேல் பாதுகாப்பாக வைக்க முடியாது.**
* **பச்சையத்திற்குப் பற்சிதைவையும், வாய் துர்நாற்றத்தையும் தடுக்கும் சக்தி உண்டு.**
* **தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், போன்ற மாநிலங்களில் வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப் பட்டவர்கள் அதிகம் பேர் உள்ளனர். இதற்குக் காரணம் வெற்றிலை, புகையிலை உபயோகிப்பதுதான்.**
* **விளையாட்டாகத் தாத்தா, பாட்டி, மாமா, அப்பா, அம்மா என்று குழந்தைகளுக்கு நாம் சொல்லும் போது, பல்தேய்ப்பது எப்படி என்று குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தால் நல்லது.**
* **பனங்கிழங்கு, முருங்கைக் காய் போன்றவற்றை வாயில் போட்டு அரைத்துச் சாப்பிடுவது நல்லது.**

# புதுக்கோட்டை மாவட்டத்தில்

# வளர்ச்சிப் பணிகள்


**ப. செல்வம், இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**புதுக்கோட்டை.**


**தீ** விபத்தாலும், புயல் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குடிசை வாசிகளின் துயர் நீக்கவும்-சொந்த குடிசையின்றி தவித்த மக்களின் உள்ளத்தில் தன்னம்பிக்கையையும் உரிமை உணர்வையும் வளர்க்கும் வகையில் காங்கிரீட் வீடுகளைக் கட்டித் தரவும் அரசு தொடங்கிய உன்னத திட்டம்தான், ஆதிதிராவிடர் கூட்டுக் குடியிருப்புத் திட்டம்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதிதிராவிட மக்களுக்குக் கூட்டுக் குடியிருப்பு இல்லங்கள் உருவாக்கும் பணி செயல்படுத்தப்படுகிறது.

அரசின் அரவணைப்பாலும், மாவட்ட நிர்வாகத்தின் செயல் திறனாலும் வளர்ச்சியும், பொலிவும் பெற்று எழிலுடன் திகழும் புதுக்கோட்டை மாவட்டத்தில், கூட்டுக் குடியிருப்பு இல்லங்கள் 1984-85-ஆம் ஆண்டு முதல் கட்டித் தரப்படுகின்றன.

1984-85ஆம் ஆண்டு முதல் 1987-88ஆம் ஆண்டு வரை தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றின்கீழ், புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ. 4 கோடியே 25 இலட்சம் செலவில் 5,186 வீடுகள் கட்டப்பட்டு, ஏழை ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தொடக்க காலத்தில் வீடு ஒன்றுக்கு ரூ.6,000 என்ற மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டதால் கழிவறைகள், தாழ்வாரம் இன்றி வீடுகள் கட்டப்பட்டன. ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு கழிவறைகள், குடிநீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி செய்து தருவது அவசியமென்ற எண்ணத்தில் வீடொன்றிற்கு ரூ. 6,000 என்பது 1985-86இல் ரூ.9,000 ஆக உயர்த்தப்பட்டது.

அடித்தள மக்களின் நலனுக்காகக் கட்டப்படும் வீடுகள் நல்ல தரமான வீடுகளாக அமைய வேண்டுமென்ற எண்ணத்திலும்- அடிப்படை வசதிகளைத் தாங்களே உருவாக்கிக் கொள்ள வளமற்ற மக்கள் வாழும் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் கூடுதல் வசதிகளை அரசே செய்திட வேண்டுமென்ற நோக்கத்திலும், கூட்டுக் குடியிருப்பு வீட்டின் மதிப்பீட்டுத் தொகை 1987-88-இல் ரூ. 9,000 லிருந்து ரூ. 10,200 ஆக உயர்த்தப்பட்டது.

''மக்களின் தேவையையும் விருப்பத்தையும் நிறைவேற்றும் வகையில் திட்டச் செயலாக்கம் அமைய வேண்டும்'' என்ற இந்தியப் பிரதமரின் எண்ணத்திற்கு வண்ண வடிவம் தரும் வகையில், ஆதிதிராவிடர் கூட்டுக் குடியிருப்புகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

வேறெங்கும் இல்லாத வகையில் இம்மாவட்டத்தில், நான்கு வகையான குடியிருப்பு இல்லங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில், கட்டப்படும் குடியிருப்புகளில் கூடுதலாகச் சமையல் அறையும், குளியல் மேடையும் கட்டித் தரப்படுகின்றன. நிதி இருப்புக்கு ஏற்றாற்போல், ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஆழ்குழாய்க் கிணறு, சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகள் உருவாக்கித் தரப்படுகின்றன.

கூட்டுக் குடியிருப்பு இல்லங்களின் சுவர்கள் சுண்ணாம்புக் கலவையில் கட்டப்பட்டு, சுவர் மற்றும் தரை சிமெண்டினால் பூசப்பெற்று வண்ணப் பூச்சுகளுடன் பொலிவுடன் திகழ்கின்றன.

நடப்பு நிதியாண்டில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 1,320 ஆதிதிராவிடர் குடியிருப்பு இல்லங்களைக் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதில் 80 விழுக்காடு அளவிற்கு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு சாதனைச் சரிதம் படைத்துள்ளது,

ஆதி திராவிடர் கூட்டுக் குடியிருப்புகள் அமைக்கும் பணியில்— புதுக்கோட்டை மாவட்டத்திற்குள்ள ஆர்வத்தைப் பாராட்டும் வகையில் மேலும் 400 வீடுகளை நடப்பாண்டில் இம் மாவட்டத்திற்கு ஒதுக்க அரசு தீர்மானித்துள்ளது.

'குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அடித்தள மக்கள் அனைவருக்கும் நல்ல வீடுகள்' என்ற குறிக்கோளை விரைவில் எய்திட முடியும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

# அண்ணா மாவட்டத்தில் அரசின் நலத்திட்ட பணிகள்

**அ**ண்ணா மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள என்.பஞ்சம்பட்டி, சினனாளபட்டி, ஆரியநல்லூர், கதிர்நாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் கட்டப்பட்ட சமுதாய நலக் கட்டடங்களைத் திறந்து வைத்து, அரசின் நலத்திட்ட உதவிகளையும், ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் திரு வி.சுந்தரம் அவர்கள் வழங்கினார். ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு அண்ணா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு மிருத்யுஞ்சய் சாரங்கி தலைமை வகித்தார். அவர் தமது உரையில் கூறியதாவது:

''தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் திட்டத்தின்கீழ் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள நான்கு கிராமங்களில் ரூ. 2.40 இலட்சம் மதிப்புள்ள சமுதாயக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன. வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் 681 நபர்களுக்கு ரூ. 30 இலட்சம் மான்யத்துடன் கூடிய கடன் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.''

சமுதாயக் கடங்களையும், அரசின் நலத்திட்ட உதவிகளையும் வழங்கிப் பேசுகையில், ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் கூறியதாவது:

''ஏழை, எளிய மக்கள் குறிப்பாக வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் முன்னேற்றத்திற்காக அரசு பல்வேறு நலத்திட்டத்தின் கீழ் பல உதவிகளைச் செய்து வருகிறது. வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடன் மற்றும் மானியத் தொகைகளை உரிய வழியில் பயன்படுத்தி, தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதோடு, பெற்ற கடனைத் திரும்பச் செலுத்தும் பழக்கத்தை மக்கள் கையாள வேண்டும். கிராமப்புற வளர்ச்சித் திட்டத்திற்காகவும், கிராமப்புறத்தில் நிதி ஆதாரங்களைப் பெருக்கும் வகையிலும் ஏற்படுத்தப்பட்ட உயர்மட்டக்குழு அரசிற்கு தனது அறிக்கையை அறிவித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் ஆய்வு செய்து நடைமுறைப்படுத்தப்படும்.''



# சேலம் மாவட்டத்தில் வேளாண்மை வளர்ச்சிப் பணிகள்

சேலம் மாவட்ட வேளாண்மைப் பெருமக்களின் ஒத்துழைப்போடு வேளாண்மைத்துறை நடப்புஆண்டு உணவு உற்பத்திக்கு அடிப்படையான பல சிறப்புத் திட்டங்களை ஏனைய மண், நீர்வள வசதிகளுக்கு ஏற்ப உருவாக்கி, சிறப்பான முறையில் செயல்படுத்து வருகிறது.

இத்திட்டங்களின் விளைவாக நடப்பு ஆண்டில் அரிசியில் 2.05 லட்சம் மெ.டன்னும், சிறுதானியத்தில் 2.15 லட்சம் மெ.டன்னும், பருப்பு வகைகளில் 0.457 லட்சம் மெ.டன்னும்பருத்தியில்0.43லட்சம் பேல்களும், கரும்பில் 1.76 லட்சம் மெ.டன வெல்லமும் உற்பத்தி செய்திட வேளாண்மைத்துலற நடவடிக்கை எடுத்துள்ளது.

இறவை கம்பு சிறப்பு உற்பத்தித் திட்டத்தின் கீழ் மேட்டூர் மற்றும் ஆத்தூர் உட்கோட்டங்களில் 1000 எக்டேர் பரப்பில் நவீன உத்திகளைப் பின்பற்றி எக்டேருக்கு 4 டன் உற்பத்தி செய்ய திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதன் வாயிலாக எக்டேருககு 3.5 முதல் 4.5 டன் வரை மகசூல் கிடைத்தது. மேட்டூர் கோட்ட திட்டப் பகுதியில் அதிகபட்சமாக எக்டேருக்கு 5.888 டன் மகசூல் கிடைத்துள்ளது

மானாவாரி சோளத்தில் எக்டேருக்கு 1 டன் மகசூல் சிறப்பு உற்பத்தித் திட்டத்தின் கீழ் முன்பட்ட மானாவாரி நிலக்கடலை அறுவடைக்குப் பின்னர் அடுத்த மாதம் மத்திக்குள் இரண்டாம் போகமாக சாகுபடிக்கு வரும் சுமார் 35000 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்படும்.

பயறு வகைகளில் தற்பொழுது எக்டேருக்குக் கிடைத்துவரும் மகசூலான 350 கிலோவில் இருந்து 1 டன்னாக உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் சில உற்பத்தி மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தேசிய பயறு வகை உற்பத்தித் திட்டம், மோகனூர், புதுச்சத்திரம், எடப்பாடி, தாரமங்கலம் ஆகிய ஒன்றியங்களில் துவரை, உளுந்து, பச்சைப்பயறு வகைகளில் ரூ. 4,73,775 மான்யத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனடையும் விவசாயிகளுக்குப் பயறு வகை சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்கள் அனைத்தும் மான்யமாக வழங்கப்படுகிறது.

நெல் சிறுதானியங்களின் விதைகள் மற்றும் பூச்சி மருந்துகள் ஆகியவை ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 25 சத மானியத்தில் வழங்குவதன் மூலம ரூ. 1,26,000ம் மானியமாக அளிக்கப்படுகிறது. சுமார் 2000 ஆதிதிராவிட விவசாயிகள் பயனடைகின்றனர்.

கல்ராயன் மலை, பச்ச மலை, கொல்லி மலை இவைகளில் பட்டு வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ரூ. 14.68 லட்சம் அனுமதித்துள்ளது. பழங்குடியினர்களுக்குக் கறவை மாடுகள், உழவு மாடுகள், ஆடுகள் விநியோகம் செய்ய ஏர்க்காடு, கொல்லிமலை, கல்ராயன் மலை, பச்ச மலை, அரனூத்து மலை ஆகிய மலைப் பகுதிகளுக்கு ரூ. 15 லட்சம் அரசு அனுமதித்துள்ளது. நடப்பு ஆண்டில், அரனூத்து மலை மற்றும் ஏர்க்காடு மலைப்பகுதிகளில் தலா ஒரு பள்ளி வீதம் 2 உண்டு உறைவிடப்பள்ளிகள் துவக்க அரசு அனுமதி அளித்துள்ளது. கொல்லிமலையில் உள்ள செங்கரை கிராமத்து உண்டு உறைவிடப் பள்ளியையும் கல்ராயன்மலையில் கரியகோவில் கிராமத்து உண்டு உறைவிடப் பள்ளியையும் 8-வது வகுப்பு வரை உயர்த்த அரசு அனுமதி அளித்துள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1988-89ஆம்

# பாரதமாதா வாழ்த்து



வாய்மையும் அறமும் பிறர்துயர் களையும்
வண்மையும் தியாகமும் இணைதீர்
தூய்மையும் ஒழுங்கும் கலியினில் வளர்ந்து
துலங்கிடத் தீமையுந் துயரும்
சேய்மையுற் றகலத் தோன்றிய கருணைச்
செங்கதி ரவனெனத் தகைய
தாய்மையன் பிள்ளை யீன்றபா ரதத்தாய்
தாண்மலர் பணிவதே தவமாம்!

மேல்நாட்டார் ஏசுவென வியந்துருக்கர் நபியென்ன
விளங்கும் இந்த
மாநாட்டார் கண்ணபிரான் மலர்ந்தமொழிப் படிமாலின்
வரவே யென்று
தானாட்டப் பவுத்தரெலாந் தமதிறையாம் புத்தரெனச்
சாற்றா நிற்கும்
பூநாட்டுந் திருவடியான் புகழ்நாட்டு வார்பிறப்பும்
புனித மாமே!

[1925-ஆம் ஆண்டில் வெளிவந்த 'காந்தி புராணம்' என்னும் நூலில், பண்டிதை அசலாம்பிகை அம்மையார் அவர்கள் பாடிய பாடல்].

—அனுப்பி உதவியவர்: க.அ. ஆறுமுகன்



ஆண்டிற்கு சேலம் மாவட்டத்திற்கு ரூ. 434.955 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 13211 புதிய பயனாளிகளுக்கும், 7455 பழைய பயனாளிகளுக்கும் உதவியளிக்க அரசு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1225 நபர்களுக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டிற்கு 22.640 லட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 31.8.88 வரை 10.805 லட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 2628 புதிய வேலைகளும் 1636 நிலுவை வேலைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டதில் i316 புதிய மற்றும் 1495 நிலுவை வேலைகளும் முடிக்கப்பட்டுள்ளன. இதில் ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக 2566 நபர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டிற்கு ரூ.285.980 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை தொகுப்பு அணி வீடுகள், சுகாதாரக் கழிப்பறைகள், சமூகக்காடுகள், பாசனக் கிணறுகள் தோண்டுதல் போன்றவற்றிற்குச் செலவிடப்பட திட்டம் தீட்டப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கு 14.056 லட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31.8.88 வரை 3.721 லட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கொத்தடிமைகள் மறு வாழ்விற்காக 120 தொகுப்பு அணி வீடுகள் கட்டுவதற்குத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஏர்க்காடு மலைப் பகுதி, மேட்டூர் மற்றும் சேலம் வட்டங்களில் தோட்டக்கலை வளர்ச்சிப் பணிகள் செயலாற்றப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் பழச் செடிகள் 400 எக்டேர் பரப்பில் நடவு செய்யவும், காய்கறி விதைகள் 1500 கிலோ விநியோகித்து 2260 எக்டேர் பரப்பு கொண்டு வரவும், வாழைக் கன்றுகள் 1.25 லட்சம் எண்கள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கவும் மொத்தம் ரூ. 14.50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 1988 ஆகஸ்ட் திங்கள் வரை ரூ. 4.80 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**மு. கிருஷ்ணன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சேலம்.**



# வளர்ச்சிப் பாதையில் திருச்சி மாவட்டம்

"கிராமங்கள்தான் தேசத்தின் உயிர்நாடி. கிராமங்கள் வளர்ச்சி அடைந்தால்தான் தேசம் வளர்ச்சி அடைய முடியும்' என்று நமது தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள் கூறினார். அதே போன்ற ''எந்த வளர்ச்சிப் பணியும் கிராமங்களில் வாழும் ஏழை எளிய பிரிவினரின் நலத்தை அடிப்படையாக வைத்துதான் தொடங்க வேண்டும்' என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கூறியுள்ளார். இந்த தத்துவத்தின் அடிப்படையில்தான்இன்று நமது கிராமங்களில் வாழும் மக்கள் மேம்பாட்டிற்காகவும் சமுதாயத்தில் நலிவுற்ற நிலையில் வாழும் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களை முனைப்புடன் செயலாக்கி வருகிறது.

தமிழ்நாட்டின் மையப்பகுதியில் சிறப்புற விளங்கிடும் மாவட்டம் திருச்சி மாவட்டம் ஆகும். இம் மாவட்டம் தொழில் துறையிலும் விவசாயத்துறையிலும் ஏறக்குறைய சரி பங்கு வகித்து வருகிறது. இம் மாவட்டத்தில்தான் இந்தியாவிலேயே மிகச் சிறப்புற விளங்கும் பாரத மிகுமின் நிறுவனம் இயங்கி வருகிறது. அதே போன்று சிமெண்ட் உற்பத்தித் தொழிலிலும் சிறந்து விளங்கி வருகிறது. கரூர்-புகளூரில் இயங்கி வரும் தமிழ்நாடு காகித நிறுவனம் சிறப்பு வாய்ந்ததாகும்.

இம்மாவட்டத்தின் அரும்பாவூர் சிறபங்கள்தான் பூம்பு கார் நிறுவனம் மூலம் மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தொழில் பெருக்கத்தால் இம்மாவட்டம் வளர்ச்சி அடைந்து வருவது போன்று, காவிரி ஆற்றின் பாசனத்தாலும் இம்மாவட்டம் வளங் கொழிக்கும் மாவட்டமாகத் திகழ்ந்து வருகிறது. இருப்பினும் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த மைய அரசும் மாநில அரசும் இணைந்து தீட்டியுள்ள வறுமை ஒழிப்புத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம். தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களைச் சிறப்பான முறையில் செயலாக்கி வருகிறோம். மேலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்காக ஊரக மகளீர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டமும், ஆதி திராவிடர் மேம்பாட்டிற்காக ஜீவன்தாரா திட்டத்தையும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறோம்.



**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 1988-89-ஆம் ஆண்டில் 385.246 இலட்சம் ரூபாய் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, 19,824 நபர்களுக்கு உதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 10,520 நபர்களுக்கு உதவ அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொகை ரூ. 175.580 இலட்சமாகும். கடந்த நான்கு ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 1175 இலட்சம் செலவிடப்பட்டு 76,820 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்திற்கு இம்மாவட்டத்தில் ரூ. 521.166 இலட்சம் நடப்பாண்டில் செலவு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ. 477.506 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு 3378 தொகுப்பு வீடுகள் கட்ட திட்டமிட்டு,இதுவரை 2,013 தொகுப்பு வீடுகளும், 116 சமுதாய மன்றங்கள் கட்ட திட்டமிடப்பட்டு 84 சமுதாய மன்றங்களும், 32 பள்ளிக் கட்டடங்களைக்கட்டதிட்டமிட்டு,இதுவரை 11 ப்ள்ளிக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற கிராம மக்கள் சுகாதாரத்தை பேணிக்காக்க 82 கழிப்பறைகள் கட்டத்திட்டமிடப்பட்டு அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 1,685.885 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதனால் 12,173 வேலைகள் எடுத்துச் செய்யப்பட்டுள்ளன. 7,537 தொகுதி வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் 93.10 இலட்சம் மனித சக்தி நாட்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

**ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு-உறுதியளிப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 387.910 இலட்சம் ரூபாய் செலவிட அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு 18.759 இலட்சம் மனித சக்திநாட்கள் வேலைவாய்ப்பு கொடுக்க திட்டமிடப்பட்டு இது வரை 12.77 இலட்சம் மனித சக்தி நாட்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. இந்த மனித சக்தி நாட்களை பயன்படுத்தி தொகுதி வீடுகள் கட்டுதல் போன்ற 2,606 பணிகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இது வரை 1,833 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 1,493.790 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு திட்ட சாதனைகள் எய்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 88.60 இலட்ச மனித சக்தி நாட்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் அரசு குறியீட்டு அளவிற்கு மேல் சாதனைகள் எய்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**வேளாண்மை உற்பத்தி பெருக விவசாயிகளுக்கு உதவும் பெருந் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் கிராமங்களில் சிறுபாசன வசதியை மேம்படுத்த 32 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ரூ. 57.288 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டு வருகிறது. நிலச்சீர்திருத்தப் பணிகளுக்கு ரூ. 16.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கடந்த நான்காண்டுகளில் 269.152 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு 12,874 நபர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**ஊரக மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்**

கிராமங்களில் வாழும் நலிவடைந்த பெண்களின் குடும்ப வருவாயினைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கோடு இத்திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது. வருவாய் அளிக்கக்கூடிய தொழில்களில் பெண்களுக்குப்பயிற்சி அளித்து சிறு சிறு குழுக்களாக இணைந்து கூட்டாகத் தொழில் செய்து,பெற்ற பயிற்சியின் மூலம் பொருட்களை உற்பத்தி செய்து, விற்பனை மூலம் வருவாய் பெருக்கிக் கொள்ள இத்திட்டம் வழிவகை செய்கிறது. இக்குழுவில் 15 அல்லது 20 பெண்கள் சேரலாம். ஒவ்வொரு குழுவிற்கு ரூ. 15ஆயிரம் வரை வங்கிகள் மூலம் கடன் கொடுக்கப்படும். இத்திட்டத்தின் அடிப்படையில் இம்மாவட்டத்தில் 250 குழுக்கள் பல்வேறு ஊராட்சிகளில் உள்ள கிராமங்களில் செயற்பட்டு வருகின்றன இதனால் 4,493 பெண்கள் பயன்பெற்று நிரந்தர வருவாய் பெற்று வருகின்றனர். இவர்களுக்கு இதுவரை 153.74 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 50% மான்யமாகும்.




இயற்கை கற்கள் மெருகூட்டுதல், மெழுகு பொம்மை தயாரித்தல், ரெடிமேட் ஆடைகள் தயாரித்தல், பாய் நெசவு போன்றவைகளுடன் செம்மறி ஆடு வளர்த்தல், கறவை மாடுகள் வளர்த்தல், காலணி தயாரித்தல், வாத்து வளர்த்தல், கையுறை தயாரித்தல், ரொட்டி, பண் தயாரித்தல் போன்ற முக்கிய தொழில்களில் இப்பெண்கள் அதிகம் ஈடுபட்டுள்ளார்கள்.

**ஜீவன்தாரா திட்டம்**

ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு இலவசமாகப் புதிய கிணறுகள் அமைத்து நீர்பாசன வசதி செய்து கொடுக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இம் மாவட்டத்தில் 144.80 இலட்சம் மதிப்பீட்டில் 595 பாசனக் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் விரைவில் இப்பணிகள் முடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு ஒப்படைக்கப்படும்.

உலகத் தொழில் அனைத்தும் உணர்ந்து செய்வோம் எனும் மகாகவி பாரதியார் சிந்தனைக்கேற்ப திருச்சி மாவட்டம் நலிவுள்ள அடித்தளத்து மக்களின் மேம்பாட்டிற்கான அரசின் பல்வேறு நலத்திட்டங்களை அல்லும் பகலும் முனைப்போடு செயலாக்குவதோடு எதிர்காலத்தில் திருச்சி மாவட்டம் ஓர் எழிலார்ந்த தொழில் பூங்காவாக விளங்கிட நாம் அயராது பணியாற்றுவோம்!

**சி. பி. இராமநாதன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி.**




ஹெலிகாப்டரைக் கண்டுபிடித்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். அவர் பெயர் என்ன?

கார்ன்ஸ்.

கடல் குதிரை என்பது என்ன?

ஒரு வகை மீன்.

நமது தேசிய மலர் எது?

தாமரை.

நமது தேசிய விலங்கு எது?

புலி.

நமது தேசியப் பறவை எது?

மயில்.

நமது தேசியச் சின்னம் எது?

சாரநாத் ஸ்தூபி.

சுவாமி விவேகானந்தரின் பூர்வாசிரமப் பெயர் என்ன?

நரேந்திரநாத் தத்தா

ஆக்ரா கோட்டையைக் கட்டியது யார்?

அக்பர்.

கால்நடைகளுக்குப் பருத்திக் கொட்டை கொடுப்பது ஏன்?

பருத்திக் கொட்டையில் புரதச் சத்து அதிகமாக இருப்பதால்.

தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்று கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?

சர் ஜகதீஷ் சந்திரபோஸ்.

இந்தியக் கவிக்குயில் என்று அழைக்கப்படுபவர் யார்?

திருமதி சரோஜினி நாயுடு.





## சரித்திரம் படைத்துப் புகழ்பெறுவாய்!

—சிந்தனைச் செல்வன்

கல்வியை விருப்பாய்க் கற்றிடுவாய் - தம்பி
காலத்தை என்றும் மதித்திடுவாய்
பல்கலை பயின்றே உயர்ந்திடுவாய் - தம்பி
பாசச் சுடராய்த் திகழ்ந்திடுவாய்;

மாண்புகள் செறிந்த மாணவனாய் - தூய
மனித நேயம் நிறைந்தவனாய்
சான்றுகள் பெற்றே வாழ்ந்திடுவாய் - அரிய
சரித்திரம் படைத்துப் புகழ்பெறுவாய்

நாடு நமக்கே பொதுவென்பாய் - சூழும்
நல்லது கெட்டது அறிந்திடுவாய்
பாடும் பறவைக் கூட்டம்போல்
பண்பொடு தினமும் வலம்வருவாய்.




கடல் நீரைக் குடிநீராக்கும் முன்னோடித் திட்டச் செயல்பாட்டைத் தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 12-9-'88 அன்று சென்னை மெரினா கடற்கரையில் 'டைட்டானியம் நிறுவனம்' அமைத்துள்ள (டீம்) நிறுவனத்தைப் பார்வையிட்டார். இந்நிறுவனத்தைச் சார்ந்த நிர்வாக இயக்குநர் திரு. சி.எச். கிருஷ்ணமூர்த்தி ராவ், ஆளுநருக்கு இதன் செயல்பாட்டை விளக்கிக் கூறினார்.


தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. எம். எம். இராசேந்திரன் அவர்கள் 8-9-'88 அன்று 'டீம்' நிறுவனத்தைப் பார்வையிட்டார்.

டீம் நிறுவனம் அமைத்துள்ள இந்த முன்னோடித் திட்டத்தின் மூலம் தினசரி 50 ஆயிரம் லிட்டர் குடிநீர் கடல் நீரிலிருந்து தயாரிக்கப்படுகிறது. மிகக் குறைந்த செலவில் கடல் நீரைத் தூசுதும்பு, நோய்க் கிருமிகள் இல்லாத குடிநீராக மாற்றிவிட முடியும்.

உவர் நீரைத் தூய்மையான குடிதண்ணீராகத் தரும் 'பம்பு' ஒன்றையும் 'டீம்' நிறுவனம் தயாரித்துள்ளது.

இத்திட்டம் கடற்கரையோர மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப் பெரிதும் உதவும்.

குடிதண்ணீர் வழங்குவதற்கு வேறு வழியில்லை என்ற நிலை ஏற்படும்போது, இந்தத் தொழில்நுட்ப அறிவாற்றலைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.



# ஆசிய ஜோதி நேரு


டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ்
**துணைவேந்தர், அவினாசிலிங்கம் பெண்கள் மனையியல் மற்றும் உயர் கல்வி நிறுவனம், கோயமுத்தூர்.**


மகாத்மா காந்தி அவர்களால் மனிதருள் மாணிக்கம்எனவர்ணித்து, தனது வாரிசு என வாழ்த்தப்பட்ட ஜவகர்லால் நேரு, காஷ்மீரத்தில் பிராமண குலத்தில் செல்வம் நிறைந்த குடும்பத்தில், பிறந்து, உயர்ந்த பாரம்பரியமும், கண்ணியமும் மிகுந்த சூழ்நிலையில் வளர்ந்தவர். அவரது தந்தையார் மோதிலால் நேரு அக்காலத்தில் புகழ் பெற்ற வழக்கறிஞராக-மாறிவரும் நாகரிகத்திற்கு ஏற்றவராக - பண்பாடு நிறைந்தவராக - யாவருக்கும் உதவும் குணத்துடன் சிறந்த தலைவராக - செல்வாக்குடன் திகழ்ந்தார். ஜவகர்லால் நேருவோ அவருடைய ஒரே புதல்வர். பதினோரு ஆண்டுகள் வேறு மகப் பேறு இல்லாத சூழ்நிலையில் பாசம், பண்பு, அன்பு, கவனம் அனைத்தையும் ஒரு முகமாகக் கொட்டி வளர்க்கப்பட்ட பிள்ளைதான் ஜவகர்லால் நேரு.

கல்விப் பருவத்தில், ஜவ கர்லால் பிறரைப் போல் பொதுப் பள்ளிக்குச் செல்லவில்லை. அதற்குப் பதிலாக வீட்டிலேயே ஒவ்வொரு துறைக்கும், வெவ்வேறு ஆங்கிலத் தாதியர் (ஆசிரியர்) இடமிருந்து கல்விப் பயிற்சி பெற்றார். பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஹேரோவில் சட்டப் பயிற்சியையும் பெற்றார். கல்விப்பயிற்சி முடித்து தாயகம் திரும்பியதும் தனது தந்தையாரின் ஆலோசனைகளையும் கருத்தில் கொண்டு, தேசப் பணியாற்றிட, மகாத்மா காந்தியடிகளின் தலைமை ஏற்று, அவருடைய அரசியல் வாரிசாகப் படிப்படியாக வெற்றிமேல் வெற்றி வாகை சூடி ஆட்சி புரிந்தார்.

ஜவகர்லாலுக்கு எத்தனையோ தனிச்சிறப்புகள்; பார்வையில் கம்பீரம்; செதுக்கிவிட்ட சிற்பம் போன்ற எடுப்பான தோற்றம், பேசும் கண்கள், ஐந்து அடி எட்டு அங்குலம் உயரமுள்ள கட்டமைந்த உடலமைப்பு; கச்சிதமான உடல்வாகு; எப்பொழுதும் புன்னகை தவழும் வசீகரமான முகப்- இந்த நூற்றாண்டில் நேருவைப் போன்று புகைப்படத் தோற்ற மிக்கவர் வேறு எவருமில்லை என்றே கூறலாம்.


தன் குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர், தன் உடன் பணி செய்வோர், அரசியல் காரணமாகத் தொடர்பு கொண்டவர்கள், நண்பர்கள், வெளிநாட்டுப் பிரமுகர்கள் போன்ற அனைவர்பாலும் அளவற்ற அன்பு கொண்டிருந்தார்; ஆனால் அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவே மாட்டார்.

பொதுவாக, அவர் தனிமையை விரும்பிடும் இயல்புடையவராய், கூட்டத்தையும், இரைச்சல்களையும் விட்டு ஒதுங்குபவராயிருந்தும் ஆரவாரமிக்க மக்களின் பெருங் கூட்டத்தைக் காணும்பொழுதெல்லாம், உற்சாக மேலீட்டால், பரிவு நிறைந்த ஈடுபாடு காட்டுவார். பாரதத்தின் விடுதலையைத் தனது அகிம்சா முறைகளால் சம்பாதித்துத் தந்த காந்தியடிகளுக்குப் பின், பல்லாண்டுகள் இந்திய மக்களிடையே ஈடு இணையற்ற தலைவராய்ப் போற்றப்பட்டு, மக்களின் பேரன்புக்குப் பாத்திரராய் விளங்கினார்.

வறுமையின் பிடியுள் வாழும் மக்கள், ஜவகர்லால் நேருவை ஏழைப் பங்காளராக, தங்கள் பாதுகாவலராக, புதிய இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாக, புத்துலகச் சிற்பியாகக் கண்டார்கள். நேரு வருகிறார் என்றால் இந்தியாவின் பட்டி தொட்டி எங்கும், கிராமங்கள் நகரங்களெங்கும் அவரைப் பார்க்க - அவர் முக தரிசனத்தைப் பெற்றிட - அவர் தம் அன்பு நிறைந்த தோற்றத்தை கண்டிட 'பண்டிட்ஜி' என்று அழைத்து மகிழ்ந்திட, கூட்டம் கூட்டமாய்க் கூடிய மக்கள் தொகை லட்சோபலட்சம் என்றால் மிகையாகாது. அவர் பேசுவது புரிகிறதோ இல்லையோ, அதைப் பற்றி மக்கள் கவலைப்படாமல், வெகு தூரத்திலிருந்து நம்மைக் காண வந்திருக்கிறார், அவரை மகிழ்விப்போம், அதன் மூலமாக நமது தொல்லைகளைச் சிறிது நேரமாவது மறக்கலாம், அவர் மூலமாக நமது பிரச்னைகள் தீரும் என்று எதிர்பார்த்து வருவார்கள். அந்த நம்பிக்கை வீண் போகக்கூடாதே என்ற வகையில் தான், நேருவின் ஒவ்வொரு பேச்சும் செயலும் அமைந்திருந்தன.

மக்களிடமிருந்து சக்தியை நாடி அவர் நாட்டில் எல்லா பாகங்களிலும், அடிக்கடி சுற்றுப்பயணம் செய்து வருவார். ஆயிரக்கணக்கான ஆழச்செறிந்த சொற்பொழிவுகளாற்றியுள்ளார். அவர் தம் சொற்பொழிவுகள், எங்கும் காண முடியாத அளவுக்கு, உணர்ச்சி பூர்வமான சொற்பொழிவுகளாய், ஒரு தலைவருக்கும் மக்களுக்கும் இடையே இயல்பாய் நடைபெறும் பேச்சாக, உறவுகளை வளர்ப்பதாய் அமைந்திருந்தன.

ஜவகர்லால் நேரு அதிகாலையில் ஐந்து மணிக்கு எழுந்து காலைக் கடமைகள் முடித்து நாள் முழுவதும் பல பேட்டிகள், கருத்தரங்குகள், பாராளுமன்ற தொடர் கூட்டங்கள், ஆகியவற்றில் கலந்து கொள்ள இரவெல்லாம் கடிதங்களைப் படித்து அவற்றிற்கான விடைகளைத் தன் உதவியாளரிடம் கூறி, விடியவிடிய வேலை செய்து, 1 அல்லது 2 மணிக்குத் தான் உறங்கச் செல்வார். அவருக்கு எழுதப்படும் கடிதங்களுக்கு எல்லாம் உடனே பதில்களும் வரும். இது எவ்வளவு உயர்ந்த பண்பு!



**'ஹம் பஞ்சீ ஏக் டால்கே' என்னும் குழந்தைகள் திரைப்படத்துக்கு விருது பெற்ற திரு ஏவி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள், படத்தில் நடித்த குழந்தைகள் ஆகியோருடன் பண்டித நேரு அவர்கள் காலைச் சிற்றுண்டி அருந்தும் காட்சி.**

எப்பொழுதும் சுத்தமான ஆடைகள் அணிந்து ஒரு சிவப்பு ரோஜாப் பூவையும் இன்று 'நேரு கோட்' என்று வழங்கப்படும் கோட்டில் அணிந்து அனைவரையும் கவரும் வண்ணம் காட்சி தருவார்.

ஜவஹர்லால் நேரு சளையாமல் உழைப்பவர் - கடுமையான உழைப்பால் ஒருவரும் குறைந்து போவதில்லை என்று வற்புறுத்துவார். எப்பொழுதும் காலந்தவறாமையைத் தன் வாழ் நாள் முழுவதும் கடைப்பிடித்தார். யாரும் எந்த நிகழ்ச்சிக்கும் கால தாமதமாக வருவதை ஏற்றுக் கொள்ளவும் மாட்டார். நிகழ்ச்சி நிரல்களைக் குறிப்பிட்டவாறு குறிப்பிட்ட நேரத்தில் நடத்துவதில் உறுதி காட்டுவார். நேரந்தவறாமையை ஒரு பண்பாகப் பாராட்டி கட்டுப்பாட்டை உயர்வாக மதித்தார். ஒரு கணம் கூட வீணாகக் கழிக்காது, நேரம் பயன் உள்ள வகையில் செலவிடப்பட வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார்.

அவர் ஓயாது எழுதிக் கொண்டோ, படித்துக் கொண்டோ மற்றவர்களுக்குக் குறிப்புகளைச் சொல்லிக் கொண்டோ இருப்பார். ஐன்ஸ்டீன், பெர்னார்ட்ஷா போன்ற அறிஞர்களின் உரையிலும், காந்தியடிகளின் கருத்துக்களிலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். அவருடைய அறிவுத் தாகமும் உயர்ந்த உள்ளமும் இந்தியாவின் மீது அவர் கொண்டிருந்த அளப்பரிய ஈடுபாடும் அவர் எழுதிய நூல்களிலும், அவர் தம் அருமைப் புதல்வி இந்திரா காந்தி அவர்களுக்கு எழுதிய கடிதங்களிலும் புலப்படுகின்றன.

ஏறக்குறைய 40 ஆண்டுப் பொது வாழ்க்கையில் அவருடைய கவனம் முழுவதும் இந்தியாவை தன் வாழ் நாள் முழுவதும் நேசித்த தாயகத்தை, தொழில் துறையிலும், கல்வித்துறையிலும், விவசாயத் துறையிலும், பெரும் முன்னேற்றம் கண்டிடும் வகையில், உலக அளவில் உயர்ந்தோங்கும் ராணியாக மாற்றிடும் முயற்சிகளிலேயே, இருந்தது. ஐந்து ஆண்டுத் திட்டங்களுக்கு வித்திட்டு, அவற்றில் நடைமுறையில் வெற்றியும் கண்டார்.

இந்தியாவின் ஜனநாயகத்திற்கு அடிகோலிட்டவர் ஜவஹர்லால் நேரு - ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பும் அரசும் உருவாவதற்கு அயராது உழைத்தார். அவர் காலத்தில் ஜனநாயக மரபுகள் வழுவாது கடைப்பிடித்தார்.

பொருளாதாரத்துறையில் நம் நாட்டைத் துரிதமாக முன்னேற்றப் பாதையில் கொண்டுபோக பொதுத்துறையில் தொழில்களை அரசுடமையாக்கினார். தொழில்களில் நாடு தன்னிறைவு பெற அரசுத்துறையில் தொழிற்சாலைகளை நிறுவினார். இவைகளுக்கெல்லாம்

**அடுத்த இதழில்...**

பண்டித நேரு பற்றி

**சி.ஆர். நரசிம்மன்**

எழுதிய கட்டுரை

* நேரு நூற்றாண்டு விழா செய்திகள்

* மகாகவி பாரதியார், மூதறிஞர் ராஜாஜி பற்றிய கட்டுரைகள் இடம் பெறும்.

அடிப்படையாகவும் அஸ்திவாரயாகவும் இருப்பது அறிவியல் வளர்ச்சியே என்றுணர்ந்து அறிவியல் துறையில் மிகுந்த அக்கறை காட்டி நாடுமுழுவதிலும் நிறுவனங்களையும் உருவாக்கினார். சிறந்த விஞ்ஞானிகளைத் தெரிந்தெடுத்து அவர்களை இந்நிறுவனங்களுக்குத் தலைமைதாங்க வைத்தார்.

நீதிக்கும் அநீதிக்கும் இடையில் முடிவு செய்ய வேண்டிய நெருக்கடி நேரும்பொழுது எல்லாம், நேரு அவர்கள் நீதியின் பக்கமாகவே விரைவில் முடிவு எடுத்தார். எந்த ஒரு முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலையிலும் தமது சொந்த நலன்களைப் பற்றி சிந்திக்காமல் உலகம், தேசம், சமூகம் இவற்றின் நலனிலேயே அக்கறை கொண்டிருந்தார்.

நேருவின் நோக்கு உலகளாவிய பரந்த நோக்கு. உலகப் பன்னாட்டுக் கழகம் (யு என் ஐ) தோன்றவும், செழித்தோங்கவும், தன் முழு ஆதரவையும் அளித்தார். அவர் வரையறுத்துக் கடைபிடித்த அயல் நாட்டுக் கொள்கைகள் இன்னும் உலக அரங்கில் பெரிதும் போற்றப் படுகின்றன. இந்தியாவின் சார்பில் அவர் ஆற்றிய பணிகளால், அவர்தம் இன வெறிக் கொள்கை எதிர்ப்பால், ஆப்பிரிக்காவின் பல நாடுகள் சுதந்திரம் பெற்றிட வழிவகுத்தார். எல்லா நாடுகளிலும் நட்புறவையே நேரு பெரிதும் விரும்பினார். ஆசியாவின் அரசியல் விழிப்புணர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக விளங்கினார்.

இருபதாம் நூற்றாண்டில் ஜவகர்லால் நேருவுக்கு இணையான தேசியத் தலைவர்கள் அதிகம் கிடையாது. ரூஸ்வெல்ட், சர்ச்சில், லெனின், மாவோ, கென்னடி, போன்றோர் வரிசையில் காந்திஜிக்கு அடுத்த படியாக மிகவும் போற்றக் கூடிய நிகரற்ற தலைமைப் பண்புகள் நேருவிடம் பெரிதும் மிளிர்ந்திருந்தன.

புகழின் உச்சியில் அவர் நிற்பதற்குக் காரணங்கள் தான் என்ன? அவருடைய அதிகாரத்திற்கும், கவர்ச்சிக்கும் மூலங்கள் யாவை? இவற்றை அறுதியிட்டுச் சொல்ல முடியாது தான். அவருடைய ஒப்பற்ற ஆளுமை ( personality ) காந்தியடிகளின் வாரிசு என்ற மதிப்பும், மக்கள் மீது அவர் கொண்டிருந்த அந்த அன்பும், அவற்றையொட்டியே அமைந்திருந்த சிந்தனைகளும் செயல்பாடுகளும் தானோ? அல்லது அவருடைய விவேகமும், தைரியமும், சுயநலமின்மையும், நேர்மையும், இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக அவர் செய்த தியாகமும், உலக சமாதானத்திற்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் தானோ? அல்லது தன்னை நம்பியவர்களைக் கைவிடாத தன்மையும், தேவையுள்ளவர்களிடத்தில் அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்திட்ட பாங்கும், அரசியல் சாதுரியமும், தெம்பும், துடிப்பும்தானோ?

அல்லது இவையனைத்துமே ஒருங்கிணைந்த திறமைகள் உள்ளடக்கிக் கிழக்கின் பண்பாட்டையும், மேற்கின் விஞ்ஞானத்தையும் அழகாகக் கலந்து வடிவமைத்தாற் போன்று வாழ்ந்து, மனிதத் தன்மையும், முழுமையும், திறந்த மனதும் கொண்டு விளங்கியமை தானோ?

இவையெப்படி இருப்பினும் அவரே தன்னைப் பற்றிக் குறிப்பிட்டதுபோல அவர் இந்திய மக்களின் மீதும், உலக மக்களின் மீதும் மிகுந்த, ஒப்பற்ற அன்பு செலுத்தி மக்களுக்காகவே வாழ்நாள் முழுவதும் உழைத்தவரே அவர். நாமும் அளவற்ற வாஞ்சையுடன் அவர்தம் அடியொற்றி எதிர்காலப் பணியாற்றுவதே, அவர்தம் நூற்றாண்டு விழாவில், நாம் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலி ஆகும்.

The Woods are lovely, dark and deep
But I have promises to keep
And miles to go before I sleep
And miles to go before, I sleep

—**Robert Frost**

வனப்பு மிக்க சோலைதான், வளமுமிக்க சோலைதான்
எனக்கு உற்ற கடமைகள் எத்தனையோ இருப்பதால்
காதம்பலவும் கடந்துதான் கண்ணயர முடியும் நான்
காதம்பலவும் கடந்துதான் கண்ணயர முடியும் நான்

—ராபர்ட் ஃபிராஸ்ட்



# நேருவின் அன்றாட அலுவல்கள்

**க**டைசிக் காலம் தவிர அவரது வாழ்வில் அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தார். 'இது ஒரு அதிசயம்' என்றுதான் அவரிடம் பணியாற்றியவர்கள் கூறுவர்.

வாரத்தில் ஏழு நாட்களிலும் பணி செய்வார். விடியுமுன் எழுந்துவிடுவார். பின்னர் தேகப் பயிற்சி, (பதவிக்கு வருமுன் சிறிது காலம் குதிரைச்சவாரி, நீச்சல் போன்ற பயிற்சிகள்.)

காலை 8.30 மணிக்குத் தோட்டத்தில் உலா வருவார். பூக்கள், செடி கொடிகள் - பறவைகள் - விலங்குகளைக் காண்பதில் அலாதி பிரியம். அதற்குப் பின்னர் பைல்கள், அதிகாரிகள், மாநாடுகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள், பேட்டிகள், குறிப்புகள், கடிதங்கள் எழுதுதல், பார்லிமெண்ட் கூட்டம், மந்திரிசபை, இலவை, இடையே பகல் மற்றும் இரவு உணவின்போதும் முக்கியமானவர்களுடன் விவாதம்.

இரவு 10 அல்லது 10.30க்கு இரவு உணவு முடித்து தனது அலுவலக அறையில் குறிப்பு எழுத உட்கார்ந்து விடுவார். நடுநிசியைக் கடந்து ஒரு மணி. அதற்குப் பிறகும் 30 நிமிடம் படிப்பார். பின்னர்தான் உறக்கம்.

எழுபது வயதுக்குப் பிறகுதான் பகலில் 30 நிமிடம் ஓய்வு எடுக்கத் தொடங்கினார். அவர் மருந்துகள் உட்கொண்டது இல்லை. தலைவலியே அவருக்கு வந்ததில்லை. ஒரு நாளில் 17 மணி நேரம் அவர் இயங்கிக் கொண்டே இருப்பார். அவருடைய சுறுசுறுப்புக்கு ஈடுகொடுக்க இளைய வயதினராலும் முடிந்ததில்லை. அவருக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. புகைபிடிப்பார். அதுவும் பிற்காலத்தில் குறைந்துவிட்டது. திருப்தியாகச் சாப்பிடுவார்.



# வேளாண்மையில் தன்னிறைவு

**நா. அரிபாஸ்கர், இ.ஆ.ப.,**
**சிறப்பு ஆணையர்-செயலர்,**
**வேளாண்மைத்துறை.**

**ஏ**ந்த ஒரு நாடாக இருந்தாலும் வேளாண்மைத் துறையில் தன்னிறைவு நிலை அடைய முயற்சி செய்வது அவசியமாகும். வேளாண்மைத் துறையில் எந்த ஒரு பொருள் உற்பத்திக்கும் மற்ற நாடுகளை நம்பியிருக்கும் நிலை சரியல்ல. சுய சார்புக்கொள்கை கடைபிடிப்பது அவசியமாகும். நம் நாட்டில் 70 சதவீத மக்கள் விவசாயமே தொழிலாக உள்ள நிலையில் வேளாண்மையில் தன்னிறைவு நிலை அடைவது சாத்தியமானதாகும்.

நம் நாட்டைப் பொருத்தவரை உணவுப் பொருள் உற்பத்தியில் தன்னிறைவு நிலையை அடைந்துள்ளோம். சென்ற சில ஆண்டுகள் வரை, நாம் உணவுப் பொருள் உற்பத்தியில் பின் தங்கிய நிலையில் இருந்தோம். மற்ற நாடுகளிலிருந்து உணவுப் பொருள் பெருமளவு இறக்குமதி செய்து வந்தோம். ஆனால் தற்போது பசுமைப்புரட்சி ஏற்பட்டதன் பலனாகவும், மற்ற தீவிர சாகுபடி முறைகளைக் கையாண்டதாலும், அந்நிலை மாறி ஓரளவிற்குத் தன்னிறைவு நிலையை அடைந்துள்ளோம். ஆனால் இந் நிலை நிரந்தரமானதாகக் கொள்ள முடியாது. ஏனெனில் மக்கள் தொகைப் பெருக்கம், மக்கள் உணவுப் பழக்கங்களில் மாற்றம், நீர்ப் பாசனப் பிரச்னைகள் காரணமாகத் தன்னிறைவு நிலை மாறலாம். அதனால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு நிலையை அடைய முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. உணவுப் பொருள் உற்பத்தியில் கூட தானிய உற்பத்தியில் மட்டும் தன்னிறைவு நிலை காணப்படுகிறது. பருப்பு உற்பத்தியில் பற்றாக்குறை நிலை உள்ளது. நமக்குத் தேவையான பருப்பு அளவில் சுமார் பாதி அளவுதான் உற்பத்தியாகிறது. அதேபோல் எண்ணெய்வித்து உற்பத்தியில் பற்றாக்குறை நிலை நிலவுகிறது. ஆண்டுதோறும் வெளிநாடுகளிலிருந்து சுமார் 1000 கோடி ரூபாய் மதிப்புள்ள எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. அதற்காக நிறைய அந்நியச் செலவாணி செலவாகிறது. இதே போல காய்கறி உற்பத்தி, பழ உற்பத்தி ஆகிய வற்றிலும் பற்றாக்குறை நிலை உள்ளது.

இது தவிர ஆரோக்கியமான வாழ்வு வாழ, குறைந்த பட்சத் தேவை என்ற அடிப்படையில் பார்த்தால் நம் விவசாயப்பொருள் உற்பத்தியில் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. மேலை நாடுகள் உபயோகிக்கும் அளவிற்கும் நம் மக்கள் உபயோகிக்கும் அளவிற்கும் பெருத்த வித்தியாசம் உள்ளது.

மற்றும் விவசாயத் துறையில் தன்னிறைவு என்றால், மக்கள் தேவைக்கு வேண்டிய பொருள் உற்பத்தியை மட்டும் எடுத்துக்கொள்வது சரியாகாது. விவசாயத் துறையில் ஈடுபடும் கால்நடைகளின் தேவை, மக்களின் விறகுத் தேவை, நஞ்சை நிலத்துக்கு வேண்டிய பசுந்தழைத் தேவை முதலியவற்றில் தன்னிறைவு அடைவது அவசியமாகும். மேலும் நாட்டுக்கு அல்லது மாநிலத்துக்குத் தேவையான மொத்த உற்பத்தியை மட்டும் எடுத்துக்கொள்வது பொருத்தமாகாது. தனிப்பட்ட விவசாயிகளின் தேவைகளையும் அவரவர்களே உற்பத்தி செய்ய முயற்சிப்பதும், விளைபொருள் உற்பத்தி தவிர, நிகர வருமானத்திலும் தன்னிறைவு நிலை அடைவதும் அவசியமாகும்.

ஆனால் உண்மையாக எடுத்துக்கொண்டால் தன்னிறைவு என்ற கொள்கைக்கு இன்னும் பரந்த விளக்கம் அளிப்பது அவசியமாகும். விவசாயத்திற்குப் பயன்படும் இயற்கை வளங்களான நிலம், நீர் என்ற இரு இடுபொருள்களிலும் தன்னிறைவு அடைவது அவசியமாகும். நிலத்தைப் பொறுத்தவரை சாகுபடிக்கு ஏற்ற எவ்வகை நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டு வந்து விட்டோம். இனி அதிக உற்பத்தி செய்ய வேண்டும் என்றால், இருக்கும் நிலத்திலேயே உற்பத்தித் திறனை அதிகரிப்பது ஒன்றுதான் வழியாகும். அதனால் அதிக உற்பத்தி அளிக்கக்கூடிய தீவிர சாகுபடி முறைகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். அதற்கு அனுகூலமாக நிலவளத்தைப் பேணிக்

காப்பது அவசியமாகும். தீவிர சாகுபடி செய்யும்போது போகப்போக மண்வளம் குறைந்துகொண்டேவரக் கூடும். இதைத் தடுக்க செயற்கை உரங்கள் உபயோகிப்பதுடன், இயற்கை உரங்களையும், நுண்ணுயிர் உரங்களையும் உபயோகிப்பது தேவையானதாகும். செயற்கை உரங்களைத் தயாரிப்பது செலவு மிக்க ஒரு தொழிலாகும். விவசாயிக்கும் அதனால் உரச் செலவு அதிகமாகும். அதனால் தன்னிறைவு என்பதாவது இயற்கை உரங்களை தேவையான அளவு உற்பத்தி செய்து உபயோகிப்பதாக அமைய வேண்டும். மொத்தத்தில் நிலவளத்தைப் பாதுகாப்பது அவசியமாகும்.

நிலவளத்துககு அடுத்தபடியாக அடுத்த முக்கிய இயற்கை வளம் நீர்வளம் ஆகும். தமிழ்நாட்டில் ஆற்று, மழைநீர் வளத்தில் 95 சதவீதம் உபயோகப்படுத்தி வருகிறோம். இனி புதியதாக அணை கட்டி ஆற்று நீர் கிடைக்க வழியில்லை. மற்றும் நிலத்தடி நீர் வளத்தில் சுமார் 70 சதவீதம் உபயோகப்படுத்தி வருகிறோம். புதிய கிணறுகள் வெட்ட வாய்ப்பு குறைவாக உள்ளது. அநேக மாவட்டங்களில் நிலத்தடி நீர் அதிகமாக உபயோகித்து, கிணறுகளின் நீர் மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. சில இடங்களில் கிணறுகள் வரண்டு போய்விட்டது. உள்ள நீர் வளம் குறைந்து கொண்டே வருகிறது. அதே நேரத்தில் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப விளைபொருள் உற்பத்தித் தேவை அதிகரித்து, நீர்த் தேவையும் அதிகரித்து வருகிறது. இதனால் நீர்ப்பாசனம் உபயோகிப்பதில் தமிழ்நாட்டில் ஒரு இக்கட்டான நிலை தோன்றி வருகிறது. இதைச் சமாளிக்க நீர்ப்பாசனத்தில் சிக்கனம் கடைப்பிடிப்பது அவசியமாகிறது.

நில நீர்வளங்களைச் சரியான முறையில் பராமரிப்பதன் அடிப்படையில் வேளாண் விளைபொருள் உற்பத்தியில் தன்னிறைவு அடைய தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஜனநாயக நாட்டிலே மக்களின் உணவு, உடைத்தேவையை பூர்த்தி செய்வது அரசின் கடமை என்பதால் உணவு, உடைக்குத் தேவையான அளவு விளைபொருள் உற்பத்தி செய்ய தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆரோக்கியமான வாழ்விற்கு ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு தானியத் தேவை 450 கிராம். பயறுவகை 85 கிராம், எண்ணெய் 60 கிராம், காய்கறி 300 கிராம், பழவகை 90 கிராம், பால் 300 கிராம் என்ற அடிப்படையில் உற்பத்தி செய்ய குறிக்கோள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரிசி உற்பத்தியை எடுத்துக் கொண்டால் தற்போது தமிழ்நாட்டில் 24 இலட்சம் எக்டேர் பரப்பில் சுமார் 56 இலட்சம் டன் உற்பத்தியாகிறது. உற்பத்தித் திறன் எக்டேருக்கு 2780 கிலோ ஆகும். இந்தியாவில் அரிசி உற்பத்தித் திறனில் மாநிலங்களுக்கு இடையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை பெற்றுள்ளது. ஆனால் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது. இந்த நேரத்தில் தமிழக அரசு அண்மையில் எக்டேருக்கு 6 டன் நெல் உற்பத்தி என்ற குறிக்கோள் அடிப்படையில் ஒரு திட்டத்தைத் தயாரித்து அமுலாக்கி வருகிறது. இது தவிர வசதி, வாய்ப்பு உள்ள இடங்களில் எக்டேருக்கு 9 டன் நெல் உற்பத்தி என்ற ஒரு திட்டத்தையும் தயாரித்து தமிழ்நாடு முழுவதும் 1 இலட்சம் எக்டேரில் அமுலாக்கி வருகிறது. மற்றும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கடைசி இரண்டு ஆண்டுகளான 1988-89, 1989-90ம் ஆண்டுகளில் விரைவாக நெல் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் மத்திய அரசு சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டம் என்ற திட்டத்தைத் தீட்டி, அதில் தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தி அதிகரிக்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1988-89ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 57 இலட்சம் டன் அரிசி உற்பத்தி செய்வதும், 1989-90ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 59.1 இலட்சம் டன் உற்பத்தி செய்வதும் குறிக்கோள் ஆகும். இத்திட்டங்களின் மூலமும், மற்றும் தீவிர சாகுபடி நடவடிக்கைகள் மூலமும் 2000ம் ஆண்டு வாக்கில் தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தி ஒரு கோடி டன் அல்லது 100 இலட்சம் டன் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் அரிசி உற்பத்தி 75 இலட்சம் டன், சிறு தானிய உற்பத்தி 20 இலட்சம் டன், பருப்பு உற்பத்தி 10 இலட்சம் டன் ஆகும்.

எண்ணெய்வித்து உற்பத்தியை எடுத்துக் கொண்டால் தற்போது தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துக்கள் சுமார் 12 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு, 12 லட்சம் டன் உற்பத்தியாகிறது. மக்களின் எண்ணெய்த்தேவைகளைக் கணக்கிட்டோமானால், இந்த உற்பத்தி 30 இலட்சம் டன் ஆக அதிகரிக்க வேண்டும். இதற்கான தீவிர முயற்சி மேற்கொள்ளப்படும்.

அடுத்து மானாவாரி சாகுபடியில் தீவிர சாகுபடி மூலமும் புஞ்சை பழ சாகுபடி, மரப்பயிர் சாகுபடி ஆகிய முறைகள் மூலமும் தன்னிறைவு நடவடிக்கை எடுக்கப்படும்

ஆக, மொத்தமாக சுருங்கச் சொல்லப்போனால், இயற்கை வளங்களான நிலம், நீர் வளங்களை திறமையாகப் பேணிக்காத்தும் தீவிர சாகுபடி மூலமும் மக்கள் மற்றும் கால்நடைகளின் உணவு, உடை, விறகு, தழை தேவைகளை உற்பத்தி செய்வதோடு, விவசாயிகள் அவர்களின் தேவைகளை அவர்கள் பண்ணைகளிலேயே உற்பத்தி செய்யவும், முடிந்தவரை கிராம அளவிலேயே தன்னிறைவு அடைய முயற்சி மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, விவசாயத் துறையில் எல்லா வகையிலும் தன்னிறைவு அடைய முயற்சி மேற்கொள்ளப்படும்.

**(சென்னை வானொலியில் 17-10-88 அன்று வேளாண்மைத் துறை சிறப்பு ஆணையர் - செயலர் ஆற்றிய உரையிலிருந்து.)**

## நேருவின் அறிவியல் ஆர்வம்

நேருக்கு விஞ்ஞானத்தில் பேராற்றல் உண்டு. இலக்கியம், வரலாறு, ஆட்சியியல் இவற்றில் அவருக்கு நல்ல பயிற்சி. பிரெஞ்சு மொழியில் சிறந்த ஞானம் உள்ளவர். இயற்கை வளத்தில் அவருக்கு அளவற்ற ஈடுபாடு.



புதுமையில் அவர் காட்டிய ஆர்வம் பிரமிக்கத்தக்கது. 1912-ஆம் ஆண்டிலேயே அவர் விமானத்தில் முதன் முதலாகப் பயணம் செய்தார். ரைட் சகோதரர்களின் சாதனைகள் கண்டு தமது 15வது வயதில் துள்ளிக் குதித்தார். 1909ஆம் ஆண்டிலேயே பெர்லின் சென்று 'ஜெப்பிலின்' என்பவரின் ஆகாயக் கப்பலைப் பார்த்தார். 1927இல் பாரிஸ் சென்று உலகம் சுற்றித் திரும்பிய லிண்ட்பெர்க் வருகையைக் கண்டார்.

1960இல் சோவியத் விண்வெளி வீரர் ககாரின் டில்லி வந்தபோது ஒரு குழந்தையின் உற்சாகக் களிப்புடன் அவரை வரவேற்றார். அவர் மனம் எப்போதும் தேடுவதில், ஆராய்வதில், புதுமை செய்வதில், கண்டுபிடிப்பதில் திளைத்திருந்தது. இயற்கையை வெற்றி கொள்ளும் மனித முயற்சியின்பால் அவர் எப்போதும் தளராத அக்கறை கொண்டிருந்தார்.

# சிவகங்கையில் கிராபைட்



தமிழ்நாடு கனிம(Tamin)நிறுவனம் முற்றிலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக 1978ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. தொழில் வளர்ச்சிக்கு உகந்த வகையில் சுரங்கப்பணிகளை நெறிப்படுத்துதல், முக்கியமான தொழிற்கனிமங்களை வணிக முறையில் வெட்டியெடுத்துத் தொழில்களுக்கு அளித்தல் போன்ற பணிகளை இந்நிறுவனம் ஆற்றிவருகிறது. தேர்ந்த அனுபவமுள்ள புவியியல் வல்லுநர்கள், சுரங்கப் பணியாளர்கள், மற்றும் நிர்வாகிகளைக் கொண்டு உயர் தரமுள்ள சுண்ணாம்புக்கல் (Lime Stone) சுண்ணாம்புக் கிளிஞ்சல்கள் (Lime Shell), வெர்மிகுலைட் (Vermiculite), குவார்ட்ஸ் (Quartz), பெல்ட்ஸ்பார் (Feldspar), இளஞ்சிவப்பு குவார்ட்ஸ் (Rose Quartz), சிலிகா மணல் (Silica Sand), வெப்பக் களிமண் (Fire Clay), டாலமைட் (Dolemite) கிராபைட் (Graphite) போன்ற தொழிற் கனிமங்களை வெட்டியெடுப்பதில் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஈடுபட்டு உள்ளது. பன்னாட்டுப் பாறைச் சந்தையில் குறிப்பாக ஜப்பான், மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் தமிழ்நாட்டில் கருப்பு மற்றும் சாம்பல்நிறப் பாறைகளுக்கு ஒரு நிலையான சந்தையை இந்நிறுவனம் உருவாக்கி, உலகச் சந்தையில் தனக்கென ஒருஇடத்தை நிலை நிறுத்தியிருக்கிறது. இந்நிறுவனம் தொடங்கிய ஏழாவது ஆண்டிலிருந்து கனிமங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை நிறுவி வருகிறது. மணலியில் ஒரு பாறையை அறுத்து மெருகிடும் தொழிற்சாலையை நிறுவியது. அதைத்தொடர்ந்து எண்ணூரில் தரமணல் தொழிற்சாலை மற்றும் அம்பத்தூரில் வெர்மிகுலைட் விரிவுபடுத்தும் தொழிற்சாலை உருவாகியது. தற்போது தமிழ்நாடு கனிம நிறுவனம் சிவகங்கையில் கிராபைட் சுத்திகரிப்பு ஆலை நிறுவும் புதிய பணியை மேற்கொண்டுள்ளது.

கிராபைட் மிக முக்கியத்துவம் வாய்ந்த தொழிற் கனிமங்களுள் ஒன்றாகும். உலோகவியல், வேதியியல் மற்றும் பொறியியல் தொழில்களில் இந்த கிராபைட் பரவலாகப் பயனாகிறது. உயர்தரமுள்ள கிராபைட் இயற்கையாகவே உலகில் இலங்கை, மடகாஸ்கர் போன்ற ஒரு சில இடங்களில் மட்டுமே கிடைக்கிறது. மற்ற நாடுகளில் தொழில்களுக்குப் பயனாகும் வகையில் கிராபைட் கனிமத்தின் தரம் சுத்திகரிப்பு முறையில் கூடுதலாக்கிப் பயன்படுத்தப்படுகிறது.


தமிழ்நாட்டில் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலுள்ள சிவகங்கைப் பகுதியில் 5.2 கிலோ மீட்டர் நீளத்தில் 900 ஏக்கர் பரப்பளவில் 14 விழுக்காடு நிலையான கரிச்சத்துள்ள கிராபைட் கனிமம் கிடைக்கிறது. இந்த சிவகங்கை கிராபைட் செதிள் செதிளாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பூமிக்குக் கீழே 15 மீட்டர் ஆழத்தில் கிடைக்கும் இந்த கிராபைட் கனிம இரும்பின் அளவு ஏறக்குறைய 2 இலட்சம் டன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**திட்ட செயல்முறை**

தமிழ் நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ் நாடு கனிம நிறுவனம் (TAMIN) சிவகங்கை கிராபைட் திட்டத்தை (1) கனிமத்தை வெட்டியெடுத்தல், (2) கிராபைட்டை சுத்திகரித்தல் மற்றும் (3) கிராபைட்டை அடிப்படையாகக் கொண்ட பல் வேறு பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களை அமைத்தல் என்ற மூன்று கட்டங்களைச் செயலாக்க முன்வந்துள்ளது. உள்நாட்டுத் தொழில் நுட்பத்தைக்கொண்டு 85 விழுக்காடு நிலையான கரிச்சத்துள்ள கிராபைட்டைத் தயாரிக்கத் துவக்கத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. பின்னர் சுத்திகரிக்கப்பட்டு உயர்தரமாக்கப்பட்ட கிராபைட்டிற்குள்ள மிகுந்த கிராக்கியை அறிய நேர்ந்ததும், முடிந்த அளவு கூடுதல் ஆதாயம் பெறும் நோக்குடன் வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தைக் கொண்டு 96 முதல் 99 விழுக்காடு வரை நிலையான கரிச்சத்துள்ள சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டைத் தயாரிக்கும் திட்டத்தைச் செயலாக்க முடிவடுக்கப்பட்டது.

**நில எடுப்பு**

சிவகங்கைப் பகுதியில் கிராபைட் கனிமம் கிடைக்கும் 900 ஏக்கர் நிலத்தை (472 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 428 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலம்) தன்வசம் நிலஎடுப்பு முறையில் தமிழ்நாடு கனிம நிறுவனம் மேற் கொண்டுள்ளது. இந்தப் பொதுநலப் பணிக்குத் தங்களுடைய நிலங்களை வழங்கிய குடும்



திருப்பூர் குமரனின் மனைவி மற்றும் குடும்பத்தினருடன் நேரு, ராஜாஜி.

பங்களைச் சார்ந்தோருக்கு குடும்பத்திற்கு ஒருவர் என்ற விகிதத்தில் இத்திட்டத்தில் பணி வழங்கி, பட்டா நிலங்கள் யாவும் மிகவும் இசைவான சூழ்நிலையில் நிலஎடுப்பு செய்யப்பட்டுள்ளன.

**சுரங்கப்பணி**

அரசு அனுமதிபெற்ற 1982ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் சுரங்கப் பணிகளைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் துவக்கியது. இன்று ஏறக்குறைய 13,000 டன் கிராபைட் கனிமம் வெட்டியெடுக்கப்பட்டு இருப்பிலுள்ளது. 1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழ்நாடு அரசு கனிமம் வெட்டியெடுப்பதற்காக முறையான உரிமம் வழங்கியது. சுரங்கப் பணிகளுடன் சுரங்க மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முழுவதுமாக மேம்படுத்தப்பட்டவுடன், சுரங்கத்திற்கு 500 மீட்டர் தொலைவில் அமையவிருக்கும் சுத்திகரிப்பாலையின் தேவைக்கு உகந்த வகையில் நாளொன்றுக்கு 200 டன் கிராபைட் கனிமம் சுரங்கத்திலிருந்து வெட்டியெடுக்கப்படவிருக்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் 96 முதல் 99 விழுக்காடு வரை நிலையான கரிச்சத்துள்ள கிராபைட்துகள்களை உற்பத்திசெய்ய உலகிலேயே மிக உன்னதமான தொழில்நுட்பத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது. இத்திட்டம் 100 விழுக்காடு ஏற்றுமதி நோக்குடையதாகும். இத்தொழிற்சாலை முதல்சுரங்கத்திலிருந்து சுமார் 500 மீட்டர் வடக்குத் திசையில் அமையவிருக்கிறது. இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 96 முதல் 99 விழுக்காடு வரை நிலையான கரிச்சத்துள்ள கிராபைட்டைத் தயாரிக்கும் திறனுடையதாக அமையும்; ஆண்டு ஒன்றிற்கு 9,240 டன் சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டைத் தயாரித்து ஏற்றுமதி செய்து ரூ. 840 லட்சம் அந்நியச் செலாவணி வருவாய் ஈட்ட விருக்கிறது. இத்திட்டம் சுமார் ரூ.2,745 லட்சம் முதலீட்டில் நிறைவேற்றப்படவுள்ளது.

**கிராபைட்டை அடிப்படையாகக் கொண்டுதயாரிக்கப்படும் பொருள்கள்**

கிராபைட்டின் தரத்திற்கேற்ப பல்வேறு பொருள்கள் தயாரிக்கும் தொழில்நுட்பம் கண்டறியப்பட்டு காப்புரிமை செய்யப்பட்டுள்ளது. சிவகங்கை கிராபைட்டைக்கொண்டு பல்வேறு உயர்தொழில்நுட்பமுள்ள பொருள்கள் தயாரிக்கலாம். அவற்றில் முக்கியமானவை கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

(1) இரும்பு சார்ந்த மற்றும் இரும்பு சாராத உலோகங்களை உருக்கப் பயன்படும் சிலிகான் கார்பைடு மூசைகள்.

(2) ஊது உலைகள் அமைக்கப் பயன்பெறும் மெக்கார்பன் மற்றும் அலுமினா கார்பன் செங்கற்கள்.

(3) உராய்வுக் குறைப்புச் சாதனங்கள்

(4) சாயங்கள்

(5) ஆகாயவிமானத்தின் உறுப்புகள் மற்றும் காற்றாலைகளின் துடுப்புகள்

(6) மின் அணுத் தொழிற்சாலை சாதனங்கள்

(7) விரிவாக்கப்பட்ட கிராபைட்

(8) மின் பாட்டரிகள்

(9) பென்சில்

**கிராமப்புற வேலைவாய்ப்பு**

இத்திட்டத்தின் முதல், இரண்டாவது கட்டப் பணிகளின் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் சுமார் 600 பேர் வேலைவாய்ப்பு பெறுவர். கிராபைட்டை அடிப்படையாகக் கொண்டு பொருள்கள் தயாரிக்கும் தொழில்கள் அமையும் மூன்றாம் கட்டப் பணியின் போது மேலும் சுமார் 1,000 பேர்கள் வேலை வாய்ப்பு பெறுவர்.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு
மற்றும் தங்க சரிகைகளைக்
கொண்டு நெசவுசெய்யப்பட்ட
புதுமையான
பட்டுச்சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய
கைத்தறி கூட்டுறவு விற்பனை
நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ்.
அதற்குச் சொந்தமான
560 விற்பனைக்கூடங்கள்
மூலமாக கோடிக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

தமிழரசு
Licence No. TN/MS(C)/PP-23

